ஒரு விஷயமாகவே உள்ளது. எனவே, சுவையான ஒரு தேடல் இலக்கியம்தான் மர்மப் புதினங்கள்! அதில் பெரிதாக மனம் நெகிழ என்ன இருக்கிறது என்பது, இந்த மன நெகிழ்வே இலக்கியம் என்று கருதுபவர்களின் கேள்வியாக உள்ளது.

மன நெகிழ்வோ, மன அதிர்வோ அதை உருவாக்கும் ஒரு எழுத்து எவ்வளவு வல்லமை உடையதாக இருக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். அடுத்து வாசித்து முடித்த பின் மனதுக்குள் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும். தாக்கம் என்பதும் கூட ஆளுக்கு ஆள் மாறுபடும். சரி, இதையெல்லாம் பேசி என்ன ஆகப் போகிறது? தங்களை மேதாவிகளாகக் கருதிக் கொண்டு இலக்கியம் குறித்து பிரஸ்தாபிக்கும் அவர்களைவிட வாசகன் எனக்குப் பெரியவன்.

அவர்களது உலகில் எனக்கான இடம் விரிவடைந்து கொண்டே போவதைப் பார்க்கிறேன். விரைவில் மர்மப் புதினங்களிலும் மனநெகிழ்ச்சி மேம்பாடு போன்றவைகளை அளிக்க இயலும் என்பதை அவர்களே ஒப்புக் கொள்வர்.

எனது புதினங்களை வாசிக்கும் போது அதை அவர்கள் கட்டாயம் உணருவர். நன்றிகள்.

அன்புடன்
**இந்திரா சௌந்தர்ராஜன்**

# நீலக்கல் மோதிரம்

## 1

'முதலில் அந்த நீலக்கல் மோதிரம் பற்றி எனக்கு ஏதுவும் தெரியாது. பரம்பரை பரம்பரையாக அது எங்கள் குடும்பத்திலேயே இருக்கிறது என்பது மட்டும் தெரியும். எனது தாத்தா திவான் பகதூர் ராஜரத்னம் பிள்ளைக்குப் பிரிட்டிஷ் அரசு பரிசாகக் கொடுத்த மோதிரம் என்பதும் தெரியும். ஆனால் ஒன்று...! அந்த மோதிரம் வந்த பிறகுதான் எங்கள் பரம்பரையே சுக்கு நூறாக நொறுங்கி – பங்காளிகள் மூலைக்கொருவராய்ப் பிரிந்து போனார்களாம். எனவே அதை என் தாத்தா கழட்டி வைத்துவிட்டாராம்!'

– சோமநாத பிள்ளை.

**சா**ருலதா!

இருபத்தி நான்கு வயது மெழுகுப் பொம்மை.

பிரம்மன் உலகம் பிறந்த நாளில் இருந்து கோடிக் கணக்கான பெண்களைப் படைத்து விட்டான்; படைத்த படியும் இருக்கிறான். ஆனால் சாருலதா போல ஒரு பெண்ணை அவனால் இனி படைக்க முடியுமா என்றால்

நிச்சயம் கேள்விக்குறிதான். இதை அவளது அழகிற்காக மட்டும் சொல்லவில்லை; அறிவிற்காகவும் சேர்த்தே சொல்லலாம்.

தொழிலதிபர் ராஜசேகரனுக்கு ஒரு லேடி செக்ரட்ரி தேவை. அதற்காக அவரது ஏராளமான நிறுவனங்களில் ஒன்று, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்திருந்தது. 'நல்ல ஆங்கில ஞானம்; கூடவே கம்ப்யூட்டரில் மிகச் சிறந்த பயிற்சி; இத்தோடு உலக நாடுகள் பற்றிய தெளிவான அறிவும் முக்கியம்' என்று அதில் இருந்ததுதான் ஆச்சரியம்.

முதலில் இந்த விளம்பரத்தைப் பார்த்தவர் சாருலதாவின் அப்பா விஸ்வநாதன்தான். பார்த்த உடனேயே அந்தப் பக்கத்தைக் கிழித்துப் போட்டுவிட்டார். ஏன் என்றால் அது சாருலதாவின் கண்களில் பட்டுத் தொலைந்தது... உடனேயே அவள் எழுதிப் போட்டுவிடுவாள். இன்டர்வியூவிற்கு அழைக்கப்பட்டால் அதில் எத்தனை பேர் கலந்து கொண்டாலும் அவர்களை ஓரம் கட்டி முன்னால் போய் நிற்க அவளால் முடியும்.

விஸ்வநாதனுக்கு மகளை — அதுவும் ஒரே மகளை வேலைக்கு அனுப்புவதில் இஷ்டம் இல்லை. ஒரு அப்பாவின் கடமை மகளுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைப்பதுதான். சாருலதாவிற்கும் இருபத்தி நான்கு வயதாகிறது. விஸ்வநாதனின் அக்காள் மகன் விவேக்கே அவள் கழுத்தில் தாலியைக் கட்டத் தயாராக இருக்கிறான்.

இத்தனைக்கும் விவேக் ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் ஜெனரல் மேனேஜராக இருக்கிறான். அவனது மாதச் சம்பளமே கிட்டத்தட்ட எண்பதினாயிரம் ரூபாய்!

இப்படி ஒரு வரன்... அதுவும் சொந்தத்தில் கிடைக்கும் போது கசக்குமா என்ன? ஆனால் சாருலதா 'எனக்குத் திருமணம் இப்போது வேண்டாம்' என்கிறாள். 'வாழ்வில் எதையாவது சாதிக்க வேண்டும். குறைந்தபட்சம் சுய சம்பாத்தியத்தில் ஒரு வீடாவது கட்டவேண்டும். பிறகுதான் திருமணம்' என்று லட்சியப் பெண்ணாக இருக்கிறாள்.



விஸ்வநாதனுக்கோ அவள் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு நல்ல குடும்பப் பெண்ணாகத் திகழ்ந்தால் போதும் என்று தோன்றுகிறது. இதே கருத்துதான் விஸ்வநாதனின் மனைவி திலகத்துக்கும்... எனவே அவர்கள் இருவரும் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கத் தயாராகிவிட்டனர். அதற்குத் தோதாக சில நாட்கள் முன்பு விஸ்வநாதனின் அக்காள் ராஜம்மாளும், விவேக்கும் வீட்டிற்கு வந்திருந்தனர். வாடகை வீடுதான்... அதைப் பார்த்த விவேக் பெரிதும் வருத்தப்பட்டான்.

"என்ன மாமா நீங்க... இப்படி ஒரு வாடகை வீட்ல இருந்துக்கிட்டு கஷ்டப்படறீங்களே. நம்ம தாத்தா பாட்டி எல்லாம் வெள்ளைக்காரன் காலத்துல ராஜா மாதிரி வாழ்ந்தவங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அவங்க வழி வந்த நீங்க ராஜா மாதிரி வேண்டாம்— ஒரு மந்திரி அளவுகூட வாழ முடியலையே..." என்று பெருமூச்சுவிட்டு அவரது இதயத்தைத் தொட்டான்.

மருமகனின் பேச்சு விஸ்வநாதனை உலுக்கிவிட்டது.

"பேசாம என்கூட வந்துடுங்க. எனக்கு என் கம்பெனி பெரிய பங்களாவே கொடுத்துருக்கு. அங்க நீங்க ராஜா மாதிரி இருக்கலாம்" என்று உரிமையோடு அழைத்தான். திலகமும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா என்று எண்ணி மாய்ந்து போனாள். பிறகுதான் பேச்சு சாருலதாவின் கல்யாணத்தில் போய் நின்றது.

"டேய் தம்பி... விவேக்குக்கும் எவ்வளவோ வரன்லாம் வருது. ஆனா இவன் அது எதையும் திரும்பிக்கூட பார்க்க

மாட்டேங்கறான். கட்டுனா உன் மகள் சாருவைத்தான் கட்டுவானாம். நானும் இவன் விருப்பத்துக்குத் தடையா இல்லை. நமக்குள்ளேயும் சொந்தம் விட்டுப் போகாது பார். என்ன சொல்றே?" என்று ராஜம்மாளும் கேட்டாள்.

பழம் நழுவிப் பாலில் விழுகிறேன் என்கிறது.

யாருக்காவது கசக்குமா என்ன?

"சரிக்கா... வர்ற ஒரு நல்ல நாள்ல நிச்சயதார்த்தம். அடுத்த முகூர்த்தத்துல கல்யாணம். ஆனா ஒண்ணு... உனக்கு என்கிட்ட எவ்வளவு இருக்குன்னு நல்லாவே தெரியும். ஒரு பத்து பதினைஞ்சு பவுன் நகை போட்டு சிம்பிளாதான் என்னால கல்யாணம் செய்து தர முடியும்" என்றார்.

"டேய் அவ இனி என் மருமக... கல்யாணச் செலவு அவ்வளவும் என்னோடது. நீ சும்மா சொல்றத கேட்டு நடந்துக்கோ, அது போதும்" என்று ராஜம்மாள் சொல்லவும் விஸ்வநாதன் அழுதுவிட்டார்.

அப்போது சாருலதா வீட்டில் இல்லை.

"எங்கடா என் மருமக?"

"ஏதோ கம்ப்யூட்டர் பரீட்சைன்னு வெளியே போனா..."

"இன்னும் என்ன படிப்பு—பரீட்சை.. என் பையனுக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போட்டு வீட்டைப் பார்த்து கிட்டா போதும். ஆமா எப்ப வருவா?"

"தெரியலியே..."

"ஒரு வயசுப் பொண்ணை இப்படியா வளர்ப்பே?"

"அக்கா... சாரு கொஞ்சம் ஃப்ரீ டைப். ஆனா நெருப்பு மாதிரி."



"அது சரி.. உன் பொண்ணை விட்டுக் கொடுப்பியா நீ? நிச்சயதார்த்தம் போதாவது அடக்க ஒடுக்கமா வீட்டோடு இருந்தா சரி..." — என்று சற்றுக் கறாராகப் பேசிவிட்டு ராஜம்மாள் விவேக்குடன் கிளம்பிப் போனாள்.

இதனால் விஸ்வநாதன் சாருவின் விஷயமாகவே கனவு கண்டபடி இருக்கிறார். எங்கே மண்டபம் பிடிக்கலாம், எந்த சமையல்காரனை புக் பண்ணலாம், நாதஸ்வரக்காரர் யார் — இதெல்லாம்தான் இப்போது அவர் கவலை. இந்த நேரத்தில் சாருவுக்குப் பிடித்த மாதிரி விஷயங்கள் பத்திரிகை விளம்பரமாக வந்தால் பயமாகத்தானே இருக்கும்?

அந்த விளம்பரம் வந்த பக்கத்தைக் கிழித்துக் கண்ணில் படாதபடி குப்பைக் கூடையில் போட்டு அதை மூடும்போது—விதி வலியது என்பது போல டெலிபோன் அலறியது. பக்கத்து அறையில் படு இன்ட்ரஸ்ட்டாக ஒரு ஜென்ரல் நாலட்ஜ் புக் படித்தபடி இருந்த சாருலதாவே வந்து ரிசீவரை எடுத்தாள்.

மறுபக்கம் அவளது தோழி ஜெயந்தி. "சொல்லு ஜெயந்தி என்ன விஷயம்?"

"ஏய், உனக்கு ஒரு நல்ல சான்ஸ். பிசினஸ் மேக்னட் ராஜரத்னம் சாரைத் தெரியும்தானே?"

"யாரு நம்ம ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் தலைவர் ராஜரத்னமா?"

"அவரேதான்.. நம்ம காலேஜ் பட்டமளிப்பு விழாவுல கலந்துகிட்டு எல்லாருக்கும் பட்டம் கொடுத்து கௌரவிச்சாரே..."

"ஆங்... அவருக்கு என்ன...?"

"அவருக்கு ஒண்ணுமில்ல... அவருக்கு ஒரு பர்சனல் செக்ரட்டரி வேணுமாம். பேப்பர்லகூட விளம்பரம்

வந்துருக்காம். மன்த்லி சேலரி ஸ்டார்ட்டிங்கே கிட்டத் தட்ட இருபத்தி அஞ்சாயிரம் ரூபாய்."

"வாவ்!"

"வாய பிளக்காத... நீ ட்ரை பண்ணா நிச்சயம் உனக்குக் கிடைச்சிடும். ஏன்னா அன்னிக்கு ஃபங்ஷன்ல நீதான் ஸ்டேஜை ஆர்கனைஸ் பண்ணினே. அவர் உன்னையே பார்த்துகிட்டு இருந்தார். போகும்போது ஸ்பெஷலா உன்கிட்டயும் சொல்லிவிட்டுப் போனார். ஞாபகம் இருக்குல்ல..."

"அதை எப்படி மறக்க முடியும்? பிரின்சிபாலே அதைப் பார்த்து பொறாமைப்பட்டாரே. ஆமா இப்ப அதெல்லாம் அந்த மேக்னட்டுக்கு ஞாபகம் இருக்குமா?"

"ஞாபகம் இருக்கறதாலதான் அவர் மேக்னட். இல்லேன்னா அவர் மேட் மேக்ஸ்தான். போய் ட்ரை பண்ணிப் பார். நீயும்தான் வேலை வேலைன்னு அலையறியே..."

"எங்கடி... நான் ஆசைப்பட்டாலும் இங்க என் அப்பா அம்மா என்னை—கல்யாணம் பண்ணித் தள்ளி விட்றதுலயே குறியா இருக்காங்க. அடுத்த வாரம் நிச்சயதார்த்தம்..."

"அட்றா சக்கைன்னானாம்... மாப்ளை யார்?"

"வேற யார்... நான் பார்த்துப் பார்த்து சலிச்சுப் போன என் குண்டு அத்தையோட மகன் விவேக்தான்..."

"அத்தை மகனேவா...? சரி என்ன பண்ணப்போறே?"

"இன்னிக்கு அவனைப் பார்க்கப் போறேன். இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம், ஒரு நாலைஞ்சு வருஷம் கழிச்சு பண்ணிக்கலாம்னும் சொல்லப் போறேன்.



அதுக்குள்ள என் அப்பா அம்மாவுக்கு நானே சம்பாதிச்சு ஒரு ஃப்ளாட் வாங்கிக் கொடுத்துடுவேன். அப்புறம் பேங்க்ல அவங்க பேர்ல கொஞ்சம் பணத்தை டெபாசிட் பண்ணிட்டா அப்புறம் எனக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்."

"இதுக்கு அந்த விவேக் சம்மதிக்கணுமே..."

"சம்மதிச்சாதான் கல்யாணம். இல்லாட்டி 'சாரிடா விவேக்! நீ வேற ஆளைப் பார்த்துக்கோ'ன்னு ஓபனா சொல்லிடுவேன்..."

— தொலைபேசி வழியாக சாருலதா ஜெயந்தியிடம் சொல்வது வீடு முழுக்கக் கேட்டது. குறிப்பாக, விஸ்வ நாதன் அவளது அந்தத் திடமான பேச்சைக் கேட்டு கொஞ்சம் ஸ்தம்பிக்கவும் செய்தார். போனை வைத்துவிட்டு அவள் வரவும், "ஏம்மா, உன் கல்யாணம் முக்கியமா... இல்லை எங்களுக்கு ஃப்ளாட் முக்கியமா?" என்றுதான் ஆரம்பித்தார்.

"ஏம்ப்பா... கடைசி வரை இப்படி வாடகை வீட்லயே இருந்துட தீர்மானிச்சிட்டீங்களா?"

"அட என்னம்மா நீ... அதான் மருமகப் பிள்ளை எங்களையும் தங்களோட வந்து இருந்துக்கோங்கன்னு சொல்லிட்டார்ல?"

"அவர் சொல்லலாம்... ஆனா அது எவ்வளவு தூரம் சரியா வரும்னு நீங்க யோசிக்க வேண்டாமா?"

"இதுல யோசிக்க என்னம்மா இருக்கு... மகளோடயும் மருமகனோடயும் பெண்ணைப் பெத்தவங்க இருக்கக் கூடாதா?"

"தாராளமா இருக்கலாம். அதுல தப்பே இல்லை.ஆனா அது எவ்வளவு நாளைக்கு தாங்கும்னு யோசிக்கணும்.

அதுக்கு முந்தி விவேக்கிட்ட எனக்கு சில முரண்பாடுகள் இருக்கு. அதை நான் பேசித் தீர்த்துக்கணும். அதுக்குப் பிறகுதான் கல்யாணம். நான் குறிப்பிட்ட மாதிரி நான் கொஞ்சம் சம்பாதிச்சு என் கால்ல நின்ன பிறகுதான் கல்யாணம். இதுக்கு விவேக் சம்மதிக்கணும். அவசரப் பட்டா ஐ ஆம் சாரிப்பா..."

— சாருலதா தீர்மானமாகப் பேசிவிட்டு நகர்ந்து விட்டாள். கேட்டுக் கொண்டிருந்த திலகம் அடுப்படியில் இருந்து விஸ்வநாதனை நோக்கி வந்தாள்.

"ஏங்க... இப்ப என்ன பண்ணப் போறீங்க?"

"என்ன பண்ண... பெண்ணப் பெத்துருந்தா அது நம்ம பேச்சைக் கேக்கும். நாம ஒரு அல்லி ராணியில்ல பெத்துருக்கோம்."

"இருந்தாலும் அவ சொல்றதுலயும் நியாயம் இருக்குல்ல...?"

"என்ன திலகம், நீயும் கட்சி மாறுறே..."

"இல்ல... உங்க அக்கா குடும்பத்தோட போய் கடைசி வரை நானும் நீங்களும் மானத்தோட இருக்க முடியுமா?"

"என்ன திலகம்... உன் நாத்தனார்மேல உனக்கு ஆரம்ப காலத்துல இருந்த வருத்தம் இன்னும் போகலையா?"

"அது எப்படி போகும்... உங்க அக்கா ஒரு பந்தா பேர்வழி. பையன் ஆசைக்காக இறங்கி வர்றதா சொல்றாங்க. எனக்கு என்னவோ..." — திலகம் சொல்லி முடிக்க முடியாமல் எச்சில் விழுங்கினாள்.

"என்ன திலகம்... ஒவ்வொரு குண்டா போட்றே. இதுக்கு சாருலதா தேவலை போல இருக்கே..."

"ஒண்ணு மட்டும் சொல்லிக்கறேங்க. நாம வாழ்ந்து கெட்டவங்க. சாரு திரும்ப மேல வரணும்னு ஆசைப்பட்றா.



அவ பெண்ணா பொறந்துட்டாலும் நாலு ஆம்பளைப் பசங்களுக்கு சமம். அவ விருப்பப்படியே போய்டுவோம்..."

"நீ போய் உன் வேலையைப் பார். விவேக்கை விட ஒரு நல்ல வரன் நமக்குக் கிடைக்காது. அவன் சம்பளம் எவ்வளவு தெரியும்ல?"

"சரி இனி உங்க இஷ்டம்..." — திலகம் விலகினாள். விஸ்வநாதன் ஓடிச்சென்று தொலைபேசியைக் கையில் எடுத்தார். மறுமுனையில் விவேக்கைப் பிடித்தார்.

"விவேக்... மாமா பேசறேம்ப்பா..."

"ஹாய் மாமா... எப்படி இருக்கீங்க?"

"நான் நல்ல இருக்கறதும் இல்லாததும் உன் கைலதாம்ப்பா..."

"என்ன மாமா விஷயம்? சொல்லுங்க..."

"இப்ப சாரு உன்னைப் பார்த்துப் பேச வந்துகிட்டி ருக்கா. அவளுக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் இல்லையாம். அவ பாட்டுக்கு இஷ்டத்துக்கும் என்னென்னவோ சொல்றா. நீ அவ பேச்சைக் கேட்டு வருத்தப்பட்டு தப்பா எந்த முடிவும் எடுத்துடக்கூடாது. அதான் போன் பண்ணினேன்."

"சாருவுக்கு இப்ப என்னைக் கட்டிக்கறதுல என்ன மாமா பிரச்சனை...?"

"அவ எப்பவுமே ஊருக்கெல்லாம் ஒரு வழின்னா தனக்கு தனி வழின்னு போறவ. வேலைக்குப் போய் அவ கையால நிறைய சம்பாதிச்சு ஒரு ஃபிளாட் வாங்கின பிறகுதான் கல்யாணமாம். உன்னைக் கட்டிக்கறதுல அவளுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனா சில வருஷம் செல்லட்டும்ங்கறா..."

"என்ன மாமா இது பைத்தியக்காரத்தனம். இந்தக் காலத்துல எல்லா பசங்களும் வேலைக்குப் போற

பொண்ணைத்தான் கேப்பாங்க... நான் வீட்டைக் கவனிக்க ஆள் வேணும்னு ஆசைப்பட்டுக் கல்யாணச் செலவுகூட நானே பண்ணிக்கிறேன்னு சொல்லியி ருக்கேன். நீங்க என்ன இப்படி சொல்றீங்க...?"

"நான் சொல்லலைப்பா... என் மக சொல்றா. முடிஞ்சா நீயே அவளை கன்வின்ஸ் பண்ணு..."

"சரி மாமா... நீங்க என்கிட்ட விட்றுங்க... நான் பார்த்துக்கறேன்."

மறுபக்கம் விவேக் முடித்துக் கொண்டபின் விஸ்வ நாதனும் போனை வைத்தார். லேசாக வியர்த்திருந்தது. துடைத்துக் கொண்டார். கொஞ்சம் கலக்கமாகவும், குழப்பமாகவும் இருந்தது. எதிரே சுவரில் அவரது அப்பா சோமநாதப் பிள்ளை, பக்கத்தில் தாத்தா வடுகநாதப் பிள்ளை, அதற்கும் பக்கத்தில் கொள்ளுத்தாத்தா ராஜ ரத்னம் பிள்ளை என்று வரிசையாகத் தெரிந்தார்கள். அதில் தாத்தா ராஜரத்னம் பிள்ளை கையைக் கட்டிக் கொண்டு போஸ் கொடுத்திருந்தார். அவரது கைவிரலில் அந்த நீலக்கல் மோதிரம்!

அது கண்ணில்பட்ட நொடி 'இந்த மோதிரம் வந்ததில் இருந்தே குடும்பம் விளங்காமல் போய்விட்டது. குறிப்பாக பிள்ளை குடும்பத்தில் ஆண்கள் யாரும் வெற்றிகரமாக வாழவே முடியவில்லை' என்று குடும்பத்துக்குள் நிலவும் கருத்து ஞாபகத்திற்கு வந்தது.

இன்று தன் வரையில் அது உண்மையாக இருப்பதை ஒரு வினாடி எண்ணிப் பார்த்தவர் இன்னமும் அந்த மோதிரம் வீட்டுப் பரணில்தான் ஒரு சாணி உருண்டைக் குள் வைத்து அதையும் ஒரு சம்படத்துக்குள் போட்டு நன்றாக மூடி வைத்துவிட்டது அவர் நினைவுக்கு வந்தது.



'தப்பித்தவறி அதை வெளியே எடுத்துடாத' என்று விஸ்வநாதனின் அம்மா சொன்னதும் ஞாபகம் வந்தது. இப்போது அவருக்குள் புதிதாக ஒரு கேள்வி. 'இந்த மோதிரம் வீட்டிலேயே இருப்பதால்தான் இப்படி ஒரு விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லையோ?'

## 2

**'அந்த மோதிரத்தைக் கழற்றி வைப்பதற்கு யாருக்காவது கொடுக்கலாம். இல்லாவிட்டால் கோயில் உண்டியலில் போட்டு விடலாம் என்று முடிவு செய்தபோது என் தாத்தா விரலில் குறிப்பாக மோதிர விரலில் நகச் சுத்தி வந்துவிட்டது. இதனால் மோதிரத்தை அசைக்கக் கூட முடியவில்லை. வைத்தியரும் நகச் சுத்தியின் சீழும் விஷமும் உடல் முழுக்க பரவிவிடாதபடி இந்த மோதிரம் தடுத்துக் கொண்டிருக்கிறது; எனவே இதனைக் கழற்ற வேண்டாம்' என்று கூறவே மோதிரம் உண்டியலுக்குப் போவது தள்ளிப் போனது!'**

**– சோமநாத பிள்ளை.**

விஸ்வநாதன் நேராக திலகத்தை நோக்கித்தான் சென்றார். இந்த ஹைடெக் யுகத்திலும் திலகம் இட்லி மாவை கல் உரலில் ஆட்டிக் கொண்டிருந்தாள். கணவன் வரவும், ஒரு பார்வை பார்த்துவிட்டு மாவைத் தள்ளத் தொடங்கினாள்.

"திலகம்..."

"தெரியும் நீங்க என்கிட்டதான் வருவீங்கன்னு..."

"என்ன திலகம் நீ... ஆமா நமக்கு மட்டும் ஏன் திலகம் நினைக்கற எதுவும் நடக்கவேமாட்டேங்குது...?"

"நடக்கறதை நாம எப்பவுமே நினைக்கமாட்டோங்கிறோமோ என்னவோ..." — திலகம் மாவோடு கூடி பதிலையும் பளிச்சென்று தள்ளிவிட்டாள்.

"ஆமா... அக்கா மவனுக்கு, பெத்த மகளை கொடுக்க நினைக்கறது ஒரு நடக்க முடியாத விஷயம் பாரு..."

"நடக்கட்டும்... அப்புறம் பேசலாம் — அது நடக்கற விஷயமா நடக்காத விஷயமான்னு..."

"நீயும் ஏன் இப்படி பேசறே...? உன் புத்திதான் உன் மகளுக்கு... எதுலயும் எகணைக்கு மொகணை."

"அது நீங்க. எங்க வரைல எதுலயும் மான ரோஷமும் மரியாதையும் தான் முக்கியம்."

"சரி தாயி... அப்படியே இருக்கட்டும். இப்ப நான் என்ன சொல்ல வந்தேன்னா... ஆங்... அதுக்குள்ள மறந்து போச்சே..."

"இந்த மாதிரி நேரத்துல நீங்க என்ன சொல்வீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்..."

"அப்படியா... எங்க சொல்லு பார்ப்போம்."

"எல்லா இடைஞ்சலுக்கும் காரணம் அந்த நீலக்கல் மோதிரமான்னு கேக்கப் போறீங்க... சரிதானே?"

"பரவால்ல திலகம்... கரெக்டா சொல்லிட்டியே."

"போங்க. போய் வேலையப் பாருங்க. இன்னிக்குப் பேப்பர்ல பாதிதான் படிச்சிருக்கீங்க. மீதிப் பக்கம் பாக்கி இருக்கு. போங்க."

"அது எனக்குத் தெரியும். அந்த மோதிரத்தைத் தூக்கி எறிஞ்சுட்டா...?"

"இப்படி ஒரு தடவை கேட்டு தூக்கி போடப் போய் கைல அடிபட்டது மறந்து போச்சா...?"



"அது தற்செயலா இருக்கலாம்ல...?"

"ஒரு தடவை நடந்தாதான் தற்செயல்... ஆனா அதை உங்கப்பா, தாத்தான்னு ஒரு கூட்டமே ஒழிச்சுக் கட்டப் பார்த்தும் அது உங்களவிட்டுப் போகலை. கடைசியாதான் சாணி உருண்டைல வெச்சு ஒரு பித்தளை பாத்திரத்துல போட்டுத் தூக்கி ஒரு மூலைல வெச்சாச்சுல்ல... திரும்ப திரும்ப அதைப் பத்தி என்ன பேச்சு?"

"எனக்கென்னவோ அது இந்த வீட்டுல இருக்கற வரை நான் நினைக்கற மாதிரி எதுவும் நடக்காதுன்னு தோணுது."

"நான் அப்படி நினைக்கல. அதுபாட்டும் கிடக்குது. அது ஒரு கல்லு; அவ்வளவுதான். போங்க, போய் வேலைய பாருங்க..."

"ஆமாம். நான் போய் கோடி ரூபாய்க்கு ஏத்துமதி பண்ண வேண்டியிருக்கு பார்... பைத்தியக்காரி..."

"பள்ளிக்கூட வாத்யாரா இருந்து ரிடையர் ஆகிட்டா சும்மா உக்காந்து தரையைத் தேய்க்கணும்னு ஒண்ணும் கட்டாயம் இல்லை. ஏழைப் பிள்ளைங்களுக்கு ட்யூஷன் எடுக்கலாம். அவங்க கொடுக்கறத வாங்கிக்கலாம். அதுல ஒண்ணும் தப்பு இல்ல."

"ஆரம்பிச்சுட்டியா... இனி நான் உன்கிட்ட எதையும் பேசல தாயி... எதையும் பேசல... வரேன்."

விஸ்வநாதன் சுவரில் பட்ட பந்துபோல திரும்பி நடந்தார்.

டை கட்டி டச் செய்து கொண்டு படு ஸ்மார்ட்டாக இருந்தான் விவேக். சட்டை முழுக்க சாண்டல் வுட் ஸ்ப்ரே வேறு... அடிக்கடி இன்டர்காமில் ரிசப்ஷனிஸ்ட் மேரியிடம் "சாரு வந்துட்டாளா?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தான்.

ஒரு கட்டத்தில் அவள் எழுந்து அவன் அறைக்கு வந்துவிட்டாள்.

"என்ன மேரி... எங்க வந்தே?"

"அது யார் சாரு...? எதுக்கு இத்தனை தடவை அவங்களப் பத்தி கேட்டீங்க...?"

"அதை நான் உன்கிட்ட எதுக்குச் சொல்லணும்? இது என்ன கேள்வி... நான் இந்த ஆபீஸ் ஜி.எம்... ஞாபகம் வெச்சுக்கோ..."

"அது என் கூட கொஞ்சும்போது மட்டும் வசதியா உங்களுக்கு மறந்து போகுமா?"

"மேரி... நீ அதிகமா பேசறே... நான் ஜோவியல் டைப். உன்கிட்ட ஃப்ரெண்ட்லியா பழகினதை அட்வான்டேஜா எடுத்துகிட்டு இப்படி எல்லாம் பேசாதே... போ... போய் சீட்ல உட்கார்ந்து வேலையைப் பார்."

"முடியாது... நான் ஒண்ணும் அட்வான்டேஜ் எடுத்துக்கல. நீங்கதான் என்கிட்ட எடுத்துகிட்டீங்க. உங்க பதவிய பயன்படுத்தி என் பெண்மைகிட்ட விளையாடினீங்க..."

"மெள்ளப் பேசு... இந்தக் காலத்துல உன் வயசுலயும் என் வயசுலயும் இது ரொம்ப சகஜம்... ஃபாரீன் கண்ட்ரீஸ்ல டேட்டிங் போற மாதிரி..."

"அப்ப நான் இனி உங்களுக்குத் தேவை இல்லை. அப்படித்தானே?"

"ஏன் அப்படி நினைக்கறே...? ஒரு மனுஷன் ஒரே ஹோட்டல்லயா சாப்பிடுவான்? ஒவ்வொரு ஹோட்டல்ல ஒவ்வொரு விஷயம் ருசியா இருக்கும்..."

"ச்சீ... இது என்ன பேச்சு? ஒரு பெரிய பொறுப்புல இருந்துகிட்டு இவ்வளவு சீப்பா பேசறீங்களே. நீங்க இவ்வளவு மோசமானவரா இருப்பீங்கன்னு நான் நினைக்கல."



"மேரி... நீ ரொம்பப் பேசினா உன் வேலை போயிடும். நீ இன்னும் கன்ஃபர்ம் ஆகலை. வாய மூடிகிட்டுப் போனா உனக்கு ப்ரமோஷனோட சேலரி ரிவிஷனும் கிடைக்கும்..."

— அவன் இறுதியாகப் பயன்படுத்திய அஸ்திரம் வேலை செய்தது. இமைகளில் தேங்கிவிட்ட கண்ணீரைச் சுண்டிவிட்டுக் கொண்டே "தப்பு என்மேலயும்தான்..." என்றபடியே அறையை விட்டு வெளியேறினாள்.

சில நொடிகள் அவள் வந்து போனதால் கொஞ்சம் கசகசவென்று இருந்தது விவேக்குக்கு... அப்புறம் சரியாகி விட்டது. ஏ.சி. ரிமோட்டைத் தேடி எடுத்துக் கூட்டிக் கொண்டான். மீண்டும் ட்ராயரைத் திறந்து ஸ்ப்ரே செய்து கொண்டான். அப்படி டிராயரைத் திறந்தபோது அந்தக் கவரும் கண்ணில் பட்டது.

சில விநாடிகள் அதையே உற்றுப் பார்த்தவன் முகம் படுவேகமாக மாறியது. படாரென்று ட்ராயரை மூடியவன் கை விரல்களைச் சொடுக்கி வேகமாக உதறிக் கொள்ளத் தொடங்கினான்.

இடையிட்டது இன்டர்காம்.

"யெஸ்..."

"அந்த சாருலதா வந்துருக்காங்க..."

"ஓ... அனுப்பிவை..."

"பொண்ணு அழகா லட்சணமா இருக்கா. இவகிட்டயாவது உண்மையா பழகுங்க..."

"மேரீ...ஈ...ஈ..."

"சுத்தாதீங்க... நான் உங்க காதுல விழற மாதிரி மட்டும்தான் பேசியிருக்கேன்." -

இன்டர்காம் ரிசீவரை வைத்தவன் நிமிர்ந்தான். எதிரில் கதவைத் திறந்து கொண்டு சாருலதா.

"ஹாய் அத்தான்..."

"வா சாரு... வெல்கம்."

— அவளும் வந்து அமர்ந்தாள். அவனை, அந்த அறையை — வால் பேப்பர்களை தன் மான்விழியை உருட்டி ஒரு பார்வை பார்த்து முடித்தாள்.

"என்ன சாரு... எப்படி இருக்கு என் ரூம்?"

"நல்லாருக்கு. ஆமா இந்த போஸ்டிங்கை இன்டர்வியூல பாஸ் பண்ணி வாங்கினீங்களா, இல்லை. இதுக்கும் ஏதாவது ஒரு விலை கொடுத்தீங்களா?"

— அவள் கேள்வி அவனை ஒரு குத்து குத்தியது.

"என்ன சாரு... ஜி.எம். போஸ்ட்டுங்கறது அனுபவம், அறிவுன்னு இரண்டுக்கு மட்டுமே சொந்தமான ஒண்ணு. இதை எல்லாம் விலைக்கு வாங்க முடியாது..."

"அப்ப சரி... அப்புறம் நான் சில விஷயமா பேசிட்டுப் போக வந்தேன்..."

"தெரியும்... உனக்கு இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லை. ஒரு நாலஞ்சு வருஷம் போகட்டும்னு நினைக்கறே. சரிதானே?"

"என்ன... என் அப்பா போன் பண்ணி சொல்லிட்டாரா?"

"பின்ன... என் மாமாவாச்சே. சும்மா இருப்பாரா?"

"சரி உங்க முடிவு என்ன?"

"வித் ப்ளெஷர். நீ உன் விருப்பப்படியே செயல்படலாம். உன்னோட விருப்பம் எனக்குப் பிடிச்சிருக்கு



அம்மாதான் எனக்கு ஒரு கால்கட்டு போடணும் போடணும்னு துடிச்சாங்க."

— சாருலதா விவேக்கின் பதிலால் வெகுவாக ஆச்சரியப்பட்டாள். சர்வ சாதாரணமாக அவன் பதில் சொல்வதில் ஒரு நம்ப முடியாத தன்மை அவள் முகத்தில் பீறிட்டது.

"என்ன சாரு... நான் இப்படி உன் வழிக்கு வருவேன்னு எதிர்பார்க்கலையா?" அவனும் கேட்டான்.

"ஆமாம் விவேக்... உங்களை முதல்ல நான் இப்படி ஒரு பொசிஷன்லயே நினைச்சு பார்க்கல... ஏன்னா காலேஜ்ல நீங்க ஒரு படு ஆவரேஜ் ஸ்டூடண்ட். எப்பவும் கலாட்டா பண்ணிகிட்டு ஊர் சுத்தற டைப்... இப்பவும் அப்படித்தான் இருப்பீங்கன்னு நினைச்சு வந்தேன்... ஆனா உங்ககிட்ட ஏராளமான மாறுதல்."

— அதைக் கேட்டு அவன் சிரித்தான். மிக அடக்கமான ஒரு அங்கீகாரச் சிரிப்பு.

"எனிவே... ரொம்ப சந்தோஷமா இருக்கு. என் விருப்பத்துக்கு மதிப்பு கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி. ஆமா உங்கம்மாவை எப்படி சமாளிப்பீங்க...?"

"ஏன் உன் அத்தைன்னு சொல்லமாட்டியா?"

"முதல்ல உங்களுக்கு அம்மா; அப்புறம்தானே எனக்கு அத்தை."

"டோண்ட் ஒர்ரி... நான் பாத்துக்கறேன். சமாளிச்சுக்கறேன். நீ போய் உன் லட்சியப் பயணத்தைத் தொடங்கலாம். உனக்கு வேலை தரணும்னா நான் இங்க என் கம்பெனில கூட போட்டுத் தரேன்..."

"இல்ல... நான் தூர இருக்கறதுதான் நல்லது. எனிவே தேங்க்யூ..."

"நமக்குள்ள என்ன சாரு. அடிக்கடி வந்துட்டு போ.."

"ஷ்யூர்!"

அவள் எழுந்து அவனை நோக்கி சந்தோஷமாக கையை நீட்டிக் குலுக்கிவிட்டு திரும்பி நடந்தாள். அவனும் ஒரு பெருமூச்சுடன் அவள் போவதையே பார்த்தான். மனதுக்குள் 'விட்டுப் பிடிக்கணும் வேறு வழி இல்லை...' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

# 3

**'என் தாத்தாவின் நகச்சுத்தி சரியாகி விட்டது. மோதிரத்தையும் கழட்டலாம், உண்டியலில் போட்டு விடலாம் என்று முடிவு செய்து அருகிலுள்ள முருகன் கோயிலுக்குச் சென்று அந்த மோதிரத்தைக் கழட்டி உண்டியலிலும் போட்டு விட்டார். ஆனாலும் உண்டியலில் விழுந்த அந்த மோதிரம் திரும்பவும் என் தாத்தாவிடமே வந்து சேர்ந்தது தான் வியப்பு!**

**– சோமநாத பிள்ளை**

இன்டர்வியூவிற்கு ஏராளமானவர் வந்திருந்தனர். இன்டர்வியூ நடைபெறும் ஹாலே நிரம்பி வழிந்தது. சில பெண்கள் படு மாடர்ன் டிரெஸ்ஸில் வந்திருந்தனர். அவர்களின் அங்கங்களின் உள் அளவுகளை கண்ணாலேயே அளக்க முடிந்தது. ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு இன்டர்வியூ நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. சராசரியாக ஒரு பெண்ணுக்கு அரைமணி நேரம் ஆனது. சாருலதா சிம்பிளாக காட்டன் சாரியில் வந்திருந்தாள். நெற்றியில் அவளது பக்திக்குரிய அரசமரத்தடி பிள்ளையாரின் விபூதியும், அனுமார் கோயில் செந்தூரமும் ஒரு கீற்று போல ஒட்டிக் கொண்டிருந்தன. ஒரு பெரிய தொழிலதிபருக்கு உதவியாளராக இருக்கவேண்டும் என்றால் என்னவெல்லாம் வேண்டும் என்பது ஒரு ஆராய்ச்சிக்குரிய விஷயம் போலவே கருதப்பட்டது. அந்தத் தொழிலதிபரின் மனம் நோகக்கூடாது. அவர் நினைப்பதை முகத்தை வைத்துப் புரிந்து கொண்டுவிட வேண்டும். அவரது ரகசியங்களை உயிரைவிட மேலானதாகக் கருதி காக்க வேண்டும். எட்டு மணி நேரம் என்று வரையறை செய்து கொண்டு வேலை பார்க்க முடியாது. பல பெரிய மனிதர்கள், வி.ஐ.பி.க்கள் அவரைச் சந்திக்க வரலாம். அவர்களை வரவேற்று உபசரித்து தொழிலதிபரோடு நல்லவிதமாகச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



அவருக்கு வருகின்ற எல்லா கடிதங்களுக்கும் அதற்கு ஏற்ற ஒரு பதிலைப் போட்டே தீரவேண்டும். நன்கொடை கேட்டு வரும் பொது நிறுவனங்கள், அரசியல்வாதிகளிடம் இருந்து அவரைக் கவசம் போல காப்பாற்ற வேண்டும்... இப்படி பல விஷயங்கள் அங்கே அலசப்பட்டுக் கொண்டிருந்தன. சாருலதா அதை எல்லாம் கடந்து யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் முறையும் வந்தது.

இன்டர்வியூ ஆபிசர் புதியவர். அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவளது நெற்றி விபூதி, செந்தூரம் அவருக்கு ஆச்சரியம் அளித்தது.

"டெய்லி கோயிலுக்குப் போற பழக்கமுண்டா?"

"ஆமாம் சார். பிள்ளையார் கோயிலுக்கும், அனுமார் கோயிலுக்கும் போவேன்."

"அப்ப மத்த சாமிங்கல்லாம்...?"

"என் வீட்டுக்கு ரொம்ப தூரத்துல இருக்காங்கன்னு அர்த்தம்."

"அதுசரி... வேலைக்கு வந்துட்டா கோயிலுக்குப் போக முடியுமா?"

"வேலை பார்க்கற இடமும் ஒரு கோயில்னு நான் நினைக்கறதால எனக்கு இழப்பு வராது சார்..."

"ஐ.சி... வேலை பாக்கற இடம் கோயில்னா எம்.டி. தான் கடவுளா?"

"அப்படி நினைக்கறதுல தப்பில்லையே...?"

"இப்படி எல்லாம் சொன்னாதான் வேலை கிடைக்கும்னு யாராவது சொல்லி அனுப்பினாங்களா?"

"சாரி சாரி... நான் சுய புத்தி உள்ளவ."

"அப்படியா... அப்ப இப்ப இருக்கற காலம் எப்படிப் பட்டதுன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே..."

"வாட் டு யூ மீன்?"

"இல்ல.. இப்ப இருக்கற ஹைடெக் யுகத்தைச் சொன்னேன். வேலை கிடைக்கறதும் இப்ப குதிரைக் கொம்பு... இல்லையா?"

"அதனால...?"

"இந்த வேலை உங்களுக்குக் கிடைக்கணும்னா நீங்க மேலும் சில விஷயங்களுக்கு ஒத்துழைக்கணுமே. முடியுமா?"

"அது என்னன்னு சொல்லுங்க முதல்ல..."

"முதல்ல இப்படி புடவை கட்டிக்கிட்டு வர்றது எம்.டி.க்கு பிடிக்காது..."

"அப்புறம்?"

"அவருக்கு உங்களைப் போல இளம் பெண்கள்னா ஒரு கிரேஸ்... ஃபாரின் போகும்போது கூடவே கூட்டிக் கிட்டு போய் அவரோட ஒரே ரூம்ல நீங்க தங்கணும்னு எதிர்பார்ப்பார்..."

"எனக்கு ஆட்சேபணையில்லை. நான் என் அப்பா வோட தங்க மாட்டேனா என்ன?"

"அதான் இல்ல... இது அப்பா மாதிரி உறவு இல்ல. அப்பப்பா ரகம்..."



"அப்ப இந்த இன்டர்வியூ அந்த மாதிரிப் பொண்ணு யார்னு தேர்வு செய்யவா?"

"நீங்க கேக்கற தொனியைப் பார்த்தா உங்களுக்கு இதுல உடன்பாடு இல்ல. அப்படித்தானே?"

"இது என்ன பேத்தல்...?"

"அநாவசியமா டென்ஷன் ஆகாதீங்க மேடம். நீங்க கோபப்பட்ட இந்த விஷயத்துக்கு சம்மதிச்ச பெண்கள் லிஸ்ட்டை எடுத்துப் போடட்டுமா?"

ஆபிசர் கேள்வியோடு சில ஃபைல்களைத் தூக்கிப் போட்டார்.

"என்னால் நம்ப முடியல... நான் வர்றேன்..."

சாருலதா ஆவேசமாக எழுந்தாள்.

"ஒன்மினிட்..." ஆபீசர் தடுத்தார்.

"என்ன?"

"ரொம்ப அழகா இருக்கீங்க. ரொம்ப கோபமும் இருக்கு. யூ ஆர் அப்பாய்ன்டட்! நான் கேட்ட 'அந்த விஷயம்' நீங்க எப்படிங்கறத தெரிஞ்சுக்கறதுக்காக... ஒரு டெஸ்ட்! தட்ஸ் ஆல். தப்பா எடுத்துக்காதீங்க. எங்க பாஸ் ஒரு தங்கமான மனுஷர்..."

"இப்படி ஒரு கேவலமான டெஸ்ட் பண்ணி எதைத் தெரிஞ்சுகிட்டீங்க...? உங்களுக்கே இது டூமச்சா தெரியலை...?" — சாருலதாவிடம் கோபம் குறையவே இல்லை.

"கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதக் கேளுங்க. இப்படி என்னைக் கேக்கச் சொன்னது என் பாஸோட சன். ஐ மீன் எங்க ஜாய்ண்ட் மேனேஜிங் டைரக்டர் தான்..."

"வாட்!"

"ஆமாம். தன் அப்பாவோட நெருங்கிப் பழகப்போற பொண்ணு தப்பான புத்தி உள்ளவளா இருக்கக் கூடாதுங்கறது அவரது எதிர்பார்ப்பு..."

"அதுக்காக இப்படியா?"

"இருபத்தி ஐயாயிரம் சம்பளம், ஒரு கிரேட் பர்சனோட எப்பவும் சேர்ந்தே இருக்கற சந்தர்ப்பம்கறது சாதாரணமா என்ன?"

"எனிவே... திஸ் இஸ் டூ மச்..."

"இருக்கலாம்... ஆனா இந்த டூ மச் தான் சாருல தாங்கற ஒரு நல்ல கேண்டிடேட்டை எங்களுக்குத் தந்திருக்கு..."

— ஆபீசர் மிடுக்காக சொன்னதில் ஒரு அர்த்தம் இருப்பதாகவே உணர்ந்தாள்.

"என்ன சொல்றீங்க? ட்யூட்டில ஜாய்ன் பண்ண சம்மதமா?" — தலையை ஒரு மாதிரி சாய்வாக அசைத்து 'சரி' என்றாள். அவ்வளவையும் பக்கத்து அறையில் கொஞ்சம் கர்ட்டனை விலக்கியபடியே பார்த்துக் கொண்டிருந்தான் அந்த ஆபிசர் குறிப்பிட்டிருந்த ஜே.எம்.டி.யான — தொழிலதிபர் ராஜரத்னத்தின் பிள்ளை ராம்குமார் என்பவன்.

## 4

'ஒரு நாள் இரவு திருடன் ஒருவன் எங்கள் தாத்தாவின் பங்களாவுக்குள் புகுந்து திருடிக் கொண்டு போய்விட்டான். போகிற போக்கில் முருகன் கோயில் உண்டியலையும் அவன் விட்டு வைக்கவில்லை. மறுநாளே என் தாத்தா போலீசில் புகார் செய்தார். ஒரு ஆச்சர்யம் போல அவன் இரு தினங்களில் பிடிபட – அவ்வளவு திருட்டுப் பொருட்களும் போலீசிடம் சிக்கின. என் தாத்தா ராவ்பகதூர் பட்டம் பெற்றவர், வெள்ளைக்காரர்களின் சிநேகிதர். எனவே போலீஸ்காரர்கள் அவ்வளவு திருட்டுச் சாமான்களையும் வீட்டிற்கே கொண்டு வந்து ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். அதில் அந்த நீலக்கல் மோதிரமும் இருந்தது. தாத்தா 'இது எப்படி வந்தது?' என்று கேட்க, 'திருடனிடம் இருந்தது' என்று கூறிய போலீஸ், 'இதைப் பிரிட்டிஷ் ராணி உங்களுக்குப் பரிசாக உங்கள் விரலில் போட்டு விட்டதைத் தான் நாங்கள் அறிவோமே' என்றனர். அவர்களுக்குத் தாத்தா உண்டியலில் போட்டது தெரியாது!

– சோமநாத பிள்ளை.

விஸ்வநாதன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு மேல் திலகம். உள்ளே நுழைந்த சாருலதாவின் முகத்தில் மட்டும் ஒரே சந்தோஷப் பரவசம். அப்பா, அம்மாவின் முக வாட்டத்தைப் பார்த்தவள் உடனேயே புரிந்து கொண்டாள். அப்பா விவேக்கிடம் பேசியிருப்பார். அவன் நடந்ததைச் சொல்லியிருப்பான். இப்போதைக்குக் கல்யாணம் இல்லை என்பது தெரிந்திருக்கும். அதுதான் விஸ்வநாதனை சோகநாதனாக்கி விட்டது.

எப்பேர்ப்பட்ட சோகத்திற்கும் சில நாட்கள்தான் ஆயுள் என்பது சாருலதாவுக்கும் தெரியும். எனவே, அதைப் பற்றி கவலையே இன்றி தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவளது அந்த அலட்சியமான போக்கு விஸ்வநாதனை மேலும் கிள்ளியது.

"பாத்தியா திலகம்... இங்க நான் கவலைப்பட்றத பார்த்தும் உன் பொண்ணுகிட்ட கொஞ்சம்கூட இரக்கம் இல்லாததை..."

— உடைந்த குரலில் கச்சேரியை ஆரம்பித்தார். சாருலதா அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"சிரிக்காத சாரு... இங்க என் மனசு எவ்வளவு வருத்தப்படுது தெரியுமா?"

"எதுக்குப்பா இப்ப் வருத்தப்பட்றீங்க...? என்ன அவசியம்?"

"வருத்தப்படாம... நீ பாட்டும் போய் விவேக்கைப் பார்த்து 'இப்ப கல்யாணம் வேண்டாம்'னுட்டே. அவனும் உங்கிட்ட 'சரி'ன்னுட்டான். ஆனா உன் அத்தை 'அதெல்லாம் முடியாது. அது அது காலாகாலத்துல நடக்கணும். இவ வேலைக்குப் போகலைன்னு யார் அழுதா'ன்னு ஒரே ரகளை தெரியுமா?"

—விஸ்வநாதன் பேசியதில் இருந்து பிரச்னை அத்தையிடம் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது. அதே சமயம் கோபமும் வந்தது.

"அப்பா...! கல்யாணம் பண்ணிக்கப் போறது நானும், விவேக்கும். நாங்க இரண்டு பேருமே சரின்னு ஒத்துக் கிட்டு போகும் போது இதுல அத்தை எதுக்கு மூக்கை நுழைக்கிறாங்க...?" என்றாள்.

"என்னம்மா கேள்வி இது... தன் மகன் விஷயத்தை அவங்க தீர்மானம் செய்யறதுல என்ன தப்பு...?"

"அப்படின்னா வேறு இடம் பார்த்து அவங்க விருப்பப்படி பண்ணச் சொல்லுங்க. என்னால முடியாது. நான் இன்னிக்கு இன்டர்வியூவுல செலக்ட் ஆகிட்டேன். இருபத்தி அஞ்சாயிரம் சம்பளம். எனி டைம் அப்பாய்ன்ட் மெண்ட் ஆர்டர் வரலாம். வந்தா என் உலகமே வேற...



இந்தத் தமிழ் நாட்டோட முதல் பத்து தொழிலதிபர்கள்ல ஒருத்தருக்கு நான் பர்சனல் செக்ரட்டரி... அவர் மூலமா நான் சந்திக்கப் போற நபர்களும் வி.ஐ.பிங்கதான்... அவர் வெளிநாடு போனா நானும் போகணும். சுருக்கமா சொல்லப்போனா அவர் அசைஞ்சா நான் அசையணும்; அவர் சிரிச்சா நான் சிரிக்கணும்.

மொத்தத்துல பரபரப்பான சவாலான வாழ்க்கைக்கு நான் தயாராயிட்டேன். என்னைக் கல்யாணம்கற கூண்டுல தள்ளிப் பிள்ளைகுட்டின்னு பெக்கவிட்டு, சராசரி மனுஷியாக்காதீங்க. வேணும்னா இப்பவே நான் அத்தைக்கு போன் பண்ணி 'ஐ ஆம் சாரி அத்தை, உங்க மகனுக்கு நல்ல பெரிய இடமா வேறு இடம் பார்த்துக்குங்க'ன்னு நான் சொல்லிடவா?"

— கேள்வியோடு வேகமாகத் தொலைபேசியை நோக்கி சென்றாள் சாருலதா. விஸ்வநாதன் பாய்ந்து சென்று கையை பிடித்து இழுத்தார். தடுத்தார்.

"வேண்டாம் தாயே... நீ வாயை வெச்சுகிட்டு சும்மா இரு. நான் உன் அத்தைகிட்ட பேசிக்கிறேன்" என்று அந்த நேரத்திற்கு அவளைத் தடுத்துச் சமாளித்து முடித்தார். பின் ஹேங்கரில் தொங்கியபடி இருந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு சகோதரி ராஜத்தைச் சந்திக்க நேராகவே கிளம்பிவிட்டார்.

வாசலில் நின்று கொண்டிருந்தது அவரது ஸ்கூட்டர். பல நாட்களாக அவர் அதை எடுக்காததால் தூசு படிந்து கிடந்தது. அதை தன் தோள் துண்டால் அடித்து சுத்தம் செய்தவர் பல நிமிடம் செலவழித்து உதையோ உதை என்று உதைக்கவும் தான் வண்டி ஸ்டார்ட் ஆனது.

"ஏங்க... இதுக்காக உடனே போகணுமா... அப்புறம் போகலாமே..." என்று திலகம் கூட சொல்லிப் பார்த்தாள். அவர் கேட்பதாக இல்லை. ஸ்கூட்டர் கிளம்பி விட்டது!

திலகம் மகளிடம் நெருங்கினாள்.

"சாரு... நிஜமாலுமே உனக்கு வேலை கிடைச்சிடிச்சா...?"

"ஏம்மா... அதுல என்ன உனக்கு சந்தேகம்?"

"இல்ல. இருபத்தி அஞ்சாயிரம் சம்பளம்னு சொன்னியே அவ்வளவுல்லாம் தருவாங்களா?"

"அம்மா... நீ அப்பாவோட வாத்யார் வேலைல வந்த சம்பளத்தை மனசுல வெச்சுகிட்டுக் கேக்கறே. உண்மையில இது ரொம்பக் கம்மி சம்பளம். நீ பாரு... போகப் போக நான் எங்கே போறேன்னு..."

"பயமா இருக்கும்மா... வயசுப் பொண்ணு நீ. உனக்கு எதுவும் ஆயிடக்கூடாது."

"என்னால மத்தவங்களுக்கு எதுவும் ஆகாம இருந்தா சரி. அப்புறம் இந்தக் காதல் கத்திரிக்காய் சமாச்சாரம் எல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது. பச்சையா சொல்லப் போனா எனக்கு அந்தக் குண்டு அத்தையையும் பிடிக்கல; அவங்க மகனையும் பிடிக்கல... ஆனா விவேக் நான் நினைச்ச மாதிரி இப்ப இல்ல. அவன்கிட்ட நல்ல மெச்சூரிட்டி இருந்தாலும் அவன் என் மனசுக்குள்ள வரதுக்கு நாளாகும்."

"ஒரு பக்கம் இந்தக் கல்யாணம் நடந்தா நல்லா இருக்கும்னு நினைக்கற நானே இன்னொரு பக்கம் உங்க அத்தை- அவங்க பணத்திமிரை நினைச்சு பயப்படத்தான் செய்யறேன். எது எப்படி நடந்தாலும் நீ நல்லா இருக்கணும். அதுதான் எனக்கு வேணும்..." — திலகம் சொல்லி முடிக்கும்போது கண்கலங்கிவிட்டாள்.

"கவலைப்படாதம்மா... நான் உன் பொண்ணு. ஒரு தப்பும் பண்ணமாட்டேன். அது மட்டுமல்ல. அந்தப் பணக்கார, திமிர்பிடிச்ச அத்தைக்கு, சம்பாதிச்சுப் பணத்தாலேயே பதில் சொல்வேன். மனுஷன் நினைச்சா முடியாததே இல்ல தெரியுமா?"

— சாருலதா தன்னம்பிக்கையுடன் பேசியதை ரசித்துக் கேட்ட திலகம் அவளது கைகளை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.



"உன் பேச்சு எனக்கு ரொம்ப சந்தோஷத்தைத் தருது. இந்தக் குடும்பத்துல பல தலைமுறையாகவே எல்லாமே விதிப்படி தான் நடந்துட்டு வருது. இந்தக் குடும்பத்துல பெண்கள் மட்டும் எப்படியோ நல்லவிதமா வாழ்க்கைப் பட்டு போய் நல்லா வந்துட்றாங்க. ஆனா ஆண்களால கொஞ்சம் கூட முன்னேற முடியல. உதாரணமா உன் அத்தையைச் சொல்லலாம்.

அவங்கள அவங்க புருஷன் காதலிச்சுக் கல்யாணம் செய்துகிட்டார். அவர் பெரிய பணக்காரரு. அதனால உங்க அத்தை இன்னிக்குப் பணத் திமிரோட நடந்துக்கறாங்க. ஆனா உங்கப்பாவைப் பார்... இந்த மாச மளிகைப் பாக்கியைக் கூட முழுசா கொடுக்க முடியலை. கேட்டா உன் அப்பா 'எல்லாம் அந்த மோதிரத்தால. அதைத் தூக்கி எறியணும்'னு சொல்வார். இன்னிக்குக் கூட அந்த நீலக்கல் மோதிரத்தைத் தான் சொன்னார்.

ஒரு மோதிரம் போய் இப்படி எல்லாம் பண்ணுமா என்ன? இதெல்லாம் எவ்வளவு முட்டாள்தனமான நம்பிக்கை... ஹூம். இவங்களுக்கெல்லாம் யார் சொல்றது?"

— திலகம்தன் பேச்சில் பல சங்கதிகளைத் தொட்டவள் கடைசியாக நீலக்கல் மோதிரத்திடம் தான் வந்து நின்றாள். இதற்கு முன்பும் அந்த மோதிரம் பற்றி அவள் பேசி சாருலதாவும் கேட்டிருக்கிறாள். ஆனால் அப்போதெல்லாம் வராத ஒரு ஈர்ப்பு இப்போது சாருவுக்கு அதன் மேல் வந்தது.

"அம்மா...! இப்ப அந்த மோதிரம் எங்க இருக்கு?"

"ஏம்மா... நீ எதுக்கு இப்ப அதைப்பத்தி கேக்கற...?"

"நீதானேம்மா இப்ப என்கிட்ட அதைப்பத்தி பேசினே...?"

"நான் இப்பவா பேசினேன்... எப்பவும் தான் பேசிக்கிட்டிருக்கேன்..."

"சரி இப்ப அது எங்க?"

"உள்ள பரண்மேல ஒரு கூடைக்குள்ள இருக்குது."

"அது தங்க மோதிரம்தானே?"

"ஆமாம். ஒரு சவரன் எடை. பட்டாணி சைஸுக்கு நடுவுல நீலக்கல்லு. நான் ஒரு தடவை அதைப் பார்த்திருக்கேன்..."

"அது என்ன பாக்க முடியாத ஒண்ணா? ஒரு அதிசயத்தப் பார்த்த மாதிரி சொல்றே?"

"என்னம்மா அப்படி சொல்லிட்டே... அதை ஈரச் சாணிக்குள்ள புதைச்சு அந்தச் சாணி உருண்டையைக் காயவெச்சு அதையும் ஒரு பித்தளைச் சம்படத்துக்குள்ள போட்டு மூடி, அந்தச் சம்படத்தைத் தான் பரண் மீது போட்டு வெச்சிருக்கேன்."

"ஒரு தங்க மோதிரத்துக்கு இந்தக் கதியா...?" அதைப் பெட்டியில வெச்சிருக்காம இது என்ன கூத்து?"

"அதுசரி... உன் தாத்தா, பாட்டி காலத்துல இருந்தே அதுதான் நிலை..."

"அதான் ஏன்?"

"அதை உன் கொள்ளு — எள்ளுத் தாத்தாவுக்குப் பிரிட்டிஷ் ராணி பரிசா கொடுத்தாங்களாம். அதாவது



அவர் ராவ்பகதூரா ஆனப்போ ராணியே கைல போட்டு விட்டிருக்காங்க..."

"அடேயப்பா... இது எவ்வளவு பெரிய விஷயம்! ரொம்ப புராதனமானது, நினைவுச் சின்னம்னு சொல்லி பொருட்காட்சில வெச்சா அதைப் பாக்கவே ஒரு கூட்டம் வருமே..."

"அடிப் போடி... அது வந்ததுல இருந்துதான் ராஜா மாதிரி இருந்த இந்தக் குடும்பம் இளைச்சு, துரும்பா போனதா எல்லாரும் நினைக்கறாங்க. நீ போய் நினைவுச் சின்னம் அது இதுன்னு..."

"இதெல்லாம் படுமுட்டாள்தனமான எண்ணம். நாம ஒரு விஷயம் பேசும் போது சாப்பிட்ட பூச்சி செரிக்காம பல்லி கத்துனா உடனே அது நமக்குச் சம்மதம் சொல்லுதுன்னு எடுத்துக்கறதுல இருந்து இந்த மாதிரி ஏகப்பட்ட விஷயங்கள் நம்ம வாழ்க்கைக்குள்ள பூந்துகிடக்கு. இதை எல்லாம் நான் நம்பத் தயாரில்ல..."

"நானும் உன்னை மாதிரி தான் யோசிக்கறேன். அது ஒரு நீலக்கல். அந்த மோதிரத்தை வித்தா இன்னிக் கெல்லாம் பல ஆயிரம் கிடைக்கும். அதெல்லாம் செய்யாம அதை இப்படியா சாணிக்குள்ள வெச்சு, போட்டு வைப்பாங்க...?"

"சரிம்மா... இந்தப் பேச்ச இதோட விடு. அந்த மோதிரம் இப்ப எங்க இருக்குன்னு சொன்னே?"

"பரண் மேல..."

— திலகம் சொல்ல சாருலதா அடுத்து பரண் நோக்கித்தான் நடந்தாள். ஒரு ஏணியை எடுத்து சரித்து வைத்து விறுவிறுவென்று அதன் மேல் ஏறியவள் அந்தச் சம்படத்தை தேடி எடுத்தாள். பரண்மேல் பழைய

குப்பைக் கூளங்களுக்கு நடுவே பச்சை பூத்து அழுக்கேறிக் கிடந்தது சம்படம். கையில் தொட்டுத் தூக்கிய போது உள்ளே சாணி உருண்டை ஒரு கல்போல ஆடியது. அப்படியே எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள். திலகம் இமை கொட்டாமல் பார்த்தபடி இருந்தாள்.

"ச்சே... என்னம்மா நீங்க... இப்படியா போட்டு வைப்பீங்க? இன்னிக்கெல்லாம் இந்த மாதிரி சம்படம் கிடைக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?" — கேள்வி யோடு அதைத் திறக்க முயன்றாள். அது அவ்வளவு சுலபமானதாக இல்லை. பல்லைக் கடித்தபடி ஒருவாறு திறந்தாள். நகம் போய்விட்டது. 'ப்டுக்' என்கிற சப்தத்து டன் சம்பட மூடி திறந்து கொள்ள— உள்ளிருந்த சாணி உருண்டை தெறித்துக் கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் சாணி உருண்டை நடுவில் வைக்கப்பட்டிருந்த அந்த நீலக்கல் மோதிரம் வீட்டு தாழ்வாரத்தில் உருண்டு போய் ஒரு இடத்தில் நின்றது. சாருலதா ஓடிச் சென்று கையில் எடுத்தாள். சாணிக்கு நடுவில் இருந்த போதிலும் கறுத்து விடவில்லை. நீலக்கல் மட்டும் சாணித்திப்பிகளால் மூடப் பட்டிருந்தது. தன் புடவைத் தலைப்பால் பளபளவென்று துடைத்தாள்.

அலாவுதீன் தன் மாய விளக்கை இப்படித்தான் துடைத்தான். அதிலிருந்து பூதம் வந்தது. ஆனால் இதிலிருந்து அப்படி எதுவும் வரவில்லை. சாருலதாவிடம் மட்டும் சற்று கோபம் வந்தது.

"ஒரு ராணி கொடுத்த பிரசன்டேஷனை இப்படியா முட்டாள்தனமா வெச்சிருப்பீங்க..? அப்பாவோட அப்பா, தாத்தாக்கெல்லாம் அறிவேயில்லை... " என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

திலகம் மொச்சைக் கொட்டை போல முழித்தபடி அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



"என்னம்மா... இது என்ன பேயா, பிசாசா... இங்க கிட்ட வந்து வாங்கிப் பார். உன் விரலுக்குச் சரியா இருக்கான்னும் பார்..."

— சாரு மோதிரத்தை நீட்ட, அது அவள் துடைத்த துடைப்பில் பளபளவென்று மின்னியது. திலகம் கைகள் நடுங்க வாங்கிக் கொண்டாள். அந்த நொடி சற்று முன்பு சாரு கேலி செய்தது போலவே மோட்டு வளையில் பல்லி 'டொப் டொப்' என்றது. திலகம் பயத்துடன் அண்ணாந்து பார்த்தாள்.

"என்னம்மா... பல்லி கத்தவும் பயமா இருக்கா?"

"ஆமாம் சாரு... என்னதான் இதெல்லாம் முட்டாள் தனம்னு நினைச்சாலும் ஒரு இனம் புரியாத பயம் எனக்கு இல்லாம இல்லை..."

"பயப்படாதே... நீ சொன்ன மாதிரி இது ஒரு கல். ஒரு உலோகம். அவ்வளவுதான். இந்த உலகம் இந்த இரண்டையும் கொஞ்சம் காஸ்ட்லியா நினைக்குது. ஏன்னா இந்தத் தங்கமும், கல்லும் அவ்வளவு சுலபமா கிடைக்கறதில்லை. இதை எடுக்கவே பல ஆயிரம் செலவாகுது. அதனால்தான் இது காஸ்ட்லி. மத்தபடி இந்த மோதிரத்துக்கோ, இதுல உள்ள கல்லுக்கோ உயிரோ, உணர்வோ கிடையாது. இது ஒரு ஜடம். அவ்வளவுதான். இது நமக்குத் தெரிஞ்சா போதும். இப்ப நான் இதைப் போட்டுக்கப் போறேன். எனக்கு என்ன ஆகுதுன்னு தான் பாத்துடுவோமே..."

— சாரு அலட்சியமாக சொல்லிக் கொண்டே மோதிரத்தை கை விரலில் மாட்டிக் கொண்டாள். அவளுக்கென்றே அளந்தெடுத்து செய்த மாதிரி இருந்தது.

திலகம் பிரமிப்போடு பார்த்துக் கொண்டே இருந்தாள்.

# 5

'உண்டியில் போட்ட பிறகும் திரும்பி வந்த அந்த நீலக்கல் மோதிரம் என் தாத்தாவை மிகவும் பயமுறுத்தவே செய்தது. அதற்கு ஒரு தனி சக்தி இருப்பதால் தான் அது திரும்பி வந்ததாக நம்பியவர் அதை இந்த முறை வீட்டுக் கிணற்றுக்குள் தூக்கிப் போட்டு விட்டார். தண்ணீரில் விழுந்த அது மூழ்கி மறைந்து போனதை ஒரு சிறு வயதுப் பையனாக நான் கூட பார்த்தேன். 'ஏன் தாத்தா, மோதிரத்தைக் கிணத்துல போட்றீங்க?'. என்று கேட்டதற்கு 'போடா போய் உன் வேலையை பாருடா' என்று அதட்டலாக என்னைப் பார்த்து சப்தம் போட்டார். நான் போய் விட்டேன். ஆனால் அந்த நீலக்கல் மோதிரம் மறுபடியும் திரும்ப வந்தது தான் அதிசயத்திலும் அதிசயம்!'

– சோமநாத பிள்ளை

**அ**த்தை ராஜம் வானத்துக்கும், பூமிக்குமாகக் குதித்துக் கொண்டிருந்தாள். அருகே அசட்டுப் பிள்ளை போல முகத்தை வைத்துக் கொண்டு விவேக்.

"அவ நமக்கு சரிப்பட்டு வரமாட்டாடா... நீ ஏன் அவளுக்காக இப்படி உருகறே...?"

"அது வந்தும்மா... அது வந்தும்மா..."

"போதுண்டா. இங்க என்கிட்ட இவ்வளவு நெளியற நீ, அங்க அவகிட்ட ஏண்டா அவ விருப்பப்படியே சில வருஷம் கழிச்சு கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சே...?"

"அப்பதான்மா அவ என்னை விரும்புவா. 'அதெல் லாம் இல்லை, நீ இப்பவே எனக்குக் கழுத்தை நீட்ட ணும்'னா போய்ட்டு வான்னு சொல்லிடுவாம்மா..."



"அப்போ... அவ இல்லேன்னா வேறு ஒருத்தி, நம்ம அந்தஸ்த்துக்கு கோடீஸ்வர இடத்துலயே சம்பந்தம் பார்க்க முடியுமே..."

"ஆனா அவங்கள்ளாம் சாருவாக முடியாதும்மா. சாருவோட அழகுக்கு இணையா, இந்த உலகத்துல யாரையுமே சொல்ல முடியாதும்மா..."

"விட்டா என் எதிர்லயே அவளை வெச்சு ஒரு கவிதை எழுதுவே போல இருக்கு."

"அம்மா ப்ளீஸ்மா... அங்க அவ எதுக்க நான் பெருந்தன்மையா விட்டுத் தந்தாலும் எனக்கு நீ இருக்கற தைரியம்மா. உன்னை வெச்சும், உன்னைச் சொல்லியும் அவளைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வெச்சிடுவேன்..."

"சரி... உன் மாமன் வரட்டும். கடைசியா அவன்கிட்ட ஒரு அஸ்திரத்தைப் போட்டுப் பாக்கறேன். அதுக்கு அவ மசியலைன்னா உனக்கு வேற இடம் தான்."

— ராஜம் மகனுக்காக ஒரு மாதிரி தயாரானாள். கச்சிதமாக விஸ்வநாதனும் அந்தப் பங்களாவுக்குள் தன் ஸ்கூட்டரில் நுழைந்து கொண்டிருந்தார். பங்களா முகப்பில் ஒரு மாருதி எஸ்டீம், ஒரு டாடா இண்டிகா, சற்றுத் தள்ளி ஒரு சான்ட்ரோ என்று எல்லா ரகத்திலும் கார்கள் நின்று கொண்டிருந்தன. பங்களாவுக்கு முன்னால் ராட்சஸத்தனமாக ஒரு தோட்டம். அதில் போகன்வில்லா வும் கல்யாண முருங்கையும் செழித்து வளர்ந்திருந்தன. தோட்டக்காரன் ஒருவன் ஒரு பக்கம் ட்யூப் வைத்து தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். விஸ்வநாதனுக்கு அதையெல்லாம் பார்க்க மிக ஏக்கமாக இருந்தது. ஸ்கூட்டர் போட்ட சப்தம் உள்வரை கேட்க — விவேக்கும் அவரைப் பணிவாக வரவேற்க ஆசைப்பட்ட மாதிரி வெளியே வந்தான்.

"வாங்க மாமா... வாங்க..."

"மாப்ள..."

"வார்த்தையில சொன்னா ஆச்சா... அதான் சாரு சில வருஷத்துக்குக் கல்யாணத்தத் தள்ளிப் போட்டுட்டாளே" — என்று முனகிக் கொண்டே அவரோடு உள்ளே சென்றான்.

பெரிய ஹால்! ஹாலில் ஆயிரம் கிலோ பஞ்சை அடித்து செய்த சோபாக்கள். பார்க்க பார்க்க விஸ்வநாதனுக்கு 'ஐயோ', என்றானது. ஹாலில் சோபா ஒன்றில் நட்ட நடுவில் ராஜம் அமர்ந்து கொண்டிருந்தாள். விஸ்வநாதன் வருவது தெரிந்தும் தெரியாதவள் போல புடவை முந்தியில் மடிப்பை சரி செய்வதும் இழுத்து விடுவதுமாக இருந்தாள்.

"அக்கா..." — விஸ்வநாதன் அழைப்போடு எதிரில் உட்கார்ந்தார்.

"என்னை அப்படி கூப்பிடாதே... உன்னை என் தம்பின்னு சொல்லவே வெட்கமா இருக்கு..."

"என்னக்கா நீ... எதுக்கு இவ்வளவு கோபம்...?"

"பின்ன என்னடா... நீ பெத்த பொண்ணு உன் பேச்சைக் கேக்க மாட்டேங்கறா. இப்ப என்ன சமாதானம் சொல்ல வந்திருக்கே...?"

"நான் சமாதானம் சொல்லவெல்லாம் வரலை. எல்லாம் என் தலையெழுத்து. இப்ப என்னக்கா கொஞ்ச நாள் கழிச்சுதான் இந்தக் கல்யாணம் நடந்துட்டுப் போகட்டுமே."

"ஏண்டா... சமாதானம் சொல்ல வரலைன்னு உன் பொண்ணு விருப்பப்படி நடந்துக்கலாம்கறியே, உனக்கு எவ்வளவு தைரியம்..."



"நான் என்னக்கா பண்ண... உன் பிள்ளையும் சரின்னுல்ல சொல்லிட்டான்..."

"அப்படி சொல்லலேன்னா உன் பொண்ணு ஒரேயடியா மறுத்திடுவா. அதனாலதான் சம்மதிச்சேன்னு சொல்றான். இதுக்கு நீ என்ன சொல்றே...?"

"நான் எதுவும் சொல்லலை... நீயே சொல்லு. என் மகளுக்குக் கல்யாணம்ஆகி அவ நல்லா இருந்தா எனக்குப் போதும். நான் இப்ப என்ன செய்யட்டும்?"

"எனக்கு இப்ப ஹார்ட் அட்டாக். என் உயிர் எப்ப வேணா போயிடும்னு டாக்டர் சொல்றாரு..."

"ஐயோ அக்கா என்னக்கா சொல்றே?"

"பைத்தியக்காரா... அப்படின்னு நான் ஒரு நாடகம் போட்றேன். சாகறதுக்குள்ள என் மகன் கல்யாணத்தைப் பார்த்துடணும்கறது என் விருப்பம். இப்ப உன் பொண்ணு சம்மதிச்சுத்தானே தீரணும்?"

"என்னக்கா நீ... டி.வி. சீரியல்ல வர்ற கேரக்டர் பேசற மாதிரியே பேசறியே..."

"நீ தப்பா சொல்றே... என்னை மாதிரி கேரக்டர்களைப் பார்த்துதான் டி.வி. சீரியல் பண்றாங்க..."

"ஏதோ ஒண்ணு ஒர்க்கவுட் ஆனா சரி."

"அம்மா அருமையான ஐடியா. நிச்சயம் ஒர்க் அவுட்டாகும். என்ன... நீ ஒரு நாலைஞ்சு நாள் ஆஸ்பத்திரில படுத்திருக்கணும்."

"எல்லாம் என் தலை எழுத்துடா... தலை எழுத்து. இந்தத் தடவை மட்டும் என் விருப்பப்படி நடக்கலைன்னு வை... அந்த சாருலதாவைத் தலை முழுகிட்டு நான் சொல்ற ஹேமலதாவுக்கோ இல்ல சொர்ணலதாவுக்கோ நீ தாலி கட்டறே..."

"நிச்சயமாம்மா... ஆனா சாரு அவ்வளவு மோசமானவ கிடையாதும்மா. அவ சம்மதிப்பா. நிச்சயம் சம்மதிப்பா...

— விவேக் உணர்ச்சி வசப்பட்டான். ஆனால் அவன் நினைத்த மாதிரி நடக்குமா என்பது மட்டும் போகப் போக தெரியுமோ?

வீட்டிற்குள் நுழைந்த விஸ்வநாதனின் முகம் பேயறைந்தது போல இருந்தது. திலகம் கவனித்து விட்டு கேட்டாள்.

"ஏங்க... என்ன நடந்தது? — உங்க அக்கா என்ன சொன்னாங்க?"

"எங்க... அக்கா ஆஸ்பத்திரியில இல்ல இருக்காங்க..."

"ஆஸ்பத்திரியிலயா... என்னங்க அவங்களுக்கு?"

"ஹார்ட் அட்டாக்..." விஸ்வநாதன் நன்றாகவே நடித்தார்.

"என்னது ஹார்ட் அட்டாக்கா?"

"ஆமாம்... அக்கா இப்ப இன்டென்சிவ் கேர்லதான் இருக்காங்க..."

"ஐய்யய்யோ... எப்படிங்க?"

"எப்படின்னா... ஹார்ட் அட்டாக் எப்ப வரும், எப்படி வரும்னு யாராவது முன்னாலேயே சொல்ல முடியுமா? முண்டம். திடீர்னு வர்றதுக்குப் பேர்தானே ஹார்ட் அட்டாக்..."

"சரி இப்ப எந்த ஆஸ்பத்திரியில இருக்காங்க...?"

"பக்கத்துல இருக்கற மங்களம் ஹாஸ்பிட்டல்லதான்_" — விஸ்வநாதன் சுரத்தில்லாமல் பதில் கூறினார். திலகம் உடனேயே ராஜத்தைப் பார்ப்பதற்குப் புறப்பட்டுவிட்டாள்.



மௌனமாகக் கேட்டபடி இருந்த சாருலதாவும் வேறு வழியில்லாமல் அம்மாவுடன் கிளம்பினாள். விஸ்வநாதன் 'நீங்க முன்ன போங்க. நான் பின்னால வரேன்...' — என்று இருவரையும் சாதுர்யமாகத் தள்ளிவிட்டு உடனேயே விவேக்கிற்கு போன் செய்தார்.

"மாப்ள... நீங்க சொன்ன மாதிரியே செய்துட்டேன். என் பொண்டாட்டியும், சாருவும் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிட்டாங்க."

"ரைட் மாமா... மிச்சத்தை நான் அங்க பார்த்துக்கறேன்."

— விவேக் படு உற்சாகமான குரலில் சொன்னான். விஸ்வநாதனும் உடை மாற்றிக் கொண்டு புறப்படத் தயாரானார். அப்போது தான் அந்தச் சம்படம் கண்ணில் பட்டது. தரையில் ஒரு மூலையில் சாணி உருண்டைத் தூள் குவிக்கப்பட்டிருந்தது. கொஞ்சம் பகீர் என்றது!

அவருக்கு, சாரு தான் மோதிர விஷயத்தில் ஏதோ செய்திருக்கிறாள் என்பது தெரிந்துவிட்டது!

ஆட்டோ தடதடவென்று ஓடியபடி இருந்தது. ரோடுகளும் மகாமோசம். ஒரு பெரிய சைஸ் பல்லாங்குழிப் பலகை போல இருந்தது சாலை. உள்ளே படபடப்போடு இருந்த திலகம் நிஜமாலுமே கலக்கத்துடன் சாருலதாவைப் பார்த்தாள்.

"என்னம்மா...?"

"எனக்கு பயமா இருக்குடி..."

"ஹார்ட் அட்டாக்குக்குப் பயப்பட்றியா...? நீ ஒண்ணும்மா...! ஒரு காலத்துல மந்திரிகளுக்கு மட்டுமே வந்தது இது. இப்பதான் பாரபட்சமில்லாம எல்லாருக்கும் வருது. அதை நினைச்சு சந்தோஷப்படு..."

"சாரு... இது விளையாட்ற நேரமில்ல. நான் உன் அத்தைக்கு ஹார்ட் அட்டாக் வந்துடிச்சேன்னு நினைச்சு வருத்தப்படலை..."

"பின்ன...?"

— அவள் பார்வை சாருவின் மோதிர விரல்மீது சென்றது.

"என்ன இதைப் பாக்கறே?"

"இதைக் கைல போட்டு கால்மணி நேரம் ஆகலை. அதுக்குள்ள ஒரு கெட்ட செய்தி. உனக்கே ஒரு மாதிரி இல்ல?"

"என்னம்மா நீயும் இந்த மோதிரத்தை நம்ப ஆரம்பிச்சுட்டியா?"

"இல்ல... நடக்கறத வெச்சுப் பார்த்தா அப்படி தோணுதுன்னு சொல்ல வந்தேன்..." — திலகம் மிடறு விழுங்கினாள். சாருலதாவுக்கு சிரிப்புதான் வந்தது!

"பேசாம வாம்மா.. இதை ஒரு ஜடம்னு சொல்லிட்டு, இதோட போய் அத்தைக்கு வந்த ஹார்ட் அட்டாக்கைக் கம்பேர் பண்றியே — ஹைய்யோ ஹைய்யோ" — என்று தலையில் அடித்துக் கொண்டாள். ஆட்டோ உருண்ட படியே இருந்தது!

மங்களம் ஹாஸ்பிட்டல் வாசலிலேயே குட்டி போட்ட பூனை போல நடந்தபடி இருந்தான் விவேக். உள்ளே மூக்கில் ஆக்சிஜன் சிலிண்டர் பைப்போடு ராஜம்.

விஸ்வநாதனும் பின்னாலேயே கொஞ்சம் இடைவெளி விட்டு ஸ்கூட்டரில் வந்தபடி இருக்க, ஆட்டோ கச்சிதமாக உள்நுழைந்து நின்றது. ஆட்டோவில் இருந்து இறங்கியவர்களை விவேக் ஓடிவந்து சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு வரவேற்றான்.



"வாங்க அத்தை... வா சாரு..."—என்று அழைத்த படியே முன்னால் நடக்க அவர்களும் தொடர்ந்தனர். உள்ளே ராஜம் கட்டிலில் கிடந்தாள். கண்கள் மூடியபடி இருக்க, மூக்குத் துவாரத்தில் ஆக்சிஜன் ட்யூப். திலகத்துக்கு அதைப் பார்க்கவுமே நெஞ்சை அடைக்கிற மாதிரி இருந்தது.

"நல்லாதான் இருந்தாங்க... டைனிங் டேபிள்ல எனக்கு சாப்பாடு போடும்போது என் கல்யாண விஷயமா கேட்டாங்க. அப்ப நான் சாருலதா வந்து பேசிட்டுப் போன விஷயத்தை சொன்னேன். அவ்வளவுதான்... சில வருஷம் போகட்டுமேன்னு சாரு சொன்னதை அம்மா தப்பா புரிஞ்சுகிட்டாங்க. சாரு என்னை வெறுத்துப் பிரச்னையைச் சமாளிக்கத்தான் அப்படி சொல்றதா நினைச்சுட்டாங்க. அவ்வளவுதான். கொஞ்ச நேரத்துலயே நெஞ்சுவலி வந்துடுச்சு. குப்புன்னு வேர்த்துக் கொட்டவும் ஹார்ட் அட்டாக்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டு வந்து அட்மிட் பண்ணிட்டேன்."

— விவேக் கச்சிதமாக சொல்ல வேண்டியதை சொல்லி முடித்தான். சாருலதாவுக்குக் குழப்பமாய் இருந்தது. வருத்தமாகவும் இருந்தது. தான் தவறு செய்து விட்டோமோ என்று தோன்றியது போல உணர்ந்தவள் மிக இறுக்கமாக இருந்தாள்.

அந்த சூழலை மேலும் இறுக்கமாக்குவது போல படு சீரியஸாக டாக்டர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

"என்ன இது பேஷண்ட்டை சுத்தி இவ்வளவு பேர்... முதல்ல எல்லாரும் இடத்தை காலி பண்ணுங்க. இது இன்டென்சிவ் கேரா இல்ல காயலாங்கடையா?"—என்று ஒரு சுத்து கத்தவும், எல்லோரும் நகர்ந்தனர்.

ராஜம் மட்டும் படுக்கையில் தனித்து விடப்பட்டாள். அருகில் விவேக்கை கூட டாக்டர் அனுமதிக்க வில்லை. அவன் மிக சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு வெளியே வந்தான். கச்சிதமாக விஸ்வநாதனும் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு வரவும் மேட்டரில் டாப் கியர் விழ ஆரம்பித்தது.

"விவேக்... அக்காவுக்கு இப்ப எப்படி இருக்கு?"

"தெரியல மாமா... டாக்டர் எதுவும் சொல்ல மாட்டேங்கறார்"

"மை காட்... மைல்ட் அட்டாக்கா இல்ல சிவியரா...?"

"சிவியர்ங்கற மாதிரிதான் தெரியுது." — விவேக் அழுவது போல பாவனைக்கு மாறினான். விஸ்வநாதனை அது பதற வைத்தது.

"பாத்தியா சாரு... உன் முடிவு அத்தையை எவ்வளவு தூரம் பாதிச்சிருக்கு பார்த்தியா...?" — என்று தடாலடியாக அவளை நோக்கிப் பாய்ந்தார் விச்சு. அதை ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை; மறுக்கவும் முடியவில்லை. மௌனமாகவே இருந்தாள். இடையில் டாக்டரிடம் இருந்து அழைப்பு வந்தது.

"இங்க யார் விஸ்வநாதன்?"

"நான்தான் டாக்டர்,"

"கமான் க்விக்... பேஷண்ட் உங்ககிட்ட ஏதோ பேச விரும்பறாங்க. சாருலதாங்கறது யார்?"

"என் டாட்டர்தான் டாக்டர்."

"கமான், இரண்டு பேரும் வாங்க..."

இருவரும் டாக்டரைத் தொடர்ந்து உள்ளே சென்றனர்.



ராஜம் கண் திறந்திருந்தாள்... அதில் ஒரு அசாத்ய சோர்வு. கண் இமைகள் மேல் கிளிசரினை தடவி ஒருவித எண்ணெய்ப் பசையைத் தோற்றுவித்திருந்தனர்.

"விச்சா..." ராஜம் தன் தம்பி விஸ்வநாதனை அப்படித் தான் அழைப்பாள். விஸ்வநாதனும் நெருங்கினார்.

"அக்கா..."

"நா... நான் பொழைக்கறது ரொம்ப கஷ்டண்டா..."

"ஐயோ, அக்கா அப்படி எல்லாம் சொல்லாதக்கா..."

"வேற வழி... எங்க என் மருமக..."

"இதோ... இதோ இங்க என் பக்கத்துல நிக்கறா பார்..."

"சாரு..."

"அத்தே..."

"இப்படி வா..."

"இங்க தான் அத்த இருக்கேன்..."

"உனக்கு என் மகனைப் பிடிக்கலையா?"

"அது... அது... அப்படி எல்லாம் இல்ல அத்த..."

"பரவால்ல தைரியமா சொல்லு. ஏன்னா நான் இன்னும் எவ்வளவு நாள், எத்தனை மணி நேரம் இருப்பேன்னு தெரியாது. அதுக்குள்ள அவனுக்கொரு பொண்ணைப் பார்த்து முடிவு செய்து அவனை மாப்ளைக் கோலத்துல பார்த்துட்டுக் கண்ணை மூட விரும்பறேன்."

"அக்கா... நீ கவலைப்படாதக்கா. சாருவே நிச்சயம் விவேக்கைக் கல்யாணம் செய்துப்பா..."

"நீ பேசாதடா... அவ பேசட்டும்... சாரு எதுவா இருந்தாலும் தைரியமா சொல்லு."

"அத்த... அது வந்து..."

"கடல் மாதிரி சொத்து இருக்கு. நீ எதுக்கு வேலைக்குப் போகணும்? சொந்தமா தொழில் செய்யலாமே...?"

"அத்தே... அது வந்து...

"சாரு... இது ஆர்கியூ பண்ற நேரமில்ல. அக்கா கிட்ட இப்பவே கல்யாணத்துக்கு ரெடின்னு சொல்லு."

"அப்பா..."

"என்ன அப்பா...? எவ்வளவு ஆசை இருந்துருந்தா அக்காவுக்கு இப்படி ஆகியிருக்கும்?"

"சரிப்பா... இனி உங்க இஷ்டம்."

—பட்டென்று சொல்லிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியில் வந்தாள். நேராக திலகம் அருகே போனவள் "அம்மா நான் கிளம்பறேன். நீ இருந்து பார்த்துட்டு வா..." என்று விறுவிறுவென்று கிளம்பிவிட்டாள்.

கவனித்துக் கொண்டேயிருந்த விவேக் 'அப்பாடா...!' என்று பெருமூச்சு விட்டான்.

## 6

'கிணற்றில் போட்ட பிறகும் அந்த மோதிரம் திரும்ப வந்ததை என்னால் இப்போதும் எண்ணிப் பார்க்கவே வியப்பாக உள்ளது. கிணற்றில் நீரின் சுத்தத்திற்காக மீன்கள் விட்டிருந்தோம். அவை பெருகவும், அவ்வப்போது அவற்றைப் பிடித்து சமைப்பது வீட்டு சமையல்காரன் வழக்கம். அதிலும் வெள்ளைக்காரர்கள் யாராவது



வரும்போது மீன் வறுவல் அவர்களுக்கு மிக பிடிக்கும் என்பதால் அதை சமைப்போம். அப்படி சமைப்பதற்காகப் பிடிக்கப்பட்ட மீன் ஒன்றைக் கத்தியால் அறுத்தபோது உள்ளிருந்து வெளிப்பட்டது அந்த நீலக்கல் மோதிரம். சமையல்காரனும் 'ஐயா உங்க நீலக்கல் மோதிரம்க' என்று ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்து என் தாத்தாவிடம் தந்தான். தாத்தா ஆடிப்போய் விட்டார்.

– சோமநாத பிள்ளை

இயற்கையாக அமைந்த இயற்கையின் செயற்கை யில்லாத அழகிய வெளி. எதிரில் தாவித்தாவி வந்து கரைந்து அமுங்கும் அலைகள். கரை ஏற முடியாது, ஏறவே முடியாது என்பது தெரிந்தும் இந்த அலைகளின் விடா முயற்சியை நினைக்கும்போது யாருக்கும் வியப்பாகத்தான் இருக்கும்.

சாருலதாவும் அப்படி நினைத்துப் பார்த்துக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு எல்லாமே கை நழுவிப் போய் விட்டது போல இருந்தது. குறிப்பாக, தொழிலதிபர் ராஜரத்னத்தின் பர்சனல் செக்ரட்ரியாக இந்த உலகையே ஒரு சுற்று சுற்றி வரப்போவதெல்லாம் வெறும் கனவாகி விட்ட மாதிரி தோன்றியது.

இந்த மண்ணில் பெண்களின் வாழ்க்கையே இப்படித் தான் இருக்கிறது. அவர்கள் ஆண்களின் இச்சைகளைத் தீர்ப்பதற்காக மட்டுமே படைக்கப்பட்டவர்கள்... அடுத்து, பிள்ளை பெற்றுப் போட வேண்டும். அதை வளர்க்க வேண்டும். இருக்கவே இருக்கிறது சமையல்கட்டு. அதில் அடைந்து கொண்டு விதம் விதமாகச் சமைக்க வேண்டும். அவள் இதற்கு மட்டும் தான் லாயக்கு... மற்ற விஷயங் களில் அவள் கவனம் செலுத்தினால் அதை முளை யிலேயே கிள்ளி எறியத்தான் எத்தனை எத்தனை வழி வகைகள்!

சாருலதா அழுவதைக் கேவலமாக எண்ணுபவள். இருந்தும் அன்றைய அவளது நிலை அவளது கண்களில் கண்ணீரை வரவழைத்தது.... கையைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாள். அலைகள் கால்வரை வந்து தொட்டு விட்டு சென்றன. நண்டுக்கூட்டமும் நின்று ஒரு பார்வை பார்த்தது. அப்போது அவள் பார்வை தற்செயலாக அந்த நீலக்கல் மோதிரம் மேல் சென்றது.

'அதை அணியப் போய்தான் தன் விருப்பம் ஈடேறாமல் போகப் போகிறதோ?' — முதல் தடவையாக ஒரு சராசரிப் பெண் போல் கேட்டுக் கொண்டாள். அதையே உற்றுப் பார்த்தாள். பிறகு 'சேச்சே... இப்படியா முட்டாள்தனமாகவெல்லாம் யோசிப்பது?' என்கிற மாதிரி மனதையும் மாற்றிக் கொண்டபோது 'சோசியம் பாக்கலையோ சோசியம்...' என்றது ஒரு குரல்.

ஒரு கம்பளத்து ஜோசியக்காரப் பெண் கையில் ஒரு கறுப்புக் குச்சியுடன், இடுப்பில் ஒரு சிறு கூடையுடன் அவள் அருகில் வந்து நின்றாள். இருவருடைய பார்வை களும் முட்டிக் கொண்டன. அவள் நெற்றியில் ஒரு ரூபாய் சைசுக்குப் பொட்டு.

"தாயி சோசியம் பாக்கறியா?"

"இல்ல... எனக்கு இதுல எல்லாம் நம்பிக்கை கிடையாது. நீ போகலாம்."

"அப்படி எல்லாம் அவசரப்பட்டு சொல்லாதே ஆத்தா... உன் மனசுல இருக்கற ஒரு மூணு விஷயத்தை நான் சொல்றேன். அது சரியா இருந்தா சோசியம் பார்..."

"வேண்டாம்... தயவு செய்து போங்க. இந்த மாதிரி விஷயங்கள்ல உண்மையே இருந்தாலும் இதை எல்லாம் நான் பார்க்க விரும்பலை... நம்ம நாட்டுலதான் இப்படி எல்லாம்..."



"அப்படி எல்லாம் பேசாதே ஆத்தா. இப்பகூட ஒரு வெள்ளைக்கார மனுஷனுக்கு சோசியம் பார்த்தேன். நான் சொன்னதைக் கேட்டு அசந்து போன அவன் இந்த நாட்டுல இந்த மாதிரி என்ன என்ன அதிசயம்லாம் இருக்குன்னு கேட்டு ஐநூறு ரூபா பரிசா கொடுத்தான். என்னை ஒரு போட்டோ படம் கூட எடுத்து அப்பவே போட்டோவையும் கொடுத்தான்... பாரு..."

—அவள் ஒரு போலராய்ட் போட்டோவின் பிரதியை சாருலதா முன் காட்டினாள். அதில் அவளுடன் படம் எடுத்த வெள்ளைக்காரரின் மனைவி!

"நீ பாவம் தாயி... குழம்பிப்போய் இருக்கே. எப்பவும் இல்லாதபடி நிலை குலைஞ்சு போய்க் கிடக்கே. உன் கழுத்துல வேகமா தாலி ஏற — ஒரு கூட்டம் முயற்சி செய்யுது. சரிதானே?

—அவள் அப்பட்டமாகக் கேட்டதில் சாருலதாவுக் குள் ஒரு 'திடுக்' உணர்வு. அவளைக் கூர்மையாகப் பார்த்தாள்.

"கவலைப்படாதே... நீ விரும்பின படி தான் எல்லாம் நடக்கும். நீ பெரிய ராணியாகப் போறே... அதுக்கான நேரம் உனக்கு ஆரம்பமாயிடிச்சு..."

"நானா...? ராணியாவா?"

"ஆமா... ஒரு பரம்பரைச் சொத்து ஒண்ணு இன்னிக்குதான் உனக்குக் கிடைச்சது. அதுதான் இனி உனக்கு காவல். அது இனி உனக்கு எல்லா வழியும் காட்டும்..."

— அவள் பரம்பரைச் சொத்து என்கவும் சட்டென்று கைவிரல் மோதிரத்தைப் பார்த்தாள்.

"இதான்... இந்த மோதிரம் தான் எனக்கு இன்னிக்கு கிடைச்சது. ஒரு விதத்துல இது புராதனமானதுதான்.

வெள்ளைக்கார துரை என் தாத்தாவுக்குப் போட்ட நீலக்கல் மோதிரம்..."

"அப்ப இதுதான் உனக்கு எல்லாம். நீ வேணா பாரு. நீ இனி தொட்டதெல்லாம் துலங்கும். பட்ட தெல்லாம் விளங்கும்."

"இப்படி ஐஸ் வெச்சாவெல்லாம் நான் மயங்க மாட்டேன்..."

"இது ஐஸ் இல்ல. இதுதான் உன் தலையெழுத்து. நான் அதைப் படிக்கத் தெரிஞ்சவ. இப்படி படிக்கற கூட்டம்தான் எங்க கூட்டம். எங்களுக்கு இதைத் தவிர வேறெதுவும் தெரியாது..."

"போதும்மா... நிறுத்து... தலை எழுத்து கால் எழுத்துன்னுகிட்டு. தலை என்ன ஸ்லேட் போர்டா, இல்ல பேப்பர் போர்டா... அதுல எதாவது எழுதி வைக்க... இந்தத் தலைஎழுத்துன்னு ஒரு வார்த்தையைக் கண்டு பிடிச்சு சொன்னவங்களை நிக்க வெச்சுச் சுடணும்."

"இப்படி அவசரப்பட்டு யோசிக்காம பேசற உன்னைத்தான் சுடணும்."

"நான் யோசிக்காம பேசறேனா?"

"ஆமா தாயி... தலை எழுத்துன்னா நீ எழுதற அதே எழுத்துன்னு அர்த்தம் இல்ல. உன் மனசுக்குள்ள — அடில படிஞ்சு கிடக்கற சப்தம். சப்தத்தை விளங்க வைக்கத்தான் எழுத்து கண்டுபிடிச்சாங்க. மனசுல இருக்கறதை எழுதிக் காட்டத்தானே முடியும்?"

"உன் பேச்சு கொஞ்சம் புதுசா இருக்கே. மனசு, எழுத்துன்னு புத்திசாலித்தனமா பேசறியே..."

"இது ரொம்ப சாதாரண விஷயம். இதை எல்லாம் புத்திசாலித்தனம்னு சொன்னா உன்னை நான் என்னன்னு நினைக்க..." அந்த ஜோசியக்காரி சாருலதாவை ஒரு வாரு வாரினாள். சாருவுக்கும் கொஞ்சம் தலையில் குட்டு விழுந்த மாதிரிதான் இருந்தது.

"முடிவா நீ என்னதான் சொல்ல வரே...?"

"நடந்தது, நடக்கறது, நடக்கப் போறதுங்கற அவ்வளவும் உன் மண்டைக்குள்ள இருக்கு. அதைத்தான் நான் தலை எழுத்துன்றேன்."

"சரி, விஷயத்துக்கு வா. கிட்டத்தட்ட என் பிரச்னையை நீ சரியா சொல்லிட்டே. அப்படியே நான் இனி மகாராணின்னே பார்... அங்கதான் எனக்கு உதைக்குது."

"எதுவும் உதைக்காது தாயி... எதுவும் நடக்கறதுக்கு முந்தி பெருசாதான் தெரியும். நடந்துட்ட பிறகு அது ஒண்ணுமே இல்லாம போயிடும்."

"சரி... நடக்கட்டும். நடந்த பிறகு உன்னைக் கவனிக் கிறேன். நீ இப்ப கிளம்பு."

"நான் போறேன் தாயி. நீயே ஒரு நாள் என்னைத் தேடி வருவே. அப்ப வட்டியும் முதலுமா வெச்சுக்கறேன். அந்த மோதிரத்தை மட்டும் கழட்டாதே..."

"நீ கழட்டாதேங்கறே... ஆனா எங்க வீடே இதைப் பார்த்து பயப்படுது. இது வந்ததுல இருந்துதான் எங்க குடும்பம் ஒண்ணும் இல்லாம போச்சாம்..."

"அதுதான் இல்லை. இந்த நீலக்கல் ஒரு நீதிபதி மாதிரி. நல்லவங்களுக்கு நல்லதையும், கெட்டவங்களுக்கு அவங்களுக்கு ஏத்த தண்டனையையும் தர்ற ஒரு கல் இது. இது சனியோட கல். சனிக்கு நீதி நியாயம்னாதான் பிடிக்கும். ரொம்ப மந்தமா நடக்கறவன் சனி. ஆனா ஆழமா எதையும் செய்யறவன். உன் குடும்பத்துல உன் தாத்தாக்கள் அவங்களுக்கே தெரியாம தப்பு பண்ணி

யிருந்திருப்பாங்க. அதனால இது தண்டிச்சிருக்கும். அதே சமயம் இது தேடி வந்ததால இது ஓடிப் போகாது..."

"அப்படின்னா?"

"இதை நீங்க தூக்கி எறிஞ்சாலும் உங்ககிட்டயே திரும்ப வந்துடும்..."

"என்ன உளறுறே... இப்ப நான் இதை இந்தக் கடல்ல தூக்கிப் போட்டா இது திரும்பி வந்துடுமா?"

"என் பேச்சைக் கேட்டு தூக்கிப் போட்றவளா நீ...? நான் சொன்னதை நீ சரியா விளங்கிக்கலை தாயி. உன் வீட்ல பெரியவங்க கிட்ட கேள். அவங்க சொல்வாங்க. இது உங்க பாட்டன் பூட்டன் ஆசீர்வாதம். இதைக் கழட்டாம போட்டுருந்து நடக்கறத கவனி. இது உன் கைல இருக்கும்போது நீ நினைக்கறது தான் நடக்கும். இது இல்லாதப்ப அப்படியே தலைகீழா மாறும். வேணும்னா சோதிச்சுப் பார்."

"இதுக்குதான் நான் உன்கிட்ட முதல்லயே பேசமாட்டேன்னு சொன்னேன்... கிட்டத்தட்ட விட்டலாச்சார்யார் படத்து மாய மோதிரம் ரேஞ்சுக்கு இந்த மோதிரத்துக்கு நீ பில்டப் கொடுக்கறே... இது காஸ்ட்லியான ஒரு பொருள். அதுக்கு மேல இதை நான் மதிக்கத் தயாரா இல்லை..."

"தாயி இது கல் தான்... கோயில்ல சாமிகூட கல்தான். கல்லுன்னா அதுக்கு உசுர் கிடையாது. ஜடம்னு நினைச்சுக்கிட்டு இப்படி பேசறே. ஆனா ஒரு விஷயம் தெரிஞ்சுக்க. உன் உடம்பும் என் உடம்பும் ஒருநாள் இல்ல ஒருநாள் கிழடுதட்டி ஒண்ணுமில்லாம போயிடும். ஆனா இது அப்படியே இருக்கும்... கல்லு மண்ணுன்னு மனுஷன் கேவலமா நினைக்கற எல்லாமே ரொம்ப ரொம்ப மேலானது. உண்மைல ரொம்ப சாதாரணமானது இந்த உடம்புதான்."



— அவளது பிரசங்கம் சாருலதாவை எழுந்திருக்க வைத்தது. ஒரு முறை முறைத்துவிட்டு நடந்தாள்.

"போ... போதாயி... சும்மா விளையாட்டுக்கு நான் சொன்னபடி நடந்து பார். அப்ப புரிஞ்சிடும்" என்று, போகிறவளை பார்த்து சொன்னாள்.

"விளையாட்டுக்கு இல்ல... சீரியஸாவே சொல்றேன். எனக்கு கல்யாணத்துல இஷ்டமில்லை. ஆனா அது ஒரு நாலு நாள்ல நடக்கற நிலைல இருக்கு. அதைத் தடுக்க முடியுமா?"

"கல்லுதான் கைல இருக்குல்ல. கல்ல பார்த்து 'இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது'ன்னு சொல்லிட்டு தைரியமா உன் விருப்பப்படி நடந்துக்கப் பார். அப்ப தெரியும்..."

— அவள் சொன்னதைக் கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தவள் திரும்பவும் ஆஸ்பத்திரி நோக்கி கிளம்பினாள். அத்தை உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தால் மெல்ல சிகப்பு கொடி காட்டிப் பார்க்கலாம் என்கிற எண்ணத்தோடு!

## 7

**'கோயில் உண்டியலில் போட்டு திரும்பி வந்தது; கிணற்றில் போட்டும் திரும்பி வந்தது. இதனால் அதன் பின்னால் ஒரு பெரிய சக்தி இருப்பதாகக் கருதிய என் தாத்தா அதன் பொருட்டு ஒரு மலையாளத்து நம்பூதிரியிடம் பிரசன்னம் பார்க்க விரும்பினார். அந்த நம்பூதிரியும் பிரசன்னம் பார்த்ததில் அந்த நீலக்கல் மோதிரம் சனீஸ்வர அம்சம் என்றார். 'ஏழு தலைமுறைக் காலத்துக்கு எங்கள் குடும்பத்திலேயே அது இருந்து தீரும் என்றார். அப்படியே 'அதை வைத்துக் கொண்டு உயிர் போனாலும் நீதி**

நெறி தவறாமல் நடந்து கொண்டால் மேன்மை உண்டாகும். இல்லாவிட்டால் பாதகம் ஏற்படும்' என்ற நம்பூதிரி 'இந்த மோதிரம் ராமனின் கணையாழி போன்றது' என்றும் கூறி முடித்தாராம்!'

— சோமநாத பிள்ளை.

ஆஸ்பத்திரி பெட்டில் அத்தை ராஜம் விசேஷமாக செய்யப்பட்ட வெஜிடபிள் புலாவை வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். அருகிலேயே விவேக்.

"அம்மா உங்க நடிப்பு சூப்பர்...! சாரு படு வேகமா வழிக்கு வந்துட்டா... அவ இவ்வளவு சீக்கிரமா சம்மதிப்பான்னு நான் கூட எதிர்பார்க்கலை...!—என்று வழியவும் செய்தான்.

"எல்லாம் கர்மம்டா... என் தலை எழுத்து. அவ நான் பார்த்து பொறந்த பொண்ணு. அவளை வழிக்குக் கொண்டு வர நான் இப்படி எல்லாம் ட்ராமா போட வேண்டியிருக்கு பார்...!" — என்று அவளும் புலாவை மென்றபடியே சலித்தாள்.

"என்னம்மா... உன் பிள்ளைக்காக நீ இதைக் கூடவா செய்யமாட்டே?" என்று அவனும் தொடர்ந்து வழிந்தான்.

"அதான் செஞ்சுகிட்டு இருக்கேனே... இன்னும் என்ன?" — என்று வெங்காய ரைதாவை ஒரு ஸ்பூனில் ஒரே தள்ளு தள்ளிக் கொண்டு மொச்சு மொச்சு என்று சப்தம் வருமளவு வாயை அரைத்தாள்.

இடையில் நர்ஸ் ஒருத்தி எட்டிப் பார்த்தாள்.

"என்ன ரஞ்சிதம், புலாவ் சாப்பிட்றியா?"

"இருக்கட்டும்மா... தம்பி எல்லாருக்கும் இன்னிக்கு ஸ்பெஷல் மீல்சே வாங்கித் தந்துட்டார்..."



"என் தலையெழுத்து பார்— ஒரு பொட்டச் சிறுக்கிக்காக நான் எப்படி எல்லாம் நடிக்க வேண்டி இருக்குன்னு..."

"வாஸ்தவம்தாம்மா... இருந்தாலும் ஜெயிச்சிட்டீங்களே! அதானே முக்கியம்?"

"அப்ப அவ கல்யாணத்துக்கு சம்மதிக்கும்போது நீயும் பார்த்தியா?"

"ஆமாம்மா... சம்மதம்னு சொல்லிட்டுப் போயே போயிடிச்சு. பொண்ணு நல்லா தளதளன்னு வாட்ட சாட்டமா இருக்கும்மா."

"அவ வயசுல நானும் அப்படித்தான் இருந்தேன். இவன் பிறக்கவும் தான் கட்டு விட்டுப் போச்சு."

"தம்பிக்கு ஏத்த ஜோடிதான்... சொல்லப்போனா ஒருபடி மேலன்னுகூட சொல்வேன்."

"அதான் அவகிட்ட அவளுக்குத் தகுந்த மாதிரி பேசறான். என்கிட்ட என் உயிரை எடுக்கறான்."

"விடுங்க... எல்லாம் நல்லவிதமா முடிஞ்சிடிச்சுல்ல..."

— நர்ஸ் சொல்லிவிட்டுத் திரும்பின மறுநொடி அதிர்ச்சி காத்திருந்தது. அந்த வார்டின் வாசலில் ஒரு சிறிய புன்னகையுடன் சாருலதா. அவளைப் பார்த்த நொடி விவேக்கிற்குக் காலடியில் நிலம் இரண்டாகிற மாதிரி ஒரு அவஸ்தை. ராஜமோ புலாவும் கையுமாகப் பேந்த பேந்த விழித்தாள்.

நர்ஸ் நைசாக நழுவத் தொடங்கினாள்.

"வா... சாரு... அம்மாவுக்கு இப்ப உடம்பு கொஞ்சம் பரவால்ல." — விவேக் சமாளிக்க முயன்றான்.

"அப்படியா?" — சாருலதா கேட்ட தொனியில் ஒரு கேலி.

"இல்ல சாரு... அது வந்து... நீ கல்யாணத்துக்கு சரின்னு சொன்ன உடனேயே, அம்மாக்கு ஒரு தனி தெம்பு வந்துடுச்சு. அரைமணில பாடில ஏகப்பட்ட மாற்றம்..."

"அப்படியா?"—திரும்பவும் அதே கேலியான தொனி.

"ஆமாம் சாரு... விட்டா அம்மா இப்ப ஓடிக்கூடப் போயிடுவாங்க. டாக்டர்தான் நாளைக்கு டிஸ்சார்ஜ் ஆகட்டும்னு சொன்னாங்க..."

"ஓ..."

"டேய்... என்னடா அவ என்னமோ அப்படியா அப்படியான்னு பலமா பீடிகை போட்றா... நீ கதை சொல்லிக்கிட்டு இருக்கே..."

"நான் பீடிகை போட்றேனா...? இல்ல அத்த... ஆனா உங்க பிள்ளை சொல்றது நிச்சயம் கதைதான்... எழுதினா விறுவிறுப்பா இருக்கும்."

"போதும்... நீ பாக்கற தோரணை—பேசற விதத்துலயே இங்கே நாங்க பேசுனதைக் கேட்டுட்டேன்னு தெரியுது. இப்ப சொல்றேன்... இது உன்னைச் சம்மதிக்க வைக்க செய்த குறுக்கு வழிதான். இப்ப என்னடி சொல்றே?"

"குறுக்கு வழில வந்து என்னை வளைச்சுப் பிடிக்கற அளவுக்கு நான் அப்படி என்ன பெரியவ அத்தை...?"

"நீ என் வரைல ஒண்ணுமில்லதான். ஆனா இவன் கண்ணுக்கு நீ ரம்பையா தெரியறியே. நான் என்ன செய்யட்டும்?"

"அப்ப உங்க வரைல உங்களுக்கு இஷ்டமில்ல... பையனுக்காகத்தான் சம்மதிக்கிறீங்க... அப்படித்தானே?"

"ஆமாம்... இப்ப இவன் மனசை மாத்திக்கிட்டா இவனுக்குக் கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணே தயாரா இருக்கு. தெரியுமா?"



"அப்ப முதல்ல கோடீஸ்வரப் பொண்ணைப் பிடிங்க. அந்தஸ்தும்... அந்தஸ்தும் ஒண்ணு சேர்றதுதான் சரி, நான் கிளம்பறேன்."

— சாரு பட்டென்று ஒரு முடிவைக் கூறிவிட்டு திரும்பி நடந்தாள்.

"சாரு... சாரு..." அவன் முடிந்த வரை அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். பிறகு கையை உதறிக் கொண்டான்.

"விட்றா. அவளுக்கு எவ்வளவு திமிரு இருந்தா இப்படி எடுத்தெறிஞ்சிட்டுப் போவா... இவளை விட அழகா சிவப்பா உனக்கு நான் பொண்ணு பாக்கறேன்..."

— ராஜம் மகனைத் தேற்றப் பார்த்தாள். அவனோ வெண்ணெய் திரண்டு வந்ததும் தாழி உடைந்துவிட்ட வெறுப்பில் இருந்தான்.

சாரு வீட்டிற்குள் நுழையும் முன் செய்தி விஸ்வ நாதனை அடைந்துவிட்டது. சாரு உள்ளே நுழையவும் விஸ்வநாதன் முறைப்புடன் பார்த்தார். சாரு அதை அலட்சியம் செய்தாள்.

"சாரு... உன் மனசுல நீ என்ன நினைச்சுட்டிருக்கே?"

"நான் எதுவும் நினைக்கலியேப்பா... திடீர்னு எதுக்குப்பா இப்படி ஒரு கேள்வி...?"

—அவள் கையை ஆட்டியபடியே சொல்லவும், அந்த நீலக்கல் மோதிரம் அவர் கண்ணில் பட்டது.

"இந்த சனியனை எடுத்துக் கையில் போட்டுக் கிட்டேன்னு கேள்விப்பட்டப்பவே நினைச்சேன். இனி ஒரு நல்ல காரியம் கூட நடக்காதுன்னு... அதே மாதிரி ஆகிப் போச்சு."

"தப்புப்பா... இது என் வரைல. நல்லதுதான் செய்தி ருக்கு. நான் எப்பேர்ப்பட்ட ஒரு பிரச்சனையில் இருந்து தப்பிச்சிருக்கேன் தெரியுமா?"

"போதும் நிறுத்து... உனக்குச் சுதந்திரம் கொடுத்து வளர்த்தது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பதான் தெரியுது..."

"சுதந்திரங்கறது யாரும் யாருக்கும் தர முடியாதுப்பா. இது ஒண்ணும் அடிமை தேசம் இல்லை; நீங்களும் ராஜா கிடையாது."

"வாய மூடு... உனக்கு ஒரு நல்ல காரியம் நடக்கணும்னு ஆசைப்பட்டேன். விவேக்குக்கு என்ன குறை.. எவ்வளவு ஆசை இருந்தா அவன் இப்படி நாடகம் போட்டிருப்பான்?"

"நான் அதை ஆசையா பாக்கல. நிச்சயம் அதுக்குப் பின்னால பெருசா ஏதோ விவகாரம் இருக்கு."

"என்ன விவகாரம்.. புடலங்கா விவகாரம்? அவனுக்கு என்ன இந்த ஊர்ல பொண்ணா கிடைக்காது?"

"அப்புறம் எதுக்கு... ஒரு ஏழையான எனக்காக இப்படி டிராமா போடணும்?"

"அதான் சொன்னேன்ல... உன் பேர்ல அவனுக்கு அவ்வளவு ஆசை."

"சும்மா நேரா காதல்னே கூட சொல்லுங்க. தப்பில்ல. ஆனா என்கிட்ட பேசும்போது 'அதனால என்ன... உன் விருப்பப்படி நாலைஞ்சு வருஷம் போகட்டும்'னு சொல்லிட்டு அங்க அம்மாவைத் தூண்டிவிட்டு நாடகம் போட்றதுல்லாம் நல்ல செயலா தெரியலியே..."

"ஆமாங்க... சாரு சொல்றதுதான் சரி..."

திலகம் மகளுக்காக வக்காலத்து வாங்கினாள்.

"வேலிக்கு ஓணான் சாட்சியாக்கும்? என் வரைல நான் இவளைப் பெத்துட்டு மாப்ளைக்காக லோலோன்னு



அலையணும்னு இருந்தா யாரால என்ன செய்ய முடியும்?"

"அப்பா உங்களுக்கு அந்த கஷ்டம்லாம் நான் தரமாட்டேன். உங்களை எல்லாம் நல்லவிதமா வெச்சுக் கணும்னுதான் நான் வேலைக்குப் போகவே விரும்பறேன்."

"போதும்...முதல்ல அந்த மோதிரத்தைக் கழட்டிக் கொடு."

"இது உங்களை என்னப்பா செய்தது?"

"கழட்டிக் கொடுக்கறியா இல்லையா?"

"முடியாதுன்னா?"

"அந்த விரலையே ஒடிச்சிடுவேன். அதுதான் எல்லா குழப்பத்துக்கும் காரணம்."

— அலறினார் விஸ்வநாதன். அவளும் அரை மனதாகக் கழற்றி கையில் கொடுத்தாள். கொடுக்கும்போது அவள் பார்வையில் அனல் பறந்தது. அப்படியே காதுக்குள் அந்தக் குச்சி ஜோசியக்காரி சொன்ன 'இது இருந்தா ஒரு மாதிரி.. இல்லாட்டா ஒரு மாதிரி' என்பதும் காதில் விழுந்தது.

# 8

'கணையாழி' என்பதற்கு நம்பூதிரி சொன்ன விளக்கம் என்னை மட்டும் அல்ல, என் தாத்தாவையும் வெகுவாக சிந்திக்க வைத்தது. ஆழி என்றால் கடல். கணை என்றால் விசையுடன் தாக்க வரும் ஒன்று... அந்தக் கணையானது ஏராளமாய் ஒரு கடல் போல அலை அலையாய் சரம் சரமாய் வருவது என்பது உட்பொருள். அதாவது ஒரு கணையாழி யில் இருந்து அதன் கதிர்கள் கடல் அலைபோல் அடுக்கடுக்காய் வந்தபடி இருக்கும் என்பது உட்பொருள்.

கணையாழிக்கு இன்னொரு பெயர்தான் மோதிரம். மோதிரம்... அதாவது பெரிய சக்தி என்பதுதான் மோதிரம் என்றானது என்பார்கள்.

பெயரிலேயே பொருள் இருக்கிறது!'

– சோமநாத பிள்ளை

தொழிலதிபர் ராஜரத்னத்தின் கார்ப்பரேட் ஆபீஸ். இங்கிலாந்து நாட்டின் ரோஸ்வுட்டைக் கொண்டு செய்யப்பட்ட செக்ஷன்கள்! தரை முழுக்க ஒருவித நைலான் ஸ்பாஞ்ச் கார்ப்பெட். சென்ட்ரலைஸ்டு ஏ.சி.யின் இதமான பதமான தழுவலில் ஒரு டேபிள் தவறாமல் இன்டர்காம். சுழல் நாற்காலிகள் — அதில் யூனிஃபார்முடன் டை கட்டிய ஊழியர்கள்.

டெகரேடிவ் லாம்ப்ஸின் சந்தன வெளிச்சம் அலுவலகம் முழுக்க விரவிக் கிடக்க, அலுவலகச் சூழலில் ஒருவித குபேரக் குளுமை. பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள் சாருலதா. அடிக்கடி சில ஃபைல்களுடன் பலர் குறுக்கும் நெடுக்குமாக போய் வந்தபடி இருக்க அப்போதெல்லாம் சாருமேல் ஒரு பார்வை.

சாருவை இன்டர்வியூ செய்த ஆபிசர் தன் அறைக்குள் இருந்து கர்ட்டனை விலக்கி சாரு வந்திருப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். பின் இன்டர்காம் வழியாக ஜே.எம்.டி. ராம்குமாருக்கு போன் செய்தார்.

"சார்... அந்தப் பொண்ணு இன்னிக்கு ட்யூட்டில ஜாய்ன் பண்ண வந்திருக்கா..."

"குட்... அவளோட என் ரூமுக்கு வாங்க."

"ஓ.கே. சார்..." அவர் உடனேயே எழுந்திருந்து சாருவை நோக்கி நடந்தார். அவள் முன் சென்று நின்றவர் "ஹலோ மேடம்..." என்று கையைக் குலுக்குவதற்காக நீட்டினார். அவளோ பதிலுக்குக் கும்பிடு போட்டாள். அவருக்குக் கொஞ்சம் சுருக்கென்றது.



"என் கூட வாங்க. ஜே.எம்.டி. பார்க்கணும்னார்..." — என்று டையை தளர்த்திக் கொண்டு முன்னால் நடக்க, சாரு பின் தொடர்ந்தாள். சல்வார் கமீஸில் துப்பட்டாவுக்குள் சற்று துருதுருவென்றிருந்தாள். காலில் சிவப்புத் தோலால் ஆன செருப்பு; பாண்டிச்சேரி மதர் ஆசிரமத்துக்குப் போனபோது அதன் ஞாபகமாக வாங்கிய டம்பப்பை. அதனுள் அவளது பாக்கெட் மணி மற்றும் டிரைவிங் லைசென்ஸ் வகையறாக்கள்...!

ஜே.எம்.டி. அறைக்குள் ஒரே வாசம். படு சீரியஸாக ஃபைல் பார்த்துக் கொண்டிருந்தான் ஜே.எம்.டி. ராம்குமார். ஆபிசர் வந்து நிற்கவும் நிமிர்ந்தான்.

"யெஸ்..."

"சார் இவங்கதான் சாருலதா... நம்ம எம்.டி.க்கு பர்சனல் செக்ரட்டரியா செலக்ட் ஆகியிருக்கறவங்க..."

"ஐ.சி.. பிரீவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் ஏதாவது இருக்கா?" — பேனாவைச் சுழற்றிக் கொண்டே அவன் கேட்ட கேள்விக்கு, சாருலதாவை ஒரு பார்வை பார்த்தார் ஆபீசர்.

"இல்ல சார்... நான் இப்பதான் கோர்ஸ் முடிச்சேன். நான் ஒரு மெரிட் ஸ்டூடண்ட். என்னோட ஃபர்ஸ்ட் அப்ளிகேஷனே எனக்கு ஜாப் தந்திருக்கு..."

"ஓ... வெரிகுட். ஆனா பிரீவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் இருந்தா நல்லா இருக்கும். ஏன்னா ஒரு எம்.டி.யோட ஜாப் ப்ரெஷர்ங்கறது சாதாரணமானது கிடையாது. ஒரு ஒர்க்கரோட ப்ரெஷருக்கும் எம்.டி.யோட ப்ரெஷருக்கும் நிறையவே வித்யாசம் உண்டு."

"ஐ நோ சார்... நான் அது புரிஞ்சு நடப்பேன்."

"குட்... அப்புறம் இன்னொரு விஷயம். இந்த எட்டு மணிநேரம் டைம் ஃப்ரேம்ல ஒர்க் பண்றதும் சாத்யமில்ல,

அடிக்கடி டூர் போக வேண்டியிருக்கும். அதுல ஃபாரீன் கண்ட்ரீசும் அடக்கம். உங்க ஃபேமிலில எதுவும் சொல்லமாட்டாங்களே...?"

"நோ சார்... இந்த விஷயத்துல நான் எடுக்கறதுதான் முடிவு. என் பேரண்ட்ஸ் எனக்குப் பரிபூரண சுதந்திரம் கொடுத்திருக்காங்க..."

"குட்... மிஸ்டர் ஆபீசர். நீங்க போகலாம். நான் இவங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும்..."

— ராம்குமார் அவருக்கு ஒரு தினுசான சிக்னல் தர அவரும் முதுகை வளைத்து "ஓ.கே. சார்..." என்று சொன்னபடியே விலகிக் கொண்டார்.

"டேக் யுவர் சிட் சாருலதா..." — ராம்குமார் அவளுக்குத் தன் இருக்கைக்கு நேர் எதிர் இருக்கையைக் காட்டினான். கையில் பேனா சுழன்றபடியே இருந்தது.

"தேங்க்யூ..." அவளும் அமர்ந்து கொண்டாள். அவனை ஆழமாகப் பார்க்கவும் ஆரம்பித்தாள்.

"மிஸ் சாரு... உங்ககிட்ட பர்சனலா பேசத்தான் நான் அவரை போகச் சொன்னேன். இன்டர்வியூவிலேயே உங்ககிட்ட கொஞ்சம் கேட்கக் கூடாத கேள்வியை எல்லாம் கேட்டிருப்பாங்க... ஐ.நோ..."

"ஆமாம் சார்... ரொம்ப சில்லி கொஸ்டின்ஸ். எனக்கு இப்பகூட அதை நினைச்சா வெறுப்பா இருக்கு..."

"வாஸ்தவம்தான்... ஆனா எங்களால அதைத் தவிர்க்க முடியல. இன்ஃபாக்ட் நார்த் இண்டியால என் அப்பாவைப் போலவே ஒரு தொழிலதிபரை அவரோட பி.ஏ. தன் அழகைக் காட்டி மயக்கி ரொம்பவே குழப்பத்தை உண்டாக்கிட்டா... அதுல இருந்து அவரை மீட்கறதே ஒரு பெரும்பாடா போச்சு."



"எங்கயோ யாருக்கோ நடந்த ஒரு விஷயத்தை வெச்சு எல்லாரையும் அப்படி நினைக்கறது தப்பு இல்லையா சார்..."

"அதுவும் உண்மைதான். இருந்தாலும் ஒரு பயம். கொஞ்சம் வெளிப்படையாவே பேசறேனே... உங்களுக்கு இந்த ஜாதகம் ஜோசியத்துல நம்பிக்கை உண்டா?"

"நான் அதைப் பத்தி எல்லாம் யோசிச்சதே இல்ல. ஆனா சில நாட்களா அந்த விஷயத்துலயும் ஏதோ மீனிங் இருக்கற மாதிரி நினைக்கறேன்."

"அதுதான் சரி... நான் அதை ரொம்ப நம்பறவன். ஏன் சொல்றேன்னா என் அப்பாவோட ஜாதகப்படி அவருக்கு இந்த வயசுல கல்யாணம் நடக்க வாய்ப்பு இருக்காம். எங்க ஜோசியர் சொன்னார்..."

"அதனால...?"

"அதுதான் நான் உங்கள மாதிரி பெண் பர்சனல் செகரட்ரியை நினைச்சு பயப்படக் காரணம்."

"உங்க பதில் எனக்கு சிரிப்பைத்தான் தருது... நான் தெரியாமதான் கேக்கறேன். இவ்வளவு பயப்பட்ற நீங்க ஒரு மேல்... ஐ மீன் ஆண் பர்சனல் செகரட்ரியை சூஸ் பண்ணியிருக்கலாமே...?"

"அங்கதானே சிக்கலே... அப்பா ரொம்ப ஸ்ட்ரிக்டா ஃபீமேல் செகரட்ரிதான் வேணும்னு சொல்லிட்டார்."

"அப்ப அவர்கிட்டயும் பிரச்னை இருக்குன்னு சொல்லாமே சொல்றீங்களா?"

— நறுக்கென்று சாரு கேட்ட கேள்வியின் முன் ராம்குமாரே சற்று திணறி விட்டான்.

"அது... அது..."

"சும்மா சொல்லுங்க சார். நான் இன்னும் ஜாய்னிங் ஆர்டர்ல சைன் பண்ணலை. நீங்க சொல்ற பதிலை வெச்சு அப்படியே திரும்பிப் போயிட்றேன்."

"நீங்க போயிடுவீங்க. ஆனா இதுக்கு உடன்பட்டு ஒரு பெண் வந்தா என் கதி?"

"சின்னம்மாவா ஏத்துக்க வேண்டியதுதான். வேற வழி...?"

"என்ன சாருலதா கிண்டல் பண்றீங்களா?"

"கிண்டல் இல்ல... இந்த மாதிரி இருந்தா இப்படித் தான் நடக்க முடியும். அதைத்தான் சொன்னேன்."

"உங்க வெளிப்படையான பேச்சு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்களால நிச்சயம் பிரச்னை வராது. சப்போஸ் அப்பா உங்ககிட்ட ரொம்ப விபரலா நடந்துக்கப் பார்த்தா என்கிட்ட சொல்லுங்க. நான் கவனிச்சுக்கறேன். நீங்க இப்பவே ட்யூட்டில ஜாய்ன் பண்ணலாம்."

— ராம்குமார் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து அதை வெளிப்படுத்தவும் செய்தான். சாருவோ அவனை மலங்க மலங்க பார்த்தாள்.

"என்ன மேடம்...?"

"இல்ல... முதல் நாளே என் நாலெட்ஜ் பத்தியோ ஜாப் பத்தியோ பேசாம கேரக்டர்ல போய்ட்டீங்களே... அதான்..."

"எனக்கும் பிடிக்கலதான். ஆனா ஒரு சின்ன எச்சரிக்கை பண்ணி வைக்கறது நல்லது இல்லையா? அடுத்து என் வரைல எங்ககிட்ட வேலை பாக்கறவங்க யாரும் சிறு கஷ்டம்கூட படக்கூடாது. அவங்க வாழ்க்கையை நான் என் வாழ்க்கையாவே பாக்கறேன்..."





— ராம்குமாரை ஒரு மதிப்பான புன்னகையுடன் எதிர் கொண்டவள் சீட்டை விட்டு எழுந்து நின்றாள்.

"ஆல் த பெஸ்ட்..." அவன் தன் வலக் கரத்தை நீட்டினான். அவள் சற்றுத் தயங்கிவிட்டுப் பதிலுக்கு நீட்டினாள்.

"இன்ஃபாக்ட் நான் முதன்முதலா தொட்ற ஒரு இளம் பெண் கரம் இது" என்றான்.

"ரியலி?"

"ஆமாம். இதுவரை நான் ஒரு பெண்ணைக்கூட தொட்டதில்ல."

"இது ஒரு உண்மையான பொய்யா, இல்ல பொய்யான உண்மையா?"

"சத்யமான உண்மை சாருலதா."

"அப்ப இப்ப மட்டும ஏன் தொட்டீங்க?"

"என்னமோ தெரியல. உங்க பர்சனாலிடி எனக்குப் பிடிச்சுப் போச்சு. அதான் காரணம்னு நினைக்கறேன்."

"பர்சனாலிடின்னா...?"

"நான் மென்ட்டல் பர்சனாலிட்டியைச் சொன்னேன்."

"தேங்க்யூ..." — சாருலதா அவனிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியில் சென்றாள். அடுத்த நொடியே இன்டர்காமில் இன்டர்வியூ ஆபிசரை அழைத்தான். அவரும் வளைந்து நெளிந்தபடி எதிரில் வந்து நின்றார்.

"என்னய்யா... இந்தப் பொண்ணு இவ்வளவு மொரடா இருக்கா? வேலைக்காக சிலர் என்னவேணா செய்யத் தயாரா இருக்காங்க. இவ கொஞ்சம் பிடிக்காம போனா ஓம் தூக்கி எறிஞ்சிடுவா போல இருக்கே...?"

"ஆமாம் சார்... இந்தப் பறவையை நீங்க மடக்கறது கஷ்டம்னு நினைக்கறேன்."

"அப்படித்தான் நானும் நினைக்கறேன். ஆனா ஆள் அம்சமா அல்வாத்துண்டா இருக்காளே..."

"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா எப்படி சார்?"

"சரி விடு... முதல் நாளே ரொம்ப ஆசைப்படக் கூடாது. போகப் போக என் வலைல விழ வைக்கறேன். அப்பாகிட்ட எப்படி நடந்துக்கறான்னு கவனி. அப்பா ஒரு மகாத்மாங்கறது அவளுக்குத் தெரியாது. அவர் சொந்தப் பொண்ணு மாதிரி நினைச்சு தோள்ல கை போட்டுப் பேசினா அதை இனி நிச்சயம் இவ தப்பா தான் எடுத்துப்பா. அதுதான் எனக்கு வேணும்."

ராம்குமாரின் மறுபக்கம் மிகவும் கொடுமையாக இருந்தது. அந்த ஆபிசரும் தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக நகரப் பார்த்தார்.

"நில்லு..."

நின்றார்.

"பழைய செகரட்ரி அப்புறம் எதுவும் பிரச்னை பண்ணலியே...?"

"இல்ல சார்... அவ அண்ணன்தான் அஞ்சு லட்சம் போதாதுன்னு இன்னும் அஞ்சு லட்சம் கேட்டான். கொடுத்து செட்டில் பண்ணியாச்சு. அபார்ஷனும் நல்ல படியா முடிஞ்சிடுச்சு. அடுத்து அவளுக்குக் கல்யாணம்னு அவங்கப்பா சொன்னார்..."

"கட்டாயம் கல்யாணத்துக்குக் கூப்ட்டா போகணும்யா."



"எதுக்கு சார்...? அதான் தலை முழுகிட்டீங்களே. அதோட விட்றுங்க..."

"அட்வைசா...? இதான் சாக்குன்னு எனக்கே அட்வைஸ் பண்றியா நீ?"

"சார்... மனசுல பட்டத சொன்னேன் சார்..."

"சரி சரி... போய் வேலையப் பார். என்னை மனசுக் குள்ளே திட்டாதே. திட்றதா இருந்தா நேர்லயே திட்டு..." — அவன் அப்படி கூறவும் சற்று நின்று கூர்ந்து பார்த்த அந்த ஆபிசர், "சார் நான் நேரடியாவே கேட்கறேன். நல்ல அழகான பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கிட்டு அமைதியா இருக்கலாம் இல்லையா?"

— அதெல்லாம் எனக்குக் கிடையாது. நான் இருக்கப் போறது கொஞ்சநாள்... அந்த நாட்களை ஜாலியா இருந்து அனுபவிச்சிட்டுப் போறதுதான் சரி. இப்ப நான் என்ன எந்தப் பொண்ணையாவது ரேப் பண்ணிட்டேனா? அவங்களை மயக்கறேன். அவங்களும் மயங்கறாங்க. அப்புறம் காம்பன்சேஷன் கொடுத்துட்றேன். யாரையும் ஏமாத்தி வெறுங்கையோட அனுப்பலியே..."

"இல்ல சார்... நீங்க உங்களை ஏமாத்திக்கிறீங்க..."

"இப்படித்தான் என் ஃப்ரெண்டும் சொன்னான். ஆனா என் லைஃப்ல... ஜாதகத்துல உள்ளபடிதான் எல்லாமே நடந்துகிட்டு வருது. எங்க பரம்பரைல நான் தான் மிஞ்சியிருக்கேன். இதுவரை யாரும் முப்பத்தி அஞ்சு வயதை தாண்டினதில்ல. என் அண்ணன் கார் ஆக்சிடெண்ட்ல எப்படி செத்தான்னு உனக்கே தெரியும். என் அம்மாவும் ஒரு ஆக்சிடெண்ட்லதான் போனாங்க. ஆக்சிடெண்ட்ல போகணும்கறது எங்க தலை எழுத்து..."

"இல்ல சார்... இப்படி ஜாதகம், ஜோசியம்னு நீங்க நம்பறதுதான் ஆழ் மனசுல வேலை செஞ்சு உங்களை

ஏமாத்திகிட்டே இருக்கு. உங்க எண்ணத்துல மாற்றம் வரணும். அப்படி வந்துட்டா நிச்சயம் எல்லாம் சரி ஆகிடும்."

"சரி... சரி... நீ போய் வேலையப் பார். விட்டா பெரிய மனோதத்துவ நிபுணராட்டம் பேச ஆரம்பிச்சி டுவே" என்ற ராம்குமார் அந்த ஆபிசர் எதிரிலேயே ஒரு பட்டாணி சைசுக்கு அபின் உருண்டையை எடுத்து நாக்குக்குக் கீழே வைத்துக் கொண்டான்.

'ஹ்ம்... எங்கிருந்து தான் கிடைக்கிறதோ?' என்று மனதுக்குள் கேட்டபடியே விலகினார் அந்த ஆபிசர். அவனிடம் ஒரு மெல்லிய மிதக்கும் தன்மை தொடங்கி விட்டிருந்தது.

# 9

'அந்த மோதிரம் பற்றி பல சங்கதிகள் தெரியவரவும், என் தாத்தா அதை கங்கை நீருக்குள் போட்டு மூடி வைத்து விடுவது நல்லது என்று தீர்மானித்து அதன்படியே செய்தார். அதன் செயல்பாட்டுக்குக் கதிர்கள் காரணம் என்பதால் அந்த நீருள்ள பாத்திரத்தை மேலே ஒரு தகடால் மூடியும் விட்டார். ஆனாலும் அது தன் சக்தியைக் காட்டத்தான் செய்தது. ராமன் தன் கணையாழியை அனுமன் மூலம் சீதைக்குக் கொடுத்து விடுகிறான். அதே போல சீதையும் அனுமனிடம் தன் நினைவாக ராமனுக்கு ஜடை பில்லையை கொடுத்து விடுகிறாள். கணையாழி சீதையை அடையவும் சீதைக்கு தனி தெம்பு. இடம் மாறிய பொருட்கள் இரண்டும் ஆபரணங்கள் தாம். ஆனால் அதன் பின் அவை வரலாற்றையே மாற்றி எழுதின!'

— சோமநாத பிள்ளை



படுமிடுக்காக, தனது கேபினில் அமர்ந்திருந்தார் ராஜரத்னம். வயது அறுபதைத் தொட்டுவிட்டது. மிடுக்கு குறையவில்லை. சிக்கென்ற உடம்பு. அதிக இறுக்கமும் இன்றி தளர்வும் இன்றி கச்சிதமான உடை. அதை டக் செய்து விட்டிருக்கும் அவரது ஸ்டைலில் முதுமையிலும் ஓர் இளமை 'பளிச்'சென்று தெரிந்தது. கண்களுக்கு என அவர் அணிந்திருக்கும் கறுப்புப் பட்டைக் கண்ணாடியும் ஒரு தனி அழகை அவருக்கு அளித்திருந்தது. முக்காலுக்கு மேல் தலை நரைத்து விட்டது. இருந்தாலும் கிராப்பில் ஒரு சாலைவரிசை அழகாக அமுங்கிக் கிடந்தது. கண் களிலும் ஓர் ஒளி!

சாருலதாவால், ராஜரத்னத்தின் மேல் வைத்த பார்வையை எடுக்க முடியவில்லை. பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். கூடவே ஜி.எம்! ராஜரத்னம் நிமிரவும், ஜி.எம். பரபரப்பானார்.

"சார்... இவங்கதான் உங்க பர்சனல் செகரட்டரி... பேர் மிஸ் சாருலதா!"

"குட்... உக்காரும்மா. ஏன் நிக்கறே?" அவர் உடனே இருக்கையைக் காட்டினார். அவர் வரையில் அவளுக்கான முதல் வார்த்தையே 'குட்' என்பதுதான். அவளும் அமர்ந்தாள்.

"ஓ.கே. மிஸ்டர் ஜி.எம்... நீங்க உங்க ஒர்க்கைக் கவனியுங்க. நான் இனி பார்த்துக்கறேன்."

— அவரும் நகர்ந்தார். அவள் சற்று ஆழமாக அந்த மகத்தான தொழிலதிபரைப் பார்த்தாள். துளிகூட மருவே இல்லாத தோற்றம். இவரிடமா பெண்பித்து இருக்க முடியும் என்று ஒரு கேள்வி. டி.வி. ஸ்க்ரீன் ஸ்க்ரோலிங் போல ஓடியபடியே இருந்தது.

"உன்னை நான் சாருன்னு கூப்பிடலாமா... உங்க வீட்ல எப்படி கூப்பிடுவாங்க?"

— அவர் ஒரு ஃபைலை புரட்டியபடியே தன் இணைக்கத்தை ஆரம்பித்தார்.

"சாருன்னு தான் சார் கூப்பிடுவாங்க. நீங்களும் அப்படியே கூப்பிடுங்க சார்..."

"தேங்க்யூ... சார்'னா ஆண்பால்—சாருன்னா பெண் பாலா?" — அவர் அடித்த ஜோக்கில் அர்த்தம் இருந்தது. அவளும் ரசித்து சிரித்தாள்.

"நீ எந்த காலேஜில படிச்சேம்மா...?" — அந்த 'அம்மா'வில் ஒரு தனி கரிசனம்.

"எத்திராஜ்ல சார்..."

"குட்... ஸ்போர்ட்ஸ்ல இண்ட்ரஸ்ட் உண்டா?"

"நிறைய சார்..."

"டென்னிஸ்...?"

"அது என்னோட ஃபேவரைட் கேம் சார்."

"அப்ப நான் ஃபாரின் போகும் போது இனி நல்லாவே பொழுதுகள் போகும். ஏன்னா நானும் ஒரு டென்னிஸ் ப்ளேயர்."

"ஓ... கிரேட் சார்..."

"உன்னோட ஐ.க்யூவுக்கும், லைஃப் வியூவுக்கும் ஒரு கேள்வி... கேக்கட்டுமா?"

"கேளுங்க சார்..." — சாருலதா நிமிர்ந்து அமர்ந்தாள்.

"டென்னிசும் விளையாட்டு தான்; கிரிக்கெட்டும் விளையாட்டுதான். ஆனா டாப்லெவல்ல டென்னிஸ் மதிக்கப்படுது. ஜனங்களால கிரிக்கெட்தான் ரசிக்கப்படுது. ஏன் தெரியுமா?"

— அவளும் அந்த கேள்வியை வெகுவாக ரசித்தாள்.



"சார்... டென்னிஸ்ங்கறது தனிநபர் திறமை. கிரிக்கெட் தனிநபர் திறமையோட டீம் ஒர்க்கும் கலந்திருக்கிற விஷயம். டென்னிஸோட எல்லை சின்னது. வெற்றி தோல்வியை இரண்டே இரண்டு திசைதான் தீர்மானிக்குது. கிரிக்கெட் அப்படியில்லை. ஒரு வட்டமான கிரவுண்டுல எங்கவேணா, எதுவேணா நடக்கும். மனித வாழ்க்கைல எங்க இருந்து எப்படி பிரச்சனை வரும்னு யாராலயும் சொல்ல முடியாது. கிரிக்கெட்டுக்கும் இது பொருந்தும். ஆனா டென்னிஸ்ல இப்படி பரபரப்புக்கு பெரிய இடமில்ல. சுருக்கமா சொல்லப்போனா டென்னிஸ் ஒரு தனி நபர் திறமை. கிரிக்கெட் ஒரு டீமோட திறமை. பெரிய வெற்றியாளர்கள் டென்னிஸைத் தான் விரும்புவாங்க. நடுத்தர வாழ்க்கை வாழறவங்க கிரிக்கெட்டைத் தான் விரும்புவாங்க..."

— சாருலதாவின் பதிலில் கிட்டத்தட்ட அவர் நினைத்திருந்த விடை.

"குட்... ஓரளவு சரியாதான் சொல்லியிருக்கே. இருந்தாலும் இன்னும் சுருக்கமா சொல்லப்போனா டென்னிஸ்ல அவுட் ஆகற விதம் ஒரே மாதிரி... கிரிக்கெட்ல அவுட் ஆகற விதம் பல மாதிரி... ஆகையால அதுல த்ரில் அதிகம். த்ரில் அதிகமான எதையும் எல்லோரும் விரும்பு வாங்க. ஆகக்கூடி ரசிக்கறதுக்கு கிரிக்கெட், ஆனா வளர்த்துக்கறதுக்கு டென்னிஸ் தான்."

"ரொம்ப சரி சார்..."

"யோசிச்சுப் பதில் சொல்... நான் உன் பாஸ்ங் கறதுக்காக ஆமாம் சாமி போடாதே."

"இல்ல சார்... எனக்கு ஜால்ரா போடத் தெரியாது. நான் மனசுல பட்டதைப் பேசறவ."

"அதுதான் எனக்கும் வேணும். நான் ஒரு தொழிலதிபரா இருக்கலாம். என்கிட்ட பல வேலைகள்

இருக்கலாம். ஆனா நானும் ஒரு மனுஷன்தான். எனக்கு ஸ்பெஷலா இரண்டு இதயம், நாலு கிட்னின்னு கடவுள் கொடுத்துடலை. பசிச்சா அதே இரண்டு இட்லி, இரண்டு தோசைதான். எவ்வளவு என்கிட்ட இருக்குங்கறது விஷய மில்லை. எப்படி நான் இருக்கேங்கறது தான் விஷயம்."

— ராஜரத்னத்தின் விளக்கத்தில் ஆழ்ந்த கருத்து இருந்தது. சாருவையும் அது வெகுவாகக் கவர்ந்தது. அடுத்து அவர் தொழில் ரீதியாகப் பேசத் தொடங்கினார்.

"சாரு... என்கிட்ட நிறைய பணம் இருக்கு. ஆனா என்கிட்ட இல்லாத விஷயம் நேரம்... யெஸ்... எல்லாரை யும் போல எனக்கும் 24 மணி நேரம்தான். அதுக்குள்ள என் கடமைகளை நான் பண்ணி முடிக்க ரொம்பவே சிரமப்பட வேண்டியிருக்கு. ஆகையால் தங்கத்தை விட விலை மதிப்பில்லாதது என்வரைல நேரம். அதை யாருக்கு எவ்வளவு தரணும்கறதுல உனக்கு நல்ல கிளாரிட்டி இருக்கணும். இது ரொம்ப முக்கியம். அப்புறம் என் கையெழுத்துக்காக வர்ற பேப்பர்ஸ் என் மேஜைல தேங்கறது எனக்குப் பிடிக்காது. ஆகையால எந்த பேப்பரா இருந்தாலும் சரி அன்னிக்கே வெளியேறிடணும். அரசியல் வாதிகள் டேபிள் மாதிரியோ, இல்லை கவர்மெண்ட் ஆபிஸ் பேப்பர்கள் மாதிரியோ இங்க எதுவும் தேங்கிடக் கூடாது. அதேபோல நான் முடிவு எடுக்கறதுல எப்பவும் ரொம்ப ஷார்ப். தப்போ, சரியோ எடுத்தா எடுத்ததுதான். ஆகையால் என்கிட்ட வரும் எந்த விஷயமும் குழப்ப மானதா இருக்கவே கூடாது. இப்போதைக்கு இவ்வளவு தான். மிச்சத்தை நீ போகப் போகத் தெரிஞ்சுக்கலாம். பை த பை உனக்கும் எனக்கும் மட்டும் பிரத்யேகமா ஒரு செல்ஃபோன் வெச்சுக்கோ. அந்த நம்பர் வெளியே யாருக்கும் தெரியக் கூடாது. அப்புறம் நியூசென்ஸா போயிடும். ஆம் ஐ ரைட்?"



"எவ்ரிதிங் ரைட் சார்."

"குட்... அப்புறம் நீ சாயந்திரம் அஞ்சரையானா கிளம்பிடலாம். ஒரு வயசுப் பொண்ணு இருட்டின பிறகு கிளம்பறது சேப்டி கிடையாது. என கார்லயே போய் இறங்கிட்டு காரை அனுப்பிரு. இல்ல உனக்கு ஒரு கார் வெச்சுக்கோ. கம்பெனி உனக்கு அதுக்கு அலவன்ஸ் தந்துடும். உனக்கு ஆட்சேபனை இல்லையே...?"

"நோ சார்..."

"சரி. இன்னிக்கு இந்த அளவு போதும். ஜி.எம். கூட போய் ஆபீஸ்ல எல்லாரையும் அறிமுகப்படுத்திக்கோ. உன் கேபின் பக்கத்துல தான். ஆமா உன்னை என் பையன் பார்த்தானா?"

"யூ மீன் ஜே.எம்.டி.யா சார்?"

"ஆமாம். பார்த்துருக்க மாட்டானே..."

"இல்ல சார்... அவர் என்னைப் பார்த்து நிறைய அட்வைஸல்லாம் பண்ணினார்."

"அடேங்கப்பா. பரவாயில்லையே...!"

"ஏன் சார்... அது அவர் கடமைதானே?"

"கடமைதான். ஆனா அதுல ஒரு ரெகுலாரிடி இருக்க ணும். என் விஷயம்னாலே அவன் எதுலயும் தலையிட மாட்டான். பர்ட்டிகுலரா பெண்கள்னா அவனுக்கு அலர்ஜி. இன்ஃபாக்ட் அவனுக்கும் ஒரு பர்சனல் செகரட்டரி தேவை. வெச்சுக்கச் சொல்லி எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். அது என்னமோ தெரியலை. அவனுக்கும் பர்சனல் செக்ரட்டரிக்கும் கொஞ்சம் கூட ராசியேயில்லை. ஒரு பெண் வந்தா... திடீர்னு நின்னுட்டா. அடுத்தவ ஒரு மாசம் கழிச்சு நின்னுட்டா. மூணாவதா வந்தவளும் கன்டினியூ பண்ணலை. சம்திங் ராங்."

—ராஜரத்னம் ராம்குமார் பற்றி சொன்னது அவளுக்குள் கொஞ்சம் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. அவர் பேசுவதையே அமைதியாக வெறித்தாள்.

"என்னம்மா... நான் சொல்றதை ஏதோ ஒரு புது விஷயம் மாதிரி அப்படி கேக்கற... நான் இதை எல்லாம் முதல்நாளே உன்கிட்ட ஏன் சொல்றேன், தெரியுமா?

அவளும் அவர் அடுத்து கூறப்போகும் அந்த முக்கியமான காரணத்தை அறிந்து கொள்ளத் தயாரானாள்.

"என் மகன்கிட்ட ஏதோ ஒரு குறைபாடு இருக்கு. அது என்னன்னு கண்டுபிடிக்க வேண்டியது ஒரு அப்பாவோட கடமை. என் சார்புல நீ அதைக் கவனி. அப்பப்ப என் கவனத்துக்குக் கொண்டு வரத் தவறாதே. அப்புறம் அவனுக்கு ஒரு செக்ரட்டரி அமையற வரை நீயே அவனுக்கும் செக்ரட்டரியா இரு. இதை நான் இப்பவே ஒரு ஆர்டரா போட்டுட்றேன்."

— அவர் சொன்ன கையோடு இன்டர்காமில் கை வைத்து பர்சனல் ஆபிசரை இழுத்துப் பிடித்தார்.

"மிஸ்டர் சரவணன்! என்னோட பர்சனல் செக்ரட்டரி தான் ஜே.எம்.டிக்கும் இனிமேல் செக்ரட்டரி. அதுக்கான இன்ஃபர்மேஷனை எல்லாருக்கும் பாஸ் பண்ணிடுங்க. நானே ஜே.எம்.டி.க்கும் சொல்லிட்றேன்" என்றார்.

— அதிகபட்சம் இரண்டு நிமிடம் கூட ஆகவில்லை. ராஜரத்னத்தின் வேகமும் அதை அவர் செயல்படுத்திய விதமும் அப்போதே அவர் யார் என்பதை சாருலதாவுக்குக் காட்டிவிட்டது.

"சரிம்மா நீ போய் எல்லாரையும் பார். உன் முதல் நாள் ஃபார்மாலிட்டியை முடிச்சுட்டு வா." — என்ற



படியே கனமான ஃபைல் ஒன்றின் வெகு நீள ஆங்கில கடிதம் ஒன்றை வாசிக்கத் தொடங்கிவிட்டார்.

சாருலதாவும் ஒரு சவாலான எதிர்காலம் இருப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டாள். அதே உணர்வோடு எழுந்தாள்.!

ஸ்நூக்கர் விளையாடியபடி இருந்த ராம்குமார் அருகே ஈஷியபடி வந்து நின்றான் சேகர்ராஜ். ஃப்ரெஞ்ச் தாடியும் பிரௌன் நிற கறுப்புமாய் சரியான ஜாலி பேர்வழி என்பது அப்பட்டமாக நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

"வா சேகர்."

"என்ன ராம், ஸ்நூக்கர் விளையாட்ற டைமா இது?"

"இதுக்கெல்லாம் ஒரு டைம் இருக்கா என்ன?"

"இதைத் தூக்கிப் போடு. என்கூட வா. புரபொசர் மேத்தான்னு ஒருத்தர் டென்ஷன் இல்லாம லைஃப்பை பீட் பண்றது எப்படின்னு சொல்லித் தரார். அவர்கூட பேசிக்கிட்டிருந்தா பேசிக்கிட்டே இருக்கலாம்."

"இப்பவே நான் அப்படித்தானே இருக்கேன்..."

"அதெல்லாம் சும்மா... மைண்ட் லேசா இருக்கறது ஒண்ணும் சாதாரண விஷயமில்லை. நிச்சயம் உனக்கெல்லாம் தான் பிசினஸ் ப்ரெஷர் ரொம்ப ஹெவியா இருக்கும்."

"சாரி சேகர். நீ கிளம்பு. எனக்கு என் பிசினெஸ் ப்ரஷரை எப்படி குறைச்சிக்கறதுன்னு தெரியும்."

— ஸ்நூக்கரில் இருந்து விலகாமல் ராம்குமார் சொன்னது சேகர்ராஜை நெருடியது. சோர்ந்த முகத்துடன் கிளம்பினான். அவன் நகரவும் ஒரு வேஷ்டி, சட்டை அணிந்த நடுத்தட்டு மனிதர் நெற்றி நிறைய பட்டையுடன் அவனைத் தேடி வந்தார்.

"வாங்க ஏகாம்பரம்..."

"நமஸ்காரம் சார்... குருஜி பம்பாய்ல இருந்து வந்துருக்கார்."

"எப்ப வந்தார்?"

"இன்னிக்குக் காலைல தான். வந்த உடனே உங்களைத் தான் கேட்டார்."

"ஐ. சீ...!"

"அவரை நீங்க எப்ப பார்க்க வருவீங்கன்னு தெரிஞ்சா தேவலை."

"எங்கய்யா... டைமே இல்லையே! சரி நீங்க போங்க. நான் பின்னாலேயே வரேன்."

"அவசியம் வந்துடுங்க. உங்களுக்காக பூஜைல வெச்ச ஒரு தாயத்து கொண்டு வந்துருக்கார்."

"அப்படி எதையும் அவர்கிட்ட நான் கேட்கலையே?"

"கேட்காமலே செய்யறவர்தானே நம்ம குரு."

"அதுவும் சரி தான். நீங்க போங்க. நான் வரேன்."

— ராம்குமார் அவரை அனுப்பிவிட்டு ஸ்நூக்கர் ஸ்டிக்கை தூக்கிப் போட்டான். தாடையை தடவத் தொடங்கினான். முகத்தில் தீவிரமான சிந்தனை.

## 10

'கங்கை நீருக்குள் கிடந்தாலும் அந்த மோதிரம் தன் சக்தியைக் காட்டிக் கொண்டே இருப்பதாகத் தான் என் தாத்தா உணர்ந்தார். அவருக்கு எப்படியாவது வெள்ளைக் காரத் துரைகளைக் குஷிப்படுத்தி அரசு மட்டத்தில் பெரிய பதவி ஒன்றை அடைந்துவிட வேண்டும் என்பது விருப்பம். அத்துடன் அப்போது ரயில் மார்க்கத்துக்காக நில ஆக்ரமிப்பு நிகழ்ந்து, தண்டவாளம் பதிக்கும் காண்ட்ராக்ட்டை அடைய



பலர் துடித்தனர். தாத்தாவும் அதற்காக எல்லா குறுக்கு வழிகளிலும் போனார். ஆனால் வெற்றிதான் கிடைக்க வில்லை. மாறாக, அவரது பயணத்தில் அவருக்கு விபத்து ஏற்பட்டுக் கால் முறிந்து போனது. அதே விபத்தில் கையின் மோதிர விரலிலும் சரியான அடி. கை புசுபுசு வென்று வீங்கிப் போனது. அவ்வளவுக்கும் அந்த மோதிரம் வீட்டில் இருப்பதுதான் காரணம் என்பதாக அவர் மனது கருதியது. அப்போதுதான் அவருக்கு அப்படி ஒரு எண்ணம் தோன்றியது. அது...?'

**— சோமநாத பிள்ளை**

டிரெஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்து பவுடர் பூசிக் கொண்டிருந்தாள் சாருலதா. அவளது செல்ஃபோன் தேவுடா பாட்டு பாடி அவளை அழைத்தது. திரையில் ராம்குமாரின் எண்கள்!

"யெஸ் சார்... சொல்லுங்க."

"சாரு... நான் ஒரு வி.ஐ.பியை மீட் பண்ணப் போய்க் கிட்டிருக்கேன். அவருக்கு பிரசன்ட் பண்ண ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு வாங்கிட்டு நான் சொல்ற அட்ரஸுக்கு வந்துட முடியுமா?"

"வித் ப்ளெஷர் சார்."

"குட். அட்ரஸை நோட் பண்ணிக்க."

— அவளும் நோட் செய்து கொண்டாள். பின் குத்துவிளக்கு எவ்வளவு மதிப்புள்ளதா இருக்கலாம்?"

— என்று கேட்டாள்.

"இரண்டு விளக்கு. ஒரு விளக்கு ஒரு கிலோ இருக்கலாம்."

"அவ்வளவு வெயிட்டாவா?"

"அந்த வி.ஐ.பி.யும் வெயிட்டானவர் தான்."

"யார் சார் அவர்?"

"வந்து பார் தெரியும்."

"ஓ.கே. சார்..."

— பதிலோடு செல்ஃபோனை மூடியவள், துப்பட்டாவை சரிசெய்து கொண்டு திரும்பும்போது எதிரில் அத்தை ராஜம் காரில் இருந்து இறங்கி உள்ளே வருவது தெரிந்தது. கொஞ்சம் 'பகீர்' என்றது.

ராஜத்திடம் யானை நடை. சாருவைப் பார்க்கவும் முகத்தில் ஒரு கோணல்.

"வாங்கத்தை..."

"அடேங்கப்பா. என்னை வான்னு கூப்பிடக் கூட தெரிஞ்சிருக்கா."

"வீட்டுக்கு வர்றவங்க கழுதையா இருந்தாலும் நான் வான்னு கூப்பிடுவேன். ஏன்னா அதுதான் என் கல்ச்சர்."

அந்த பதில் அவள் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது. அதற்குள் விஸ்வநாதனும், திலகமும் வந்து விட்டனர்.

"அக்கா..."

"வாங்கக்கா..."

"வரக்கூடாதுன்னுதான் நினைச்சேன். பத்திரிகையைக் கூட தபால்ல அனுப்பிடலாம்னு இருந்தேன். இருந்தாலும் கூடப் பிறந்த பாசம். மனசு கேக்கல." — என்றபடி விவேக்கின் கல்யாணப் பத்திரிகையை வெளியில் எடுத்தாள்.

"யாருக்குக்கா கல்யாணம்...?"

"எனக்குத் தான்."

"அக்கா..."



"பின்ன என்னடா கேள்வி. என் மகனுக்குத்தான்."

"விவேக்குக்கா...?"

"என்ன அதிர்ச்சியா இருக்கா? இனி பிரயோஜனம் இல்லை. பொண்ணு ஏ.சி.எஸ். படிச்சுட்டுப் பெரிய கம்பெனில அக்கவுண்ட்ஸ் ஆபிசரா இருக்கா. ஐநூறு பவுன் போடறாங்க. ஐம்பது கிலோ வெள்ளிப் பாத்திரம். இதுபோக விவேக்குக்கு மாமல்லபுரம் ரோட்ல ஒரு கிரவுண்ட் இடம். ஒரு டொயோட்டா கார்."

— ராஜம் அடுக்கிக் கொண்டே போனாள். சாருலதாவுக்கு ராம்குமார் நினைப்பு வந்தது.

"அப்பா, அம்மா... நான் புறப்பட்றேன். என் பாஸ் காத்துக்கிட்டிருப்பார்" என்றபடியே வெளியேறத் தொடங்கினாள்.

"உன் பொண்ணுக்கு எவ்வளவு திமிர், பார். இங்க என்னை அலட்சியப்படுத்தலாம். ஆனா வாழ்க்கை அவளை எப்படி அலட்சியப்படுத்தப் போகுது பார்." — கருவினாள்.

"விடுக்கா... சின்ன வயசு... நல்லது கெட்டது தெரியலை."

"அவளுக்குத் தெரியலையா? இல்ல... நீ கொடுத்த இடமாடா?"

"அக்கா... விடுக்கா — அதான் முடிஞ்சு போச்சே..."

"முடிஞ்சுதாண்டா போச்சு. எல்லாமே முடிஞ்சுதான் போச்சு. ஒண்ணு மட்டும் சொல்றேன். என் பையனை அலட்சியப்படுத்தின உன் பொண்ணு நல்லா இருக்க மாட்டா. அவளுக்கு இருக்கற திமிருக்கு அவ எவ்வளவு அனுபவிக்கப் போறா பாரு."

— ராஜம் சாபத்தைப் பேச்சில் கரைத்துக் கொட்டினாள். திலகத்துக்கு அது நெஞ்சில் இடித்தது. கண்களில்

அது கண்ணீராக வெளிப்பட்டுத் தொடங்கியது. விஸ்வ நாதனும் உணர்ந்து கொண்டு நெளிந்தார்.

"சரி, சரி... நான் பேசறது உங்களுக்கு இப்ப தப்பா தான் தெரியும். ஆனா அவ என்னை அவமரியாதை செய்தது எதுவும் உங்களுக்குத் தெரியாது. நான் வந்த வேலையைப் பாக்கறேன். இந்தா பத்திரிகை. கல்யாணத் துக்கு வந்து சேர். உன் பொண்ணையும் கூட்டிக்கிட்டு வா. நடக்கறதை எல்லாம் பார்க்கட்டும். கல்யாணச் செலவு மட்டுமே அம்பது லட்சம். ஞாபகம் வெச்சுக்கோ. வரட்டுமா?"

உட்காரக்கூட இல்லை. பத்திரிகையை விஸ்வநாதன் கைகளில் திணித்துவிட்டு வந்த வேகத்தில் காரில் ஏறிக் கொண்டு பறந்து விட்டாள்.

திலகம் தன் கணவரை முறைத்துப் பார்த்தாள்.

"என்னை ஏன் பாக்குறே...? அக்கா சொல்றதுல என்ன தப்பு இருக்கு?"

"என்ன இல்லை? இவங்க ஹார்ட் அட்டாக்னு ஆஸ்பத்திரில போய் படுத்துக்குவாங்க. இவ அதைத் தப்பா எடுத்துக்கக் கூடாதா?"

"இவ வேணும்னு தானே அப்படி செய்தாங்க...?"

"உண்மைல இவ வேணும்னு நினைச்சிருந்தா இப்படி அவங்ககிட்ட வார்த்தைகள் வராது. ஒருவகைல என் பொண்ணு செஞ்சது தான் சரி. அவங்க மருமகளா அவ ஆனாலும் தினமும் எலியும், பூனையுமா தான் இருக்க வேண்டி வரும். ஒரு பொண்ணுக்குக் காசு பணம் பெருசு கிடையாது. கண் நிறைஞ்ச புருஷன் தான் கணக்கு."

"விவேக்குக்கு என்னடி குறை?"



"எப்ப என் பொண்ணுகிட்ட ஒரு பேச்சு, அவன் அம்மாகிட்ட ஒரு பேச்சுன்னு பேசினானோ அப்பவே அவன் சரியில்லைங்க."

"உன்கிட்ட பேச முடியுமா... எப்படியோ போங்க." — விஸ்வநாதன் எரிந்து விழுந்தவராக அங்கிருந்து விலகினார்.

சிறிது தூரம் சென்றவர் திரும்பி ஸ்டோர் ரூமுக்குள் சென்றார். அங்கே ஷெல்ப் ஒன்றில் இலை ஒன்றின் மேல் காய்ந்த சாணி உருண்டை. அதற்குள் அந்த நீலக்கல் மோதிரம்.

"இதை ஒழிச்சுத் தலை முழுகினா தான் இந்த வீட்டுல நிம்மதி வரும்." — என்றவர் அந்த உருண்டையோடு கொல்லைப்புறம் சென்று அப்படியே அதைத் தூக்கி எறிந்தார். அது பின்கூரை ஓட்டு சரிவில் விழுந்து அப்படியே சிக்கிக் கொண்டது. அதை உணராதபடி உள்ளே வந்தவர் 'இனியாவது எல்லாம் நல்லபடி நடக்கட்டும்' என்று சுவரில் தொங்கிக் கொண்டிருந்த முருகன் படத்தைப் பார்த்துக் கும்பிட்டார்.

திலகம் ஓடி வந்தாள்.

"என்னங்க பண்ணீங்க? எங்க அந்த மோதிரம்?"

"அதைப்பத்திப் பேசாதே. தலையைச் சுத்தி எறிஞ்சிட் டேன். இனி எல்லாம் நல்லபடியா நடக்கும் பார்."

"பைத்தியம் மாதிரி பேசாதீங்க... அதை உங்க முன்னோர்கள் எவ்வளவு தரம் தூக்கி எறிஞ்சும் விலகலை. அதனால தான் அதைப் பரண்ல தூக்கிப் போட்டாங்க."

"அது எப்படி திலகம், ஒரு மோதிரம் அப்படி நடந்துக்க முடியும்? அது என்ன உணர்ச்சியுள்ள மனுஷனா அல்லது மிருகமா... ஜடம்தானே?"

"ஜடம்னா அதைப் பார்த்து எதுக்குங்க பயம்? இந்த வீட்ல எவ்வளவோ சாமானுங்க. அதோட அதுவும் இருந்துட்டுப் போகட்டுமே."

"அப்படி இல்ல திலகம்... தெரிஞ்சோ, தெரியாமலோ அதுக்கு ஒரு சக்தி இருக்கறதா மனசு நினைச்சிடிச்சு. அதான் தூக்கி எறிஞ்சுட்டேன். நீ சொன்ன மாதிரி என் முன்னோர்களுக்கு நடந்த மாதிரி எனக்கும் நடக்கு தான்னு பாக்கறேன்."

"என்ன சொல்றீங்க?"

"அதைத் தலையைச் சுத்தித் தூக்கி எறிஞ்சுட்டேன். அது எப்படி என் கைக்கு தானா வருதுன்னு பாக்கறேனே...?"

— விஸ்வநாதன் சொன்னபடி நடக்கிறதா என்று பார்க்க திலகத்துக்கும் ஒரு உள்தூண்டல். அதற்குப் பிறகு அவள் எதுவும் பேசவில்லை.

**அ**ந்த பங்களா முன் சில கார்கள்.

முகப்பில் வாழைப் பந்தல்.

உள்ளே நிறைய பெரிய மனிதர்கள்...

மாடியில் ஏ.சி. அறையில் அந்த மனிதர். பார்க்க சன்யாசி போல் தோற்றம். ஆனால் விரல் கொள்ளாதபடி மோதிரம். கழுத்திலும் நவரத்ன மாலை. அவர் முன் ராம்குமார் தனியாக அமர்ந்து கொண்டிருந்தான். குத்து விளக்குடன் சாருலதா வந்து சேர்ந்தாள். அந்த விளக்கு கள் இரண்டும் அவர்முன் நெய்விட்டு தீபம் போடப்பட்டு எரிந்து கொண்டிருந்தது.

அந்த மனிதரும் கண்களை மூடித் தியானத்தில் இருந்தார்.



ராம்குமார் அவரையே பார்த்தபடி இருந்தான். அறைக்கதவு தாழிடப்பட்டிருந்தது.

மெல்ல ஒரு கட்டத்தில் கண் திறந்தவர் அவனைப் பார்த்துச் சிரித்தார்.

"சாமி..."

"கவலைப்படாதே. உன் ஜாதகம் சீக்கிரமா மாறும்."

"இல்ல சாமி... எனக்கு நம்பிக்கை இல்லை. தினசரி எப்படியாவது ஒரு ஆக்சிடெண்ட் எப்படியாவது ஆயிடுது. என் காரைப் பாருங்க... எல்லா சைடும் அமுங்கி இருக்கும்."

"தெரியும், ராம்குமார். நான் பாத்துக்கறேன். உனக்காகவே நான் பூஜை செய்த தாயத்து இது. இந்தப் பூஜைக்கு மட்டும் மூணரை லட்ச ரூவா ஆச்சுன்னா பாத்துக்கயேன்."

"அதை நான் கொடுத்துட்றேன் சாமி."

"எனக்கு உன்னைத் தெரியாதா... பணம் பெரிசு இல்ல. நீ நல்லவிதமா ஆகணும்."

"ஆனா போதும் சாமி..."

"பிசினஸ் எல்லாம் எப்படி இருக்கு?"

"அதுக்கு என்ன சாமி... எங்க புராடக்டுக்கு ஒரு பேர் இருக்கு. அதனால ஒரு பிரச்னையும் இல்லை. சொல்லப்போனா ஆர்டர் இருக்கற அளவு தயாரிக்க முடியலை. அவ்வளவு ப்ரெஷர்."

"பிசினஸ் மட்டும் இல்லை, உன் வாழ்க்கையும் சரி ஆகிடும். நீ கிளம்பு."

"இருங்க சாமி..." என்றவன் சாருவை அருகில் அழைத்து காதோரம் கிசுகிசுத்தான். அவள் சற்று சலனத்

தோடு தன் ஹேண்ட் பேக்கில் இருந்து ஒரு செக் புக்கை எடுத்து நான்கு லட்ச ரூபாய் எழுதினாள். அவன் கையெழுத்துப் போட்டு நீட்டினான். அவரும் வாங்கி அருகில் ஏதோ ஒரு குப்பையைப் போடுவது போல போட்டார்.

அவன் மீண்டும் ஒருமுறை வணங்கிவிட்டு புறப் பட்டான். இருவரும் வெளியில் வந்தனர். அவன் தன் கார் அருகே சென்றான். சரியான காஸ்ட்லி கார். அவன் குருஜியிடம் சொன்னது போல் ஆங்காங்கே சொட்டை... நசுங்கல்கள்... அவள் முகத்தில் மாற்றம்.

"என்ன சாரு... நான் அங்க சொன்னப்ப நம்பலையா?"

"இல்ல சார்... எப்படி இப்படி?"

"அதான் சொன்னேனே... என்னை எமன் விடாம துரத்தறான்."

"சார்... நீங்களா இப்படி பேசறீங்க?"

"ஏன்... நம்ப முடியலையா?"

"ஆமாம்... எவ்வளவு பெரிய நிறுவனத்தோட ஜே.எம்.டி. நீங்க. உங்களுக்குள்ள இப்படி ஒரு மூடத் தனமான எண்ணமா?"

"எதுவுமே தனக்குன்னு வராதவரை இப்படித்தான் நினைக்க வைக்கும்."

"இல்ல சார்... நீங்க அநாவசியமா பயப்பட்றீங்க... ஆமாம் இவர் யார் சார்?"

"என்ன அப்படி கேட்டுட்டே? இவர் பெரிய மகான்."

"அப்படியா?"

"என்ன அப்படியா...? விமானத்துல பயணிக்கும் போது தான் இவரைப் பார்த்தேன். எனக்குப் பக்கத்து



சீட். என் கைரேகையைப் பார்த்தே என் லைஃபைப் புட்டுபுட்டு வைச்சிட்டார்."

அவன் காரில் ஏறியபடியே கதை சொல்ல ஆரம்பித் தான். அவளும் ஃப்ரண்ட் சீட்டில் ஏறிக் கொண்டாள்.

"முதல்ல இந்தக் கைரேகை, கால்ரேகை இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனா இவர் ஒரு விஷயம் சொன்னார். அதன்படியே நடக்க ஆரம்பிக் கவும் நான் கொஞ்சம் கொஞ்சமா மாற ஆரம்பிச்சேன்."

"அப்படி என்ன சார் சொன்னார்?"

காரை ஸ்டார்ட் செய்யும் முன் டேஷ் போர்டில் இருந்து ஒரு சிறு பிளாஸ்டிக் டப்பாவுக்குள் கையைவிட்டு ஒரு அபின் உருண்டையை எடுத்து நாக்குக்கு கீழே வைத்துக் கொண்டான். அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"எனக்குக் கண்டம் இருக்கறதா சொன்னார். எங்க ஃபேமிலில இதுவரை நாலுபேர் — முப்பத்தஞ்சு வயசைத் தாண்டலை. தெரியுமா உனக்கு?"

"உங்க ஃபேமிலின்னா?"

"என் சித்தப்பா பசங்க. அப்புறம் என் அண்ணன்... இவங்கள சொன்னேன்."

"இவங்களுக்கு என்ன?"

"என்னவா? அவ்வளவு பேரும் போய்ச் சேர்ந்தாச்சு. சொல்லி வெச்ச மாதிரி ஆக்சிடெண்ட்டுல. எங்க அம்மா வும் ஆக்சிடெண்ட்டுல தான் செத்தாங்க. இந்திராகாந்தி குடும்பத்துல எப்படி எல்லாரும் வரிசையா துர்மரணம் அடைஞ்சாங்க... அந்த மாதிரியே..."

"அதனால உங்களுக்கும் ஆயிடும்கறது உங்க எண்ணமா?"

"எனக்கும் அப்படி ஒரு பயம் இருந்தது. இவர் என் பயத்தை ஊர்ஜிதம் பண்ணி கைரேகை பார்த்தே எனக்கும் கண்டம் இருக்குன்னு சொன்னார்."

— காரை ஓட்டியபடியே அவன் பேசப்பேச அவன் சாப்பிட்ட அபின் அவனை லேசாக்கிக் கொண்டிருந்தது. டிரைவிங்கிலும் ஒரு சிறு தடுமாற்றம்.

"இப்ப நீங்க சாப்பிட்டது போதை மருந்து தானே?"

"எக்ஸாட்லி. தயவு செய்து அப்பாகிட்ட சொல்லிடாதே சாரு. நான் என் மைண்டை பேலன்ஸ் பண்ணிக்க கண்டுபிடிச்சிருக்கற ஒரு குறுக்கு வழி இது."

"தப்பு சார்... இதுதான் உங்க கார் ஆக்சிடெண்ட் ஆகவே காரணம்."

"நோ... நோ... நான் எப்பவுமே ஸ்டெடி."

"சரி... இந்த சாமியார் சொன்னது நடந்ததா?"

"நடந்ததாவா? சனிக்கிழமைன்னா கட்டாயம் ஆக்சிடென்ட் ஆகும்னார். எங்க இருந்தாவது எவனாவது வந்து ஒரு முட்டு முட்டிட்றான்."

"அது என்ன சனிக்கிழமை கணக்கு...?"

"என் ஜாதகத்துல சனி ரொம்ப கெட்டவனாம். அதனால..."

"இதை எல்லாம் நீங்க நம்பறீங்களா?"

"நடக்க நடக்க நம்பத்தானே வேண்டியிருக்கு..."

"சரி இதுக்கு முடிவு?"

"இப்பத்தானே தாயத்து கொடுத்துருக்காரு... இனி ஒருவேளை ஆக்சிடென்ட் ஆகாம போகலாம்."

"தயவு செய்து இனி நீங்க கார் ஓட்டாதீங்க. டிரைவர் வெச்சுக்குங்க."



"சாரி... அதுமட்டும் எனக்குப் பிடிக்காது. ஏன்னா இந்த டிரைவர் என் அப்பாகிட்ட என்னைப் பத்திப் பத்த வெச்சுட்றான். அடுத்து வெரி ஸ்லோ டிரைவ். எனக்குக் கார்னா பறக்கணும்."

"நீங்க பேசறத பார்த்தா பிரச்னை உங்க கிட்டதான்கற மாதிரி நினைக்கறேன்."

"இல்ல சாரு... குருஜி சொன்ன மாதிரி இது எங்க குடும்ப சாபம். நான் முடிவு பண்ணிட்டேன். வாழப் போறது கொஞ்ச காலம். ஆகையால எவ்வளவு அனுபவிக்க முடியுமோ அவ்வளவு அனுபவிச்சிடணும்."

"சாரி சார், ரொம்ப அபத்தமான எண்ணம்."

"எனக்கு அட்வைஸ் பண்றவங்கள எனக்குப் பிடிக்காது. இருந்தாலும் உனக்கு நான் விதிவிலக்கு தரேன். ஏன்னா நீ ரொம்ப அழகா இருக்கே சாரு..."—அவனிடம் லேசாக நாக்கு குழறியது. காரிடமும் தடுமாற்றம்.

"சார் தயவு செய்து காரை நிறுத்துங்க. எனக்கு டிரைவிங் தெரியும். நான் டிரைவ் பண்றேன்."

"நோ... நோ... நான் எப்பவுமே ஸ்டெடி." சொன்ன ஜோரில் ஆக்சிலேட்டரில் ஒரு அழுத்தமான மிதி. காரும் சீறியது.

"நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?"

"சார்..."

"நீயும் எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?"

"சார்... மெல்லப் போங்க..."

"பயப்படாதே, சனிக்கிழமை இல்ல இன்னிக்கு. சோ... நிச்சயம் ஒண்ணும் ஆகாது."

"சார்... நாம இப்ப எங்க போறோம்?"

"மாமல்லபுரம் ரோட்ல இருக்கற நம்ம ஆபீஸ் கெஸ்ட் ஹவுசுக்கு."

"அங்க நான் எதுக்கு சார்...?"

"அந்த கெஸ்ட் ஹவுசை நீ பார்க்க வேண்டாமா?"

"சார்..."

"கீப் கொயட்... பேசாம வா."

— ராம்குமார் அப்படியே டோட்டலாக மாறி விட்டான். ஒரு அரை மணி நேரத்துக்கு முன்வரை மிடுக்காக மெஜஸ்டிக்காக நடந்து கொண்டவனிடம் முரண்பாடான மாற்றம்.

காரும் புயலாய் சீறிக் கொண்டு ஓடி கெஸ்ட் ஹவுஸ் முன் நின்றது. பெரிய கெஸ்ட் ஹவுஸ். பல கோடிகளை விழுங்கிவிட்டுப் பல வண்ணங்களில் ஜொலித்தது.

ராம்குமார், காரில் இருந்து தள்ளாடிக் கொண்டே இறங்கினான்.

உள்ளே நுழைந்தான். கெஸ்ட் ஹவுஸ் வாட்ச் மேன் ஓடி வந்து சல்யூட் அடித்தான். அலட்சியமாக அவனைக் கடந்தான். சாருலதா வெளியிலேயே தேங்கி நின்றாள். உள்ளே செல்ல என்னவோ போல் இருந்தது. அவன் உள்ளே சென்று மறைந்து விட்டான். அவளுக்கு உடனடியாக எம்.டி. ராஜரத்னத்திடம் பேசினால் நல்லது என்று தோன்றியது.

"குட்மார்னிங் சார். நான் சாரு பேசறேன்."

"சொல்லும்மா... என்ன விஷயம்?"

"சார்... நான் இப்ப மாமல்லபுரம் ரோட்ல இருக்கற உங்க கெஸ்ட் ஹவுஸ்ல இருக்கேன்."



"அப்படியா... அங்க என்ன வேலை உனக்கு?"

"சார்... நம்ம ஜே.எம்.டி. தான் என்னை இங்க கூட்டிக்கிட்டு வந்திருக்கார். அவர் இப்ப ஸ்டெடி மைண்ட்லயும் இல்ல."

"வாட் டு யூ மீன்?"

— சாரு நடந்ததை எல்லாம் அப்படியே கெஸ்ட் ஹவுஸ் தோட்டத்தில் நடந்தபடியே சொல்லி முடித்தாள். அவரும் அதிர்ந்து போயிருந்தார்.

"அவனுக்குள்ள இப்படி எல்லாம் குழப்பங்களா?"

"குழப்பமே இல்ல சார்... அவர் ரொம்ப ஸ்ட்ராங்கா பிலீவ் பண்றார். எனக்கு அந்த குருஜி மேலதான் சந்தேகம்."

"எப்படிம்மா?"

"சொல்லத் தெரியலை... அவரைப் பார்த்தா உண்மையான சாமியாராவும் தெரியலை. இரண்டு கிலோ வெள்ளிக் குத்துவிளக்கு கிட்டத்தட்ட 35 ஆயிரம் ரூபாய். இதுபோக நாலு லட்ச ரூபாய்க்குச் செக். எனக்குத் தெரிஞ்சு இன்னிக்கு இவ்வளவு போயிருக்கு. இதுக்கு முந்தி எவ்வளவு கொடுத்திருப்பாரோ? இவரோட அசட்டு நம்பிக்கையை அந்த ஆள் நல்லா பயன்படுத்திக்கிறான்."

"சரி. நீ கெஸ்ட் ஹவுஸ்ல இருந்து கிளம்பிரு. அவன் கேட்டா நான் கூப்பிட்டுருக்கேன்னு சொல். நான் பாத்துக்கறேன்."

— அவர் சொல்லி முடிக்க, அவனிடம் சொல்லிக் கொள்வதற்காக தயங்கித் தயங்கி கெஸ்ட் ஹவுசிற்குள் நுழைந்தாள். உள்ளே பாகம், பாகமாகப் பார்த்தாள்.

"சார்... சார்..." என்று குரல் கொடுத்துக் கொண்டே அறை அறையாக எட்டிப் பார்த்தாள். எல்லா அறையுமே

காலியாக இருந்தது. உள்ளுக்குள்ளே விதம் விதமான கார்பெட்களில் வண்ண வண்ண சித்திரங்கள். ஏராள மான காஷ்மீர் கிராஃப்ட் பொருட்கள். ஒரு அறைக்குள் நுழைந்தபோது மெலிதான ஸ்ப்ரே வாசம். அதே சமயம் அவளுக்கும் மெல்ல சுயநினைவு மறந்து போனது.

சில நொடிகளிலேயே பொத்தென்று விழுந்து விட்டாள்!

# 11

**'அந்த மோதிரத்தை ஒரு பிச்சைக்காரனுக்கு அவன் தட்டில் போட்டுவிட முடிவு செய்தார். அதன்படியே போடவும் அவன் புளகாங்கிதப்பட்டான். ஆனாலும் அது திரும்ப வந்ததுதான் ஆச்சர்யம்! ஆம்... அது திரும்பி வந்தது. அந்தப் பிச்சைக்காரன் அதை நகை செய்யும் ஆசாரியிடம் விற்கச் சென்றான். ஆசாரிக்குப் பிச்சைக்காரன் மேல் சந்தேகம் வந்துவிட்டது. ஓசைப்படாமல் போலீசுக்குச் சொல்லிவிட்டார். போலீஸார் பிச்சைக்காரனைப் பிடித்து குடைந்தனர். பிச்சைக்காரனும் இதை என் தாத்தா பிச்சை போட்டதாக கூற போலீஸ் நம்ப மறுத்தது. இறுதியாக என் தாத்தாவையே அழைத்து விசாரிக்க, அவரும் உண்மையை ஒப்புக் கொள்ள பிச்சைக்காரனை விடுவித்தனர். பிச்சைக் காரனோ 'இந்த மோதிரம் என்னைப் பாடாய்ப்படுத்தி விட்டது. இது எனக்கு வேண்டாம்' என்று என் தாத்தா விடமே கொடுத்துவிட்டு ஓட்டமாய் ஓடி விட்டான். எப்படி!'**

**– சோமநாத பிள்ளை**

சுள்ளென்று சூரியக்கதிர் மேலே பட்டபோது சுரீர் என்றது.

ஜன்னல் கர்ட்டன்கள் விலகி திரைச்சீலைக்கு அப்பால் சமுத்திரம் தெரிந்தது.



கண்விழித்த சாருவுக்கு கொஞ்சமல்ல... அதிகமாகவே பகீர் என்றது. அவளது உடம்பில் பொட்டுத் துணி யில்லை!

சரேலென்று படுக்கையோடு கிடந்த போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். உடம்பெல்லாம் அங்கங்கே வலிக்க வேறு செய்தது. அவளுக்கு, அடுத்த நொடியே, தான் மயங்கி விழுந்ததும், அதைத் தொடர்ந்து தான் கெடுக்கப்பட்டதும் தெரிந்து விட்டது. பல இடங் களில் நகக் கீறல்கள் வேறு. யார் என்றே தெரியாதபடி ஒருவனுடன் புரண்டது மெல்ல நினைவுக்கு வந்தது. அப்படியே அந்த அறையின் ஒரு மூலையில் போய் அமர்ந்து விட்டாள். தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டாள். வாய்விட்டு அழத் தோன்றியது. அழவும் செய்தாள். சப்தம் அறை முழுக்க எதிரொலித்தது. மெல்ல அறைக் கதவைத் திறந்து கொண்டு வாட்ச் மேன் எட்டிப் பார்த்தான். பார்த்த வேகத்தில் மீண்டும் கதவை மூடினான். அவளோ வீறிட்டு அழுதாள்.

'பொம்பளைன்னா அடக்க ஒடுக்கமா இருக்கணும். ஆம்பளை மாதிரி திரிய ஆசைப்படக்கூடாது' என்று திலகம் அடிக்கடி சொல்வது ஞாபகத்தில் வந்தது. அந்த நேரத்தில் அது சத்யமான ஒரு உண்மையாகத் தான் தோன்றியது.

"பேசாமல் விவேக்கைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதித்திருந்தால் இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்தி ருக்காதோ?' என்றும் கேட்டுக் கொண்டாள்.

சட்டென்று அழுகையை அடக்கிக் கொண்டவள் சற்றுத் தெம்பை வரவழைத்துக் கொண்டு எழுந்தாள். தன் உடைகள் எங்கே இருக்கின்றன என்று தேடினாள். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தது. எடுத்து அணிந்து கொண்டாள். பாத்ரூமுக்குள் நுழைந்து முகம்

கழுவிக் கொண்டாள். பின் மெல்ல நடந்து வெளியே வந்தாள். வாட்ச்மேன் பரிதாபமாகப் பார்த்தான். ஆனால் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்னம்மா... நடந்ததுக்காக வருத்தப்பட்டு உள்ற அழுதீங்க. இப்ப சிரிக்கறீங்க...?" என்று அவனும் புரியாமல் கேட்டான்.

"அழறதுல பிரயோஜனமில்லைன்னு தெரிஞ்சிச்சு. அதான் மாத்திக்கிட்டேன்."

"அதுவும் சரிதாம்மா... ஏம்மா இந்த மாதிரி இடத்துக்கெல்லாம் தனியால்லாம் வர்றீங்க?"

"சத்யமா எனக்கு இப்படி எல்லாம் ஆகும்னு தெரியாது."

"நீங்க நாலாவது ஆளும்மா. சின்னவர் ரொம்ப நல்லவர். சில காலமாதாம்மா இப்படி இருக்கார்."

"இனி நான் பார்த்துக்கறேன். தயவு செய்து இங்க நடந்ததை..."

"யார்கிட்டேயும் சொல்லமாட்டேம்மா..."

"தப்பு. சொல்லணும். கட்டாயம் சொல்லணும்."

"அம்மா..."

"என்ன பாக்கறே. இதை நீ முதலாளிகிட்ட சொல்லியே தீரணும்."

"ஐயோ... அப்புறம் என் வேலை?"

"எதுவும் ஆகாது. சொன்னா உனக்கு இங்க்ரிமென்ட் தான் கிடைக்கும்."

"உங்க பேச்ச எதை வெச்சும்மா நம்ப சொல்றீங்க?"



"அப்ப இப்படியே தப்புக்கு விளக்குப் பிடிச்சுக்கிட்டு இருக்கறது தான் உன் முடிவா?"

"இல்லம்மா... சின்னவர் மாறணும். அதுக்கு ஏதாவது செய்யணும்."

"அதான் செய்யுங்கறேன். மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்."

"அம்மா..."

"சரி. முதலாளியா கூப்ட்டு கேட்டா சொல்வியா?"

"சத்யமா சொல்வேம்மா..."

"அப்ப அதுபோதும் எனக்கு..."

— சாரு அவனிடம் சொல்லிக் கொண்டு அப்படியே கடற்கரை பக்கம் தான் நடந்தாள். அந்த நேரத்துக்கு அந்தக் கடல்காற்றும் ஆளரவமற்ற அந்த வெளியும் மனதுக்கு இதமாக இருந்தது. வாட்ச்மேனோ அவள் தற்கொலை செய்து கொள்வதற்காகக் கடலை நோக்கி நடப்பதாகத்தான் கருதினான். அவனுக்கு மிகவும் பயமாகக் கூட இருந்தது. பயத்துடன் தொலைபேசியை எடுத்தவன் ராஜரத்தினத்தின் பர்சனல் நம்பரில் அவரைக் கூப்பிட்டான்.

"ஐயா..."

"என்ன சந்தானம்?"

"இங்க ஒரு தப்பு நடந்துருச்சுங்க."

"என்ன தப்பு? யார் பண்ணினா...?"

அவன் நடந்ததை விலாவரியாகக் கூறிவிட்டு "அந்த அம்மா கடற்கரை பக்கமா போறாங்க. எனக்கென்னவோ தற்கொலை பண்ணிக்கப் போற மாதிரி தெரியுது. அதான் உங்க கவனத்துக்குக் கொண்டு வர போன் செஞ்சேன்.

ஏற்கெனவே நம்ம குடும்பத்துல யாரும் நல்லா இல்லை. இதுல இந்த மாதிரி பாவம் எதுக்குங்க...?"

"சரி... சந்தானம்... நான் பாத்துக்கறேன். நல்லவேளை உனக்கு இப்பவாவது சொல்ல தைரியம் வந்ததே." என்றவர் அடுத்த நொடி சாருவை செல்ஃபோன் லைனில் பிடித்தார்.

"சாரு..."

"யெஸ் சார்."

"எங்க இருக்க இப்போ...?"

"கடற்கரைல சார்..."

"நோ சாரு... நீ அவசரப்பட்டு தற்கொலை எல்லாம் பண்ணிக்காதே. நான் ராம்குமாரை விசாரிக்கறேன்."

"தற்கொலையா... நானா?"

"அப்படித்தான் வாட்ச்மேன் சந்தானம் சொன்னான்."

"ஓ... இது அவன் வேலையா... சரி சார், நான் தெரியாமத் தான் கேக்கறேன். நீங்க உங்க பிள்ளையை விசாரிச்சு என்ன செய்ய முடியும்னு நினைக்கறீங்க?"

"என்னம்மா அப்படி சொல்லிட்டே... உனக்கு நிச்சயம் நல்ல காம்பன்சேஷன் கிடைக்கும். நீ அவசரப் பட்டுடாதே..."

"அவர், நான் ஒரு தப்பும் பண்ணலைன்னு சொன்னா...?"

"அப்ப என்னால எதுவும் பண்ண முடியாதே!"

"ஆனால் என்னால முடியும் சார். உங்க பிள்ளை நல்லவர்தான். சில கெட்ட பழக்கவழக்கம் தான் அவரை இப்படி ஆக்கிடிச்சு. போதாக் குறைக்கு தான் கட்டாயம்



ஆக்சிடென்ட்டுல கூடிய சீக்கிரம் செத்துடுவோம்கற அந்தப் பயம் வேற..."

"என் மகன் மேல கோபிக்காம அவன் மேல பரிதாபப்பட்டே?"

"இப்ப உங்க மகன் நிலை அது தான் சார்."

"ரொம்ப ஆச்சரியமான பொண்ணும்மா நீ சாதாரணமா இந்த மாதிரி சமயத்துல எல்லாரும் எத்தனை லட்சம் கறக்கலாம்னுதான் பார்ப்பாங்க. நீ தலைகீழா யோசிக்கிறியே."

"இல்ல சார்... இதுதான் நேரான சிந்தனை. நீங்க அனாவசியமா கவலைப்படாதீங்க. அந்த சனிக்கிழமை ஆக்சிடென்ட் மர்மத்தை நான் கண்டுபிடிச்சுட்டா போதும். உங்க மகனை அப்படியே மாத்திடுவேன்."

— சாரு பேசப்பேச ராஜரத்னம் கொஞ்சம் கூனிக் குறுகிக்கூட போனார். பணம் காசில் எவ்வளவு உயரத்தில் இருந்து என்ன பிரயோஜனம்? இப்படி இக்கட்டான தருணங்களில் திடமாகவும் தெளிவாகவும் நடந்து கொள்வதில் அல்லவா உண்மையான உயரம் உள்ளது.

கடற்கரையில் கால் நடையாக அமர்ந்தவள் அருகே நிழலாடியது. நிமிர்ந்தாள். அந்த ஜோசியக்காரப் பெண்.

"தாயி..."

"நீயா?"

"என்ன தாயி...? எதையோ பறிகொடுத்தவ மாதிரி தெரியறியே?"

"ஆமாம். பறிகொடுத்தவ தான். ஆனா தொலைஞ்சதைப் பத்தி கவலைப்பட்றதுல பிரயோஜனம் இல்ல."

"எங்க தாயி உன் கைல அந்த மோதிரத்தக் காணோம்?"

"அது ஒரு விபத்து. எங்கப்பா பிடுங்கிக்கிட்டாரு."

"அடக் கெரகமே..."

"என்ன... அது இல்லேன்னா எனக்கு ஆபத்தா?"

"இல்லையா பின்னே... உன்னையேல்ல தொலைச்சிட்டு வந்துருக்கே?"—அவள் சொன்னது சாருவை உசுப்பி நிமிர்த்தியது.

"போ தாயி, அதை எடுத்துப் போடு. எல்லாம் சரியாயிடும். நான்தான் சொன்னேனே..."

"நீ சொன்னே சரி... போட்டா என்னாகும்? போன என் கற்பு திரும்பிடுமா?"

"ஏதாவது ஒரு வகைல சரி ஆகும் தாயி. அது உன் பலம் ஆத்தா."

"என் பலம் என் மனசுல இருக்கு. மோதிரத்துல இல்ல..."

"என்ன பிரயோஜனம். நீ அழியறதை உன்னால தடுக்க முடிஞ்சிச்சா...?" — அவளின் மடக்கல் சாருவைக் கொஞ்சம் குத்தவும் செய்தது.

"இதெல்லாம் என்னை மீறி நடந்துட்ட விஷயங்கள். ஒரு விபத்து மாதிரி. இதுக்கும் மோதிரத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"என் அனுபவத்துல சொல்றேன் தாயி. நம்ம கைல இருக்கறதுங்கறது கொஞ்சம்தான். நம்மைச் சுத்தி நடக்கற விஷயங்கள் எதுவும் நம்ம கைல கிடையாது. அந்த விஷயங்கள நாம ஆட்டி வைக்க ஆசைப்படாம இருக்கலாம். ஆனா அது ஆசைப்பட்டு ஆட்டி வைக்கும்போது ஆடித்தான் போறோம். அப்படி ஆடிடாம இருக்கணும்னா நம்ம கிட்டயும் ஆட்டி வைக்கற சக்தி இருக்கணும்."



"மோதிரம் போட்டுக்கிட்டா மட்டும் அது எப்படி வரும்?"

"மாத்திரை சாப்பிட்டா நோய் தீருது- ஒரு பட்டாணி சைஸ் மாத்திரைக்கு உடம்புக்குள்ற மாற்றம் ஏற்படுத்த முடியும்போது அதே பட்டாணி சைஸ் கல்லுக்கு வெளிய மாற்றம் ஏற்படுத்த முடியாதா?"

"அதை எப்படி நம்பறது?"

"போட்டுப்பார்... அப்புறம் தெரியும். எல்லாமே உனக்குச் சாதகமா — உன் விருப்பப்படி நடந்தா அதுக்குச் சக்தி இருக்குன்னு நினை. இல்லாட்டித் தூக்கி எறிஞ்சிட்டு போ..."

"அதைப் போடாமலே நான் எனக்குச் சக்தி இருக்கறதா நினைச்சா?"

"அது எப்படிம்மா சாப்டதா நினைச்சா பசியடங்கும்? நிஜத்துக்கும் நினைப்புக்கும் நிறைய வித்யாசம் இருக்கும்மா..."

"நீ நல்லா பேசறே..."

"ஆனாலும் உன் கண்ணைத் திறக்க முடியலியே...?"

"என் கண்ணு திறந்துதான் இருக்கு... அதான் உன்கிட்ட இவ்வளவு கேள்வி கேட்கத் தூண்டுது..."

"முகத்துல இருக்கற கண்ணு ஒண்ணும் இல்லம்மா... மனக் கண் திறக்கணும். இந்தக் கண்ணால எதிர்ல இருக்கறதான் பார்க்க முடியும். ஆனா மனக் கண்ணால இங்க இருந்துகிட்டே எதை வேணா நினைச்சுப் பார்க்க முடியும்."

"முடிவா நீ என்னதான் சொல்றே?"

"படிச்சுப் பட்டம் வாங்குனவதானே நீ..."

"ஆமா..."

"முதல்ல பட்டம்தாங்க. அப்புறமா படிச்சிக்கிறேன்னா ஒத்துக்குவாங்களா?"

"அது எப்படி?"

"மோதிர விஷயத்துல மட்டும் அது தன்னை நிரூபிச்சாதான் நம்புவேன்னா என்ன அர்த்தம்...?"

"நீ விடமாட்டே போல இருக்கே...?"

"அப்படி இல்ல தாயி. நான் மனசைப் படிக்கறவ. நீ இப்ப இழக்கக்கூடாததை இழந்துட்டு உக்காந்துருக்கே. ஐயோன்னா வருமா...? அம்மான்னா வருமா...? இது... உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். இந்த உலகத்துல இருக்கற எல்லாமே ஒருநாள் இல்ல ஒருநாள் அழிஞ்சி போகும். இதோ இந்தக் கடற்கரை மண்ணு கூட அடுத்த வருஷம் இப்படியே இருக்காது. மாறித்தான் கிடக்கும். ஆனா எப்பவும் எதுலயுமே சுருங்காததாலதான் தங்கத்தைப் பெரிசா நினைக்கறோம். அப்படித்தான் ரத்தினக் கல்லுங்களும்... எல்லாமே அழியும்போது அதுங்க மட்டும் காலத்தை எதிர்த்து — எதுவும் ஆகாம அப்படியே இருந்துகிட்டிருக்கும். இது உன் உடம்புல இருந்தா உன் உடம்புல அழியாத ஒரு விஷயம் இருக்குன்னு அர்த்தம். ஒரு கெட்டது நடக்க அதோட அலைங்க உடம்பு முழுக்க பரவணும். ஆனா இது இருந்தா அந்த இடத்துல கெட்டதால பரவ முடியாது. அதனால முழுக்க கெட்ட ஒரு விஷயம் பரவவே முடியாது... இதுதான் இதுக்குப் பின்னால இருக்கற சூட்சுமம். மத்தபடி கல்லுக்குன்னு அறிவு கிடையாது; மனசு கிடையாது. உணர்ச்சி கிடையாது; ஆனா நமக்குதான் அது சேர்ந்தே இருக்கே. அது இருக்கறதாலதான் மரத்தை வெட்ட அரிவாளை எடுக்கறோம். மண்ணத் தோண்ட மண்வெட்டியை எடுக்கறோம். அதேபோல பிரச்சனைகளை எதிர்க்க ஒரு



ஆயுதமா இதை எடுத்துக்கறோம். இங்ககூட மனுஷன்தான் பெரியவன்; மோதிரம் இல்ல. ஏன்னா அவனை மோதிரம் காப்பாத்தலை. அவன்தான் மோதிரத்தைக் காப்பாத்தி தன்னையும் காப்பாத்திக்கிறான்."

—அவள் ஒரு பிரசங்கமே செய்து முடித்தாள். ஆனால் சாருலதாவால் மறுதலிக்க முடியாதபடி கருத்துக்கள்! "சரி... எனக்கு நான்கற கர்வம் கிடையாது. உன் கருத்தைப் பரிசீலிச்சுப் பார்க்கறேன். நீலக்கல்லை ஒரு ஆயுதம்னு நீ சொன்ன பார்... அது எனக்குப் பிடிச்சிருக்கு. நான் ஜெயிச்சா நிச்சயம் நல்ல நிலைல உன்னைச் சந்திப்பேன். வரேன்..." உடனேயே எழுந்து கொண்டு படுவேகமாக வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

**வீ**ட்டில் நுழைந்தவள் எதிரில் கிட்டத்தட்ட பேயறை பட்டவர் போல விஸ்வநாதன். திலகம் சற்று கலகலவென்றிருந்தாள்.

"அம்மா... என்னாச்சும்மா அப்பாக்கு...?"

"அதை ஏண்டி கேக்கறே. நடக்கக் கூடாததாவே எல்லாம் நடக்குது. ஆனாலும் கெட்டதுல ஒரு நல்லது மாதிரி நீ தப்பிச்சிட்டே..."

"என்னம்மா சொல்றே?"

"அந்த விவேக்குக்கு உன் அத்தை கல்யாண ஏற்பாடு செய்திருந்தாங்க இல்லையா?"

"ஆமா..."

"கல்யாணப் பெண் வீட்டுக்கு ஒரு மொட்டைக் கடுதாசி யாரோ எழுதிப் போட்ருக்காங்க. அதில என்ன எழுதியிருக்கு தெரியுமா?"

"என்னம்மா...?"

"விவேக்குக்கு எய்ட்ஸ் இருக்காம். அது அவனுக்கும் தெரியுமாம்!"

— நிஜமாலுமே அடிவயிற்றில் அக்னித் திராவகத்தை ஒரு செம்பளவு செலுத்திய மாதிரி இருந்தது.

"அப்புறம் என்னம்மா நடந்துச்சு?"

"என்னத்த சொல்ல... விவேக்கும் தலைமறைவா யிட்டான். அது அந்தக் கடிதம் உண்மைதாங்கற மாதிரி ஆக்கிடிச்சு."

"அது எப்படிம்மா எய்ட்ஸ் இருக்கற நபர் கல்யாணத்துக்குச் சம்மதிப்பார்?"

"அதுதான் எனக்கும் புரியல. ஒருவேளை சொந்தத்துல கல்யாணம் பண்ணினா சமாளிச்சிடலாம்னு நினைச்சி ருக்கலாம். 'எப்படியும் சாகப் போறோம். கொஞ்ச நாள் சந்தோஷமா இருந்துட்டு சாவோமே'ன்னும் நினைச்சி ருக்கலாம். இல்ல யாராவது கிளப்பிவிட்ட பொய்யான் னும் தெரியல..."

— திலகம் அடுக்கிக் கொண்டே போனாள். சாருலதா நெடுநேரம் எதுவும் பேசவில்லை. அப்படியே ஸ்தம்பித்துப் போய் அமர்ந்து விட்டாள்...

"அந்த மோதிரத்தைத் தூக்கி எறிஞ்ச பிறகும் அது விடமாட்டேங்குது" என்று விஸ்வநாதன் மெல்ல முனகினார். உடனேயே சரேலென்று திரும்பினாள் சாருலதா.

"என்னம்மா சொல்றாரு அப்பா...?"

"அதை ஏண்டி கேக்கறே... இந்த மனுஷன் ஆத்திரத்துல அதைத் தூக்கி வீசிட்டாருடி."

"வீசிட்டாரா...?"

"ஆமாண்டி... திடீர்னு இவருக்குக் கிறுக்குப் பிடிச்சிடுச்சு. ஒரு பக்கம் அதை இவர் நம்பல. இன்னொரு பக்கம் அந்த நினைச்சு பயம். இப்படி இரண்டும் கெட்டானா இருந்தா என்ன பண்றது?"



— சாருவின் முகம் உடனேயே கோணிக்கொண்டது. சோர்ந்து போய் அப்படியே கொல்லைப்புறம் சென்று நின்றாள். அப்போது ஒரு பந்து அவள் மேல் பட்டுத் தெறித்து கூரைமேல் போய் விழுந்தது. தெருவில் கிரிக்கெட் விளையாடும் பசங்களின் கை வண்ணம். அவர்களில் ஒரு வாலறுந்தவன் இருக்கிறான். அவன் மதில் சுவர் மேல் முகம் காட்டி சாருவைப் பார்த்து சிரித்தான்.

"என்னடா...?"

"பந்துக்கா."

"உங்களுக்கு இதே வேலை... தெருவுலயா கிரிக்கெட் விளையாடுவாங்க...?"

"சச்சின்லாம் தெருவுல விளையாடிதான் பெரிய ஆளானாராம்..."

— அவன் பதிலை ரசித்தவள் வீட்டுக் கூரை நோக்கி கையைக் காட்டினாள். அடுத்த நிமிடம் அவன் மதில் மேல் ஏறி குரங்கு போல் தாவிக் குதித்துக் கூரைமேல் ஏறி அந்தப் பந்தின் அருகே சென்றுவிட்டான். அப்போது அவன் கைப் பட்டு ஓடு ஒன்று உடைய அந்த இடத்தில் கிடந்த சாணி உருண்டை தடை விலகியதுபோல உருண்டு வந்து கச்சிதமாக சாருவின் தலைமேல் விழுந்து உடைந்து, மோதிரம் மட்டும் தனியாகப் பிரிந்து அவள் காலடியில் விழுந்தது.

அவளுக்குள் ஒரு குபீர்ப் பரவசம்!

குனிந்து கையில் எடுத்தாள். அருகில் சாணித் துகள்கள்.

அவளுக்குப் புரிந்துவிட்டது. அப்பா வீசி எறிந்தது கூரையில் கிடந்திருக்கிறது. இப்போது பந்தைத் தேடிப் போன பையனால், தன் காலடிக்கே வந்துவிட்டது.

அதை எடுத்து விரலில் அணிந்தபடி விறுவிறுவென்று உள்ளே வந்தாள். ஒரு புதுத் தெம்பு உடம்புக்குள் புகுந்த மாதிரி கூட இருந்தது.

நேராக திலகத்திடம் அதைக் காட்டினாள்.

அவளிடமும் பிரமிப்பு.

"எப்படி உன் கைல...?"

"அதுவா தேடி வந்து விழுந்துச்சும்மா... கூரை மேலதான் கிடந்திருக்கு..."

"அப்படியா...? இது நம்மை விட்டுப் போகாதுங்கறது எவ்வளவு பெரிய உண்மை பார்த்தியா?"

— திலகத்தின் பேச்சை விஸ்வநாதனும் மறுக்க முடியவில்லை. சாரு அந்தக் குச்சி ஜோசியக்காரப் பெண் சொன்னதை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள். அப்படியே அவள் காலண்டரையும் பார்த்தாள். அன்று வெள்ளிக்கிழமை. மறுநாள் சனிக்கிழமை.

ராம்குமார் அஞ்சி நடுங்கும் நாள்!

அவளுக்குள்ளும் ஒரு புது எண்ணம்.

# 12

'இப்படியாக அந்த மோதிரம் எங்கள் குடும்பத்தை விட்டுச் செல்லவே இல்லை. பரம்பரை பரம்பரையாக கட்டில், பேனா, நகைகள், கெடிகாரம் என்று சில பொருட்கள்தான் தொடரும். மோதிரமும் தொடர்ந்தது. எனக்கென்னவோ இப்படி தேடி வரும் ஒரு சக்தி மிகுந்த விஷயம் நல்லது மட்டுமே செய்ய முடியும் என்றுதான் தோன்றுகிறது. தாத்தாவின் பதவி ஆசை, அந்தஸ்து காய்ச்சல் இதெல்லாம்தான் அவரது சரிவிற்குக் காரணங்கள். நிச்சயம் என்



பரம்பரையில் யாராவது ஒருவர் இந்த மோதிரத்தைப் புரிந்து கொண்டு இதைப் பயன்படுத்தி வெற்றிகரமாகத் திகழும் காலம் வரும். வரவேண்டும் என்பதுதான் என் விருப்பம்!'

— சோமநாத பிள்ளை

'வழக்கம்போல ஆபிசுக்குள் நுழைந்த சாரு அவளது கேபினுக்குள் நுழைந்தபோது ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே அவளது சீட்டுக்கு எதிர் சீட்டில் முன்பே வந்து ஒரு கஸ்டமரைப் போல காத்திருந்தார் ராஜரத்தினம்.

"சார்... நீங்களா?"

"நானேதான்... உக்கார் சாரு..."

"என்ன சார்... நீங்க போய் இங்க?"

"இதுவும் என் ஆபிஸ்தாம்மா... இங்கேயும் நான் உட்காரலாம்."

"சார்... நான் அதுக்குச் சொல்லலை..."

"நீ எதையும் சொல்லாதே.. நானும் ராம்குமார்கிட்ட பேசினேன். அவன் ஒரு வார்த்தைகூட தப்பு நடந்ததுன்னும் சொல்ல மாட்டேங்கறான். இல்லேன்னும் சொல்ல மாட்டேங்கறான்..."

"அப்படியா?"

"என்னம்மா அப்படியான்னு சாதாரணமா கேக்கறே? இது என் பிரெஸ்டீஜ் ப்ராப்ளம். ஏற்கெனவே எனக்குக் குடும்ப வாழ்க்கைல நிம்மதி இல்ல. என்ன பாவம் செஞ்சேனோ — என் பெரிய பையன் போய்ச் சேர்ந்துட்டான். என் தம்பியும் தன் இரண்டு பசங்களை இழந்துட்டு நிக்கறான். பெண் சாபம் பொல்லாததுன்னு தெரியும்.

ஆனா அது இவ்வளவு மோசமானதுங்கறது தெரியாதும்மா..."

"சரி சார்... அவர் என்னைக் கெடுத்ததை ஒத்துக்கிட்டா என்ன சார் செய்வீங்க...?"

"என்னம்மா கேள்வி இது... அவனை வெட்டிப் பொலி போட்டுருவேன்..."

"மொத்தத்துல அவர் நம்பிக்கைப்படி அவரால இனி நல்லவிதமா வாழவே முடியாதபடி செய்துடுவீங்க... அப்படித்தானே?"

"வாட் டு யூ மீன்?"

"அதான் சொன்னேனே சார்... ஒரு பம்பாய்ச் சாமியார் இப்ப அவரை ஆட்டி வெச்சிட்டிருக்கார். எவ்வளவோ படிச்சிருந்தும் சில அனுபவங்கள் அவரைப் பெரிய முட்டாளா ஆக்கிடிச்சு சார்..."

"அந்தச் சாமியார் ஆட்டி வைக்கறதை உன்னால நிரூபிக்க முடியுமா?"

"இன்னிக்கு சனிக்கிழமை தானே?"

"அதுக்கென்ன?"

"இன்னிக்கு உங்க பிள்ளை நடுங்கற நாள். நான் அவர் நடுக்கத்தை நிச்சயமா நீக்கிடுவேன்..."

"அப்ப உனக்கு அவன்மேல கோபமோ வருத்தமோ இல்லையா?"

"நிச்சயமா இல்லை. ஆனா ஒரு வேளை நான் நிரூபிச்ச பிறகும் அவர் இப்படியே தொடர்ந்தா நீங்க சொன்ன மாதிரி வெட்டிப் பலி போட்டுடலாம்... தப்பே இல்லை."

"சரி... இப்ப அதுக்கு என்ன பண்ணப் போறே?"



"உங்க பிள்ளை இப்ப எங்க?"

"வீட்ல இருக்கான். ரூமுக்குள்ள போய்க் கதவைச் சாத்திக்கிட்டவன் வெளியவே வரமாட்டேங்கறான்..."

"அப்படியா...?"—அவள் கேள்வியுடன் புறப்பட்டாள்.

**ரா**ஜரத்னத்தின் வீடு... தப்பு தப்பு—பங்களா... அதுவும் தப்பு... மாளிகை. கிட்டத்தட்ட நாயக்கர் மஹால் போல இருந்தது. சகஜமாக அதனுள் நுழைந்து ராம்குமார் அறைக்குள் நுழைந்தபோது அவன் ஏராளமான அபின் மயக்கத்தில் சேரிலேயே தலை தொங்கிக் கிடக்க அமர்ந்திருந்தான். எதிரில் டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் யாரும் பார்க்காத நிலையில் சுவர் ஈ ஒன்றுக்காக ஓடியபடி இருந்தது.

ஓர் ஈரத் துணியைக் கொண்டு வந்து அவன் முகத்தைத் துடைத்த சாருலதா, அவன் கண் திறக்கவும் மிக சகஜமாகப் பார்த்து கண் சிமிட்டினாள். அவனுக்கு அவளது செயல் பேரதிர்ச்சியாக இருந்தது.

"சா... சா... சாரு நீயா?"

"நானேதான் சார்."

"நா... நான் ஒரு தப்பும் பண்ணலை... நிஜமா நான் ஒரு தப்பும் பண்ணலை சாரு..."

"நான் இப்ப எதுவும் சொல்லலியே..."

"இல்ல... இப்ப நீ வந்துருக்கறத பார்த்தா...?"

"நியாயம் கேட்க நான் கண்ணகி இல்ல. உங்களை வளைச்சுப் பிடிக்க மாதவியும் இல்ல. நான் சாருலதா. நேற்றைய சம்பவம் என் வரைல ஒரு மோசமான அனுபவம். நானா விரும்பி வரலை. கெட்ட நேரம்னு சொல்வாங்களே அதுவோ என்னவோ... அதுக்காக நான்

அழவும் மாட்டேன்! கற்பு கத்திரிக்கான்னு புலம்பவும் மாட்டேன். கற்புங்கறது மனசுல இருக்கணும். உடம்புல யும் இருக்கணும். என் வரைலயும் நான் கற்போட நிச்சயமா இருப்பேன். அதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி உங்களைக் கேக்க மாட்டேன். பண்ணிக்கறேன்னு சொன்னா பாக்கியசாலின்னும் நினைக்க மாட்டேன். மொத்தத்துல என்னைப் புரிஞ்சுக் கறது ரொம்ப கஷ்டம் சார்...

எனிவே... என் வாழ்க்கைல முதலும் கடைசியுமான ஒரே ஆண் நீங்க மட்டும்தான். அது மட்டும் நிச்சயம். போகட்டும்... இப்படி டயலாக் பேச நான் வரலை. உங்க மூட நம்பிக்கையைப் பொய்யாக்க வந்துருக்கேன். இன்னிக்கு சனிக்கிழமை. என்கூட நீங்க கார்ல இந்த சிட்டியைச் சுத்தப் போறீங்க. எப்படி ஆக்சிடெண்ட் ஆகுதுங்கறதுக்குள்றதான் மற்ற எல்லாமே இருக்கு..."

"சாரு..."

"ப்ளீஸ்... எனக்கு கோ—ஆபரேட் பண்ணுங்க... எழுந்திருங்க. குளிச்சிட்டுக் கிளம்புங்க..."

"ஆக்சிடெண்ட்டைப் போய் டெஸ்ட் பண்றேங் கறியே. ஒருவேளை அதுல நாம இரண்டு பேருமே செத்துப் போயிட்டா...?"

"ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு ஒருவகைல தண்டனை. என்னையே இழந்த பிறகும் கொஞ்சமும் காட்டிக்காம இருக்கற எனக்கும் அது தண்டனையா இருந்துட்டுப் போகட்டுமே..."

"சாரு..."

"சும்மா சொன்னேன். பயப்படாம கிளம்புங்க. நீங்க வெளியே தெரியும்படி உட்கார்ந்தா போதும். நான் டிரைவ் பண்றேன். நிச்சயம் நமக்கு உயிர் போற அளவு



ஆக்சிடெண்ட் ஆகவே ஆகாது. அப்படி ஆயிட்டா எதிரியால எப்படி உங்ககிட்ட பணம் புடுங்க முடியும்?"

"என்ன சொல்றே சாரு... எனக்குப் புரியல..."

"இப்ப புரியாது. ஆனா இன்னிக்கு உங்களுக்குப் பல உண்மைகள் தெரிஞ்சிடும். அதுல நிச்சயமான ஒண்ணு— உங்களுக்கு எண்பது தொண்ணூறு வயசுங்கறது..."

"சாரு..."

"ப்ளீஸ் சார்... இன்னிக்கு ஒருநாள் என் பேச்சக் கேளுங்க ப்ளீஸ்..."

அவன் அதன்பின் பேசவில்லை; தயாரானான்.

அந்தப் பென்ஸ் கார் சென்னை நகரில் எல்லா விஸ்தாரமான வீதிகளிலும் புகுந்து புகுந்து போய்க் கொண்டிருந்தது. சாருதான் ஓட்டிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் அவன்... ஏனோ உம்மென்றிருந்தான். அவளிட மும் அப்படி ஓர் அமைதி. அதுவே அவனைக் குத்திக் கிழித்தபடி இருந்தது. 'எப்படி ஒரு பெண்ணால் இப்படி இருக்க முடியும்?' என்றுகூடத் தோன்றியது.

இன்றைய உலகம் பெண்களை அதிகமாகவே தைரியசாலி ஆக்கிவிட்டதாய்த் தோன்றியது. அதேசமயம் அதை ஜீரணிக்க முடியாதபடி ஒரு கோழையாய் ஆகி விட்டதும் அவனைக் குடைந்தது.

உட்லண்ட்சில் காலை டிபன், அடையார் பார்க்கில் மதியம் லஞ்ச்... மாலை நேரமோ மாமல்லபுரம் சாலையில்...

"ஆமா... சனிக்கிழமைல எப்படில்லாம் ஆக்சிடெண்ட் ஆகியிருக்கு...?"

அவள் அன்றைய மாலை வரை எதுவும் நடந்திராத நிலையில் மெல்ல வாய் திறந்தாள்.

"பெரும்பாலும் நைட் டைம்ல..."

"அதெல்லாம் எப்படி... பின்பக்கமாவா... முன் பக்கமாவா... இல்லை பக்கவாட்லயா?"

— அவள் கேள்வியோடு காரை ஒரு வளைவில் திருப்பியபோது சற்றும் எதிர்பாராதபடி ஒரு கார் அவளின் காரின் முன் மோதி, இப்படித்தான் என்பது போல கிறீச்சிட்டு நின்றது. அவளது முன் கண்ணாடி அப்படியே சுக்குநூறாக நொறுங்கிட அவளும் அவனும் தலைகுனிந்து கொண்டனர். இடித்தவனோ மளமள வென்று காரைப் பின்னுக்கு எடுத்து பக்கவாட்டில் புகுந்து தப்பிக்கப் பார்த்தான். அந்த நிலையிலும்கூட தாமதிக்க வில்லை. செல் நம்பரில் யாருடனோ பேசி அந்த நம்பரைச் சொன்னாள்!

அப்படியே காரைவிட்டு இறங்கியவள் ராம் குமாரையும் ஒரு வெற்றிப் புன்னகையோடு பார்த்தாள்.

"என்ன சாரு... சிரிக்கிறே...! இது சிரிக்கற நேரமா?" — அவன் கேட்டான்.

"நிச்சயமா... நான் ஜெயிக்கப் போறேன். அத நினைச்சுதான் சிரிக்கறேன்" என்றாள்.

"எனக்குப் புரியல..."

"போகப் போக புரியும்."

"இப்ப யாருக்கு போன் பண்ணே... போலீசுக்கா?"

"ஆமாம்... ட்ராஃபிக் சூப்ரெண்ட்டுக்கு..."

"ஒரு பிரயோஜனமும் இல்ல... சாரி சொல்லி இடிச்சவங்க கார் கண்ணாடியை ரிப்பேர் செஞ்சு தருவேன்னு சொல்வாங்க. அவ்வளவுதான்."

"அது முந்தி... இன்னிக்கு விஷயம் வேற..."



"நீ பேசறதப் பார்த்தா..."

"ஆக்சிடெண்ட் ஒரு திட்டமிட்ட செயல்."

"திட்டமிட்ட செயலா...? எனக்கு யார் எதிரிங்க...?"

"எதிரிதான் இதை செய்யணுமா? உங்க வெல்விஷர் கள்கூட செய்யலாமே?"

"என்ன உளர்ற...?"

"அப்பதானே நீங்க பயந்துகிட்டே இருப்பீங்க. அந்த வெல்விஷரும் தாயத்து, மையின்னு எதையாவது செய்து தந்து முக்காலணா பெறாத விஷயத்துக்கு மூணு லட்சம் நாலு லட்சம் பிடுங்க முடியும்?"

"நீ என் குருநாதரைச் சொல்றியா?"

"அவர் குருநாதர் இல்ல. எமகாதகர்..."

— அவள் சொல்ல, கச்சிதமாக செல்போனும் அழைக்க, காதைக் கொடுத்தாள்.

"அம்மா அந்த வண்டியைப் பிடிச்சிட்டோம். அர்ச்சனையும் ஆரம்பிச்சாச்சு. இடிச்சவன் கூலிக்கு மாரடிக்கறவன்தான். பத்து நிமிஷ அடிக்குத் தாங்க மாட்டான்."

"அப்ப ஒரு பதினைஞ்சு நிமிஷம் கழிச்சு போன் பண்ணா உண்மை தெரிஞ்சிடும். அப்படித்தானே சார்..."

"நிச்சயமா...?"

"நானே பண்றேன் சார்..."

செல்ஃபோனை ஆஃப் செய்தாள்.

மீண்டும் ஒரு சிரிப்பு சிரித்தாள்.

"என்ன சாரு... ஹிட் பண்ணவனைப் போலீஸ் பிடிச்சிடிச்சா...?"

"பிடிச்சது மட்டுமில்ல... அர்ச்சனை அபிஷேகம்னு எல்லாமே ஆரம்பமாயிடிச்சு..."

"அடி உதையா...?"

"ஏன் பதறுறீங்க...? உண்மை வெளியே வரும்போது பதறுங்க. அதுலதான் அர்த்தம் உண்டு."

— அவள் அவனை வார்த்தைக்கு வார்த்தை சீர் செய்தாள். சரியாக 15ஆவது நிமிடம் அவளை முந்திக் கொண்டது செல்ஃபோன்.

"மிஸ் சாரு... உங்க யூகம் ரொம்ப ரொம்ப சரி. அந்தப் பம்பாய்ச் சாமியார்தான் பணம் கொடுத்து இடிக்கச் சொல்லியிருக்காரு. உங்க ஜே.எம்.டி. மாதிரியே அவர் கிட்ட நிறைய பேர் மாட்டியிருக்காங்க... இந்த மாதிரி விஷயத்தை எல்லாம் பிசிறு தட்டாம கச்சிதமா நெட் ஒர்க் மாதிரி பண்ணியிருக்கான். ஒருத்தர்க்கு ஆக்சி டெண்ட்... ஒருத்தர் வீட்டுல தகடு புதைக்கறது... இன்னொருத்தர் வீட்ல பாம்பு விட்றது... ஆமை விட்றது... அதனால பயம், மன விவகாரம். இவற்றை செயற்கையா உருவாக்கி அதைத் தான் நீக்கறதுங்கறது அந்தச் சாமியார் பிளான்."

— மறுபக்கம் போலீஸ் அதிகாரி ஒருவர் சொல்வது ராம்குமார் காதிலும் விழுந்தது. லௌட் வாய்ஸில் செல்லை ஆன் செய்திருந்தாள்.

"தேங்க்யூ சார்... நீங்க அடுத்த கட்டத்துக்கு போங்க. நான் அப்புறமா எங்க எம்.டி.யோட வந்து உங்களைப் பார்க்கறேன்" என்ற பதிலோடு செல்போனை அணைத்தவள் ராம்குமாரை ஒரு மாதிரி பார்த்தாள். அவனுக்கு அவளைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது.

"இந்த கார் இங்கயே இருக்கட்டும். நான் ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குக் கிளம்பறேன். நீங்க ஒரு டாக்சி பிடிச்சுப் போங்க. தயவு செய்து இனி அபின் சாப்பிடறதை விடுங்க.



அதனால மனசு கெட்டுப் போய் என் மாதிரி பெண்களை விழுங்கற பாவத்தையும் என்னோட விட்ருங்க...

உங்க கம்பெனில ஆயிரக்கணக்கான பேர் வேலை பாக்கறாங்க. நீங்க அவங்களுக்கு சோறு போட்ற முதலாளி. கிட்டத்தட்ட கடவுள்.

கடவுள்ங்கறவர் நல்லவரா இல்லாட்டியும் கெட்டவரா இருக்கவே கூடாது. அப்புறம் மூடத்தனமான பயங்கள், அதனால தப்பு பண்ற முட்டாள்தனங்கள் நிச்சயம் இருக்கக் கூடாது.

ஒரு பெட்டிக் கடையை வெச்சு நடத்தி ஜெயிக்கவே பெரும்பாடுபட வேண்டியிருக்கு. ஒரு பெரிய நிறுவனத்தை உங்கப்பா நடத்தி உலகத்தையே ஜெயிச்சிட்டு வர்றார். அவருக்கு உதவலேன்னாலும் உபத்ரவம் செய்யாம இருங்க... ஏதோ என் மனசுல பட்டதைச் சொன்னேன். இனி உங்க கூடல்லாம் என்னால வேலை பார்க்க முடியாது. பார்த்தாலும் அது கையாலாகாத்தனமா போயிடும். வரேன்..."

— சாருலதா தீர்க்கமான பேச்சோடு ஆட்டோ ஸ்டாண்ட் நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அவனுக்குச் சவுக்கால் அடித்த மாதிரி இருந்தது. சில நொடி வரை அவளையே பார்த்தபடி நின்றவன் "சாரு... சாரு... நில்லு சாரு... ஐ ஆம் வெரி சாரி சாரு... நில்லு... என் தப்புக்கு நான் நிச்சயம் பரிகாரம் பண்ணிட்றேன் சாரு.... வெட்கத்தை விட்டுச் சொல்றேன். நீதான் என் மனைவி. நீ மறுத்தா நானும் காலம் பூரா இப்படியே இருந்துடுவேன்..."

— அவனது பலமான குரல் கேட்டு சாலையில் போவோர் வருவோர் கூட அவர்களைப் பார்த்தனர். அதற்குள் ஆட்டோ வந்தது. அவள் அதில் ஏறிக் கொள்ள, அவனும் ஓடிப்போய் ஏறினான்.

ஆட்டோ ஓடத் தொடங்கியது.

அவன் முதலில் அவளது கைகளைப் பற்றினான். அவள் வெளியே பார்த்துக் கொண்டே அவனைத் தவிர்த்தாள்.

சட்டென்று குனிந்து அவள் கால்களைப் பிடித்தான் அவன். அவளுக்குக் கூசியது.

"என்ன சார் இது... எழுந்திருங்க..." என்றாள். நிமிர்ந்த அவன் கண்களில் கண்ணீர். அவனது வேதனை இதயத்தில் இருந்து வருகிறது என்பது அவளுக்கும் புரிந்தது.

"ஒரு ஜே.எம்.டி. இப்படி எல்லாம் அழக்கூடாது" என்று அவன் கண்ணீரைத் துடைத்தாள். அவன் அப்படியே இழுத்து அணைத்தான். அவள் மறுப்பு சொல்லவில்லை.

ஆட்டோ டிரைவருக்கு ஒரு சினிமா பார்க்கிற மாதிரி இருந்தது. அவள் அவனை அணைத்த நிலையில் முதுகுப் பக்கமாக தன் விரலில் மின்னிய அந்த நீலக்கல் மோதிரத்தைப் பார்த்தாள்.

'எல்லாம் இது செய்யும் மாயமா...? இல்லை, இதை நம்பி மனம் செய்யும் மாயமா?' என்பது மட்டும் அவளுக்குப் புரியவில்லை.